வெளியீடு 23-3-99

Issued 23-3-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 11, 1998 - தொகுதி 51 - எண் 2

Monday the 11th May, 1998—Volume 51 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211,31'N98
N98·51·2
219096

**11-05-1998**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. கவன ஈர்ப்பு--

(அ) திருவில்லிபுத்தூர் பேயனாறு கரைகளில் விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை — 247-251

(ஆ) ஆரணி கைத்தறி, பட்டு நெசவாளர்கள் விசைத்தறியின் காரணமாக வேலை இழந்தமையும் துணித் தேக்கம் அடைந்துள்ள நிலையும் — 251-255

2. விதி 111-ன்கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை--

பணியாளர்கள் ஊதியம் குறித்து திருத்தம் — 255

3. அரசினர் தீர்மானம்--

கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு சம்பந்தமாக 23-4-1998 அன்று பேரவையில் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கை மீது விவாதம்

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 256-257,318, 320,355-381

திரு. ச. அழகிரி — 257-268

*டாக்டர் க. கிருஷ்ணசாமி — 268-277

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் — 277-286

*திரு. பி. வெங்கடசாமி — 287-292

*திரு. டி. மணி — 292-298


53-113—1

பக்கங்கள்

3. அரசினர் தீர்மானம்--தொடர்ச்சி

திரு. எஸ். திருநாவுக்கரசு 299-308

*திரு. லா. சந்தானம் 308-312

திரு. ஐ. கணேசன் 312-317

*திரு. இரா. தாமரைக்கனி 317-325

திரு. ம. அப்துல் லத்தீப் 325-337

*திரு. கே. சுப்பராயன் 337-348

திரு. சோ. பாலகிருஷ்ணன் 348-355

4. அறிவிப்பு--

வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் 15-5-1998 அன்று எடுத்துக் கொள்ளுதல்

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- 381

219096.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 28, வெகுதான்ய-திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 மே 11, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து."

நடைபெற்ற குற்றங்களை நடுநிலை தவறாமல் ஆராய்ந்தறிந்து மீண்டும் அவை நிகழாவண்ணம் அக்குற்றங்களுக்கேற்பத் தண்டனை கிடைக்கச் செய்வதே அரசின் கடமையாகும்.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. கவன ஈர்ப்பு

### (அ) திருவில்லிபுத்தூர் பேயனாறு கரைகளில் விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை விதி 55-ன்கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் ஈர்க்கின்றார்கள்.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிபுத்தூர், பேயனாறு கரைகளில் அரசாணைக்கு முரணாக விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்புகள் கொடுத்துள்ளதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

22-2-1973 நாளிட்ட அரசு ஆணை எண் 216 பிறப்பிக்கப்பட்ட பின் விவசாய மின் இணைப்பு எதுவும் தடை செய்யப்பட்ட பகுதியில் கொடுக்கப்படவில்லை. இணைப்பு எண் 393 மட்டும் கிணறு அமைந்துள்ள இடம் தடை செய்யப்பட்ட பகுதியில் உள்ளதா எனத் தெரியாத நிலையில் அரசு ஆணைக்குட்பட்டு பொதுப் பணித் துறையினரின் தடையில்லாச் சான்றிதழ் பேரிலும், ஆணையாளர்/நகராட்சி திருவில்லிபுத்தூர் அவர்களிடம் விவசாய மின் இணைப்பு கொடுப்பதால் நகராட்சி குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுமா என்று விளக்கம் கேட்டு அதற்கு அவர் மறுப்பு ஏதும் தெரிவிக்காத நிலையில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. எனவே, 22-2-1973 நாளிட்ட அரசு ஆணையை மீறி விவசாய மின் இணைப்பு எதுவும் பேயனாறு படுகையில் திருவில்லிபுத்தூர் நகருக்கு குடிநீர் வழங்கும் ஆழ்குழாய் கிணறுகளின் அருகே இணைக்கப்படவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் திருவில்லிபுத்தூர் நகராட்சி ஆட்சேபணை தெரிவிக்கவில்லையென்று சொல்லப்பட்டுள்ளது. எங்களுடைய நகராட்சியிலிருந்து ஏற்கெனவே ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி கமிஷனருடைய கடிதம் இருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் எழுதியிருக்கிறோம். அது சம்பந்தமான கடிதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். 1967-ஆம் ஆண்டு அரசாணை எண் 1106-ன் அடிப்படையில் புதிதாக கிணறுகள் தோண்டவோ, ஆழப்படுத்தவோ, விவசாய பம்பு செட்டுகளுக்கு





மின்னிணைப்புக் கொடுக்கவோ கூடாது என்று அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலும், அறிஞர் அண்ணா ஆட்சியிலும், கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலும், எம்.ஜி.ஆர். ஆட்சியிலும், புரட்சித் தலைவி ஜெயலலிதா ஆட்சியிலும் இந்த இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆனால், இப்போது அரசாணைக்குப் புறம்பாக 393 ஆம் எண் விவசாய பம்ப் செட்டுக்கு மின்னிணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் வரும்போது திருவில்லிபுத்தூர் நகரத்தின் ஜனத்தொகை 57,000 ஆக இருந்தது. ஆனால் இப்போது 1,10,000 ஆக உயர்ந்து இருக்கிறது. குடிநீர் ஆதாரம் வேறு எதுவும் இல்லாத காரணத்தினால், திருவில்லிபுத்தூர் நகராட்சி இதனால் மிகவும் பாதிக்கப்படும். ஆகவே, உங்களுடைய ஆட்சியில் இப்போது கொடுக்கப்பட்டுள்ள 393 ஆம் எண் மின்னிணைப்பு துண்டிக்கப்பட வேண்டும். அதுமட்டும் இல்லாமல் இதற்குத் தடையில்லாச் சான்றிதழ் வாங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய நகராட்சியிலிருந்து கொடுக்கவில்லை. P.W.D. செயலாளரிடமிருந்து, அரசாங்கத்திடமிருந்து, E.B. மற்றும் P.W.D. ஆகியவற்றின் மேல்மட்ட, கீழ்மட்ட அதிகாரிகளிடமிருந்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டும் அல்லாமல், மின்னிணைப்பு எண் 50, 51, 52, 70 போன்றவற்றிற்கும் மின்னிணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எங்களுக்குக் குடிநீர் பாதிப்பு ஏற்படுகிற காரணத்தினால் இந்த 393 ஆம் எண் விவசாய பம்பு செட்டுக்கான மின்னிணைப்பினை ரத்து செய்வதோடு மேலே சொல்லியுள்ள மின்னிணைப்புகளையும் ரத்து செய்வதற்கு நீங்கள் ஆணையிட்டால் எங்கள் பகுதியில் 2001 ஆம் ஆண்டானாலும் சரி, குடிநீர்ப் பிரச்சினையே வராது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு எங்களுடைய நகராட்சியிலிருந்து ஆட்சேபணை தெரிவித்துள்ள அந்த மின்னிணைப்பைத் துண்டிப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயிகள் கிணறுகளுக்கு

**மின்னிணைப்பு** வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில் ஆற்றோரம் கிணறுகள் அமையுமானால் அதற்குப் பொதுப் பணித் துறையிடமிருந்து ஒரு தடையில்லாச் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று இலாகா வற்புறுத்துகிறது. அந்த அடிப்படையிலே திருவில்லிபுத்தூரிலே இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட 393 ஆம் எண்ணுள்ள மின்னிணைப்பு கொடுப்பதற்கு முன்னாலேயே அவர் அப்படிப்பட்ட ஒரு சான்றிதழைப் பெற்று வந்திருக்கிறார். அதுமட்டும் அல்ல. திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இதிலே ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்று கேட்டு. ஆனால் அந்த இணைப்புக்கு நகராட்சி மறுப்பு ஏதும் தெரிவிக்காத காரணத்தினால் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் இப்போது நகராட்சி ஆட்சேபணை தெரிவித்திருப்பதாக இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். தவிர கடிதமும் எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நகராட்சி ஆட்சேபணை தெரிவித்திருக்குமானால் அதுபற்றி மின்சார வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சேபணை தெரிவித்திருக்கிறோம். இப்போதும் தீர்மானம் போட்டு 393 ஆம் எண்ணை ரத்து பண்ணுங்கள்; இன்னும் 50, 51, 73 போன்ற மின்ணிணைப்புக்களையும் ரத்து செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். மின் இணைப்பு துண்டிப்பு பண்ணுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். நகரசபைத் தலைவராக இருப்பதால், நானும் இதையே கோரிக்கையாக வைத்து மாண்புமிகு அமைச்சரவர்கள் பொது மக்கள் நலன் கருதி உத்தரவிட வேண்டும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது மக்கள் நன்மை கருதி, இந்த அரசாங்கத்தை பொறுத்தவரையிலே seniority அடிப்படையிலே மின் இணைப்பு விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சட்டதிட்டப்படிதான் மின் இணைப்பு கொடுக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இப்போது நகராட்சி மன்றம் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறது என்றும், தீர்மானம் போட்டிருப்பதாகவும்





சொல்கிறார்கள். அந்த விவரங்களை எல்லாம் அரசுக்குத் தருவாரேயானால் நிச்சயமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

### (ஆ) ஆரணி கைத்தறி பட்டு நெசவாளர்கள் விசைத்தறியின் காரணமாக வேலை இழந்தமையும் துணித் தேக்கம் அடைந்துள்ள நிலையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி-55-ன்கீழ் திரு. லா. சந்தானம் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றார்கள்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "ஆரணி பகுதியிலுள்ள கைத்தறி, பட்டு நெசவாளர்கள் விசைத்தறியின் காரணமாக வேலை இழந்து, உற்பத்தி செய்த துணி தேக்கம் அடைந்து பட்டினியால் வாடுகின்ற 60 ஆயிரம் பேரின் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கவன ஈர்ப்புக்கான அறிவிப்பு கொடுத்து அதற்குப் பதில் வந்தபிறகு, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முத்தரப்புக் கூட்டம் நடத்தி, சில முடிவுகளை எடுத்திருக்கின்றார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில்கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் தன் பதிலைச் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி பகுதியில் சுமார் 10,000 பட்டுத் தறிகள் உள்ளன. இதில் 3,845 தறிகள் கூட்டுறவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 12 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பகுதியில் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் உள்ள

3,845 மொத்த தறிகளில் 1,418 தறிகள் இயங்கி வருகின்றன. 31-3-1998 தேதியில் ரூ. 364.00 இலட்சம் மதிப்பிற்கு பட்டு ஜவுளிகள் இருப்பாக உள்ளன. இருப்பிலுள்ள சரக்குத் தேக்கத்தினை வெகுவாகக் குறைத்திட சங்கங்கள் இலாப சதவீதத்தைக் குறைத்து மாநில சங்கமான கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு சப்ளை செய்து இருப்பைக் குறைக்க சங்கங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஏப்ரல் 1997 முதல் மார்ச் 1998 வரையிலான காலத்தில் ரூ. 450.68 இலட்சம் மதிப்புள்ள (1.23 இலட்சம் மீட்டர்) பட்டுப் புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 466.10 இலட்சம் மதிப்புள்ள (1.36 இலட்சம் மீட்டர்) பட்டுப் புடவைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தற்போது இருப்பிலுள்ள சரக்குகளை விற்பனை செய்ய சங்கங்கள் வழக்கமாக வழங்கி வரும் 10 சதவிகித கமிஷனுடன் மேலும் 5 சதவிகிதம் சிறப்பு சங்க கமிஷன் வழங்கி, விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன் கோ-ஆப்டெக்ஸால் கொள்முதல் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தவிர, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சட்டப் பேரவையில் அறிவித்தவாறு நெசவாளர் பிரச்சினைகள் குறித்து ஆராய கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை செயலர் அவர்களை அமைப்பாளராகக் கொண்ட உயர் மட்டக் குழு அரசால் அமைக்கப்பட்டு 7-4-1998 அன்று காஞ்சிபுரத்திலும் 12-4-1998, 13-4-1998 ஆகிய நாட்களில் திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களிலும் 17-4-1998, 18-4-1998 ஆகிய நாட்களில் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் பிரதிநிதிகளையும் நெசவாளர்களையும் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தது. மேலும், மேற்கூறிய மாவட்டங்களில் தங்கள் கருத்துக்களை நேரில் வந்து தெரிவிக்க இயலாதவர்கள் 21-4-1998 அன்று கோ-ஆப்டெக்ஸ் அலுவலக் கூட்ட அரங்கில் நேரில் வந்து தங்கள் குறைகளைத் தெரிவிக்கவும் அல்லது எழுத்து மூலம் தெரிவிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. குழு மாநிலம் முழுவதும் நெசவாளர் குறைகளைக் கேட்டறிந்து உரிய பரிந்துரைகளை அரசுக்குத் தெரிவிக்க உள்ளது. பரிந்துரைகள் பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆரணி பகுதியில் தேக்கமடைந்துள்ள பட்டு இரகங்களை விற்பனை செய்ய தகுந்த நடவடிக்கைகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு





வருவதால் நெசவாளர்கள் பட்டினியால் வாழ வேண்டிய நிலை ஏற்படவில்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். அந்த அறிக்கையில், 12 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன; 3845 மொத்தத் தறிகளில் 1418 தறிகள்தான் இயங்குகின்றன. அப்படி இயங்கியும்கூட மூன்றில் 2 பங்கு தறிகள் இயங்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் 31-3-1998ஆம் தேதியில் 364 இலட்ச ரூபாய் மதிப்புள்ள ஜவுளிகள் தேங்கியிருப்பதாகவும், அதற்குப் பின்னால் அரசு நடவடிக்கை மூலமாக, கோ-ஆப்டெக்ஸ் சங்கங்களிலே அவற்றை வாங்கிக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும், தமிழக முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ள அந்தக் குழுவின் மூலமாக சில பரிந்துரைகளைப் பெற்று அதன் மூலமாகவும் நெசவாளர் சங்கப் பிரதிநிதிகளிடமிருந்து துணிகளை வாங்குவதற்கு ஆவன செய்யப்பட்டு இருப்பதாகவும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையின் மூலம் தேங்கிக் கிடக்கின்ற துணிகளை எப்போது வாங்கி அவர்களுக்கு நிறைவான நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதையும், மேலும் இயங்காமல் இருக்கின்ற மற்ற கைத்தறிகளை இயக்குவதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் மூலமாக அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணிப் பகுதியிலே 12 கூட்டுறவுச் சங்கங்களில் 3845 தறிகள் உள்ளன. இவற்றில் உற்பத்தியான சரக்குகள் 1997 ஏப்ரல் முதல் 1998 மார்ச் வரை ஏறத்தாழ 450.68 இலட்சம் மதிப்புள்ள பட்டுச் சேலைகள் விற்கப்பட்டு, அதன்மூலம் பளு சற்று குறைக்கப்பட்டது. அதுபோக, கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் மூலமும் அவர்களுடைய இலாபத்திலேயே ஒரு பகுதியான 10 சதவிகிதத்தைக் குறைத்து, அதிலே பிரச்சினை வந்தபோது, மீண்டும் 5 சதவிகித இலாபத்தைக் குறைத்து-- எந்த அளவிற்கு அன்றைய சூழ்நிலையிலே செய்ய முடியுமோ, அதையெல்லாம் நாம் செய்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் குழு அமைத்த பின்பு, அந்தக் குழு தமிழகமெங்கும் சென்று வந்த பின்பு, இந்த 10 சதவிகிதம், 5

சதவிகிதத்திற்குச் சம்பந்தம் இல்லாமல், அவர்களுக்கு 30 சதவிகிதத்தை, தேங்கிக் கிடக்கின்ற சரக்குகளுக்கு அளிப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள்.

இந்தக் கவன ஈர்ப்பிலே விசைத்தறிகளினால், எந்த அளவிற்குக் கைத்தறியிலே உருவாக்கப்பட்டிருக்கிற சேலைகள் தேக்கம் அடைந்திருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். கடந்த 1-4-1998 முதல் தமிழகத்திலே 5 இடங்களிலே கண்காணிப்புக் குழுக்கள் இதற்காக வைக்கப்பட்டிருக்கின்றன. இது தானாக அந்தப் பணியை ஒரு பக்கம் செய்து கொண்டிருந்தாலும், விவரம் தெரிந்தவர்கள் இப்படிப்பட்ட தவறு நடப்பதைச் சுட்டிக்காட்டியோ, தொலைபேசி மூலமாகவோ எனக்குத் தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுப்பதன் மூலம், அப்படிப்பட்ட தவறுகளை--விசைத் தறி உற்பத்தியை--செய்யாமல் பார்த்துக் கொள்கின்ற பணியை இனி செய்வதற்கு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9-.0

நிச்சயம் 30 சதவீதம் நாம் கொடுத்த காரணத்தாலே, ஆரணியிலே பட்டினுடைய தரத்தையும் ஜரிகையினுடயை தரத்தையும் இப்போது உயர்த்தி ஒரு தரமான நிலையை, 5 ஆண்டு காலத்திலே கெட்டுச் சீரழிந்து போன, தரமிழந்து போன அந்தச் சேலைகளை, இன்று பழைய நிலைக்கு ஆரணியினுடைய சேலை இருக்கிறது என்ற தரத்திற்கும் நாம் கொண்டு வந்துவிட்டோம். நிச்சயம் 30 சதவீதம் கொடுக்கின்றபோது, அங்கே தேக்கம் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்து, இந்த விளக்கமே போதும் என்று நினைத்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், தன்னுடைய விளக்கத்திலே இந்தத் துணி தேங்கியிருக்கின்ற நிலையை மாற்றி, அதை விற்பனை செய்வதற்கு ஆவன செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால், இயங்காமல் இருக்கின்ற தறிகளை இயக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைக் கூறத் தவறிவிட்டார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்துவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத்தின்போதுதான் அறிவித்து இருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. செயலிலே இருக்கின்ற நடவடிக்கையை, அன்றாடம் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவாகச் சொல்ல முடியாது. சற்றேறக்குறைய ஒரு மாத கால அளவிற்குள் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் ஒழுங்குபடுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. விதி 111-ன்கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை

### பணியாளர்கள் ஊதியம் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் ஒரு திருத்த அறிக்கையை அவைக்கு அளிக்க விரும்புகிறார். அவருக்கு நான் அனுமதி அளிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியத்தின்போது, ஓட்டுநர்கள் ரூ. 6152 பெறுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது 20 ஆண்டு பணியாற்றும் ஓட்டுநர் பெறும் ரூ. 5022.50 உடன், போனஸ், வசூல் ஊக்கத் தொகை, உற்பத்தித் திறன் ஊக்கத்தொகை, சலுகை விலை உணவு போன்ற பணப் பயன்கள் சுமார் 1100 முதல் 1200 வரை சேர்த்துச் சொல்லப்பட்ட தொகையாகும். அதேபோல, நடத்துநர் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கான ஊதியம் ரூ.6122 என்று சொல்லியிருப்பது, 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள், பணப் பயன்களோடு கணக்கிடப்பட்டு, பெறும் தொகை ஆகும். அதிகாரிகள் செய்த சில கணக்குப் பிழையினால், கடைநிலை ஊழியர்கள் மற்றும் இளநிலை எழுத்தர்களின் ஆரம்பகால ஊதியம்கூட முறையே ரூ.6057 என்றும், 6172 என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது முறையே அவர்களுடைய பணப் பயன்களோடு சேர்த்து ரூ. 4885 என்றும், ரூ. 5005 என்றும் இருந்திடல் வேண்டும். மேலும் ஓட்டுநர்களின் ஆரம்ப ஊதியம் பணப் பயன்களோடு, ரூ.4982 என்றும், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் நடத்துநர்களின் ஊதியம் பணப் பயன்களோடு ரூ. 4950 என்றும் இருந்திடல் வேண்டும்.

## 3. அரசினர் தீர்மானம்

### கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு சம்பந்தமாக 23-4-1998 அன்று பேரவையில் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கைமீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் தீர்மானம். கோவை குண்டு வெடிப்பு சம்பந்தமான அரசின் வெள்ளை அறிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"23-4-1998 அன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு சம்பந்தமான அரசின் வெள்ளை அறிக்கை @ விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள், தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துரைக்க இருக்கின்றார்கள். இறுதியில் நான் என்னுடைய விளக்கங்கள் சிலவற்றையும் இந்த அவையில் எடுத்துக்கூற இருக்கின்றேன். நான் இந்த வெள்ளை அறிக்கையை இந்த அவையிலே 23 ஆம் தேதி அன்று வைத்தபோது, அதிலே ஒன்றைக் குறிப்பிட்டு இருக்கின்றேன். 16-வது பகுதியில், 3-வது பிரிவில், "காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணைக் குழு திறம்பட புலன் விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கைது செய்ததோடு, சதியை அம்பலப்படுத்தக்கூடிய மிகப் பயனுள்ள சாட்சியங்களையும் சேகரித்துள்ளது" என்று குறிப்பிட்டு இருக்கின்றேன். இன்று இந்த விவாதத்தின் இறுதியிலே, அந்தப் பயனுள்ள சாட்சியங்கள், அம்பலப்படுத்தப்பட்ட சதி,

@ 383 ஆம் பக்கத்தில் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது.



இவற்றைப் பற்றி, இந்தப் புலனாய்வுப் பிரிவு நடத்தியுள்ள விசாரணையின் மூலம் இதுவரையிலே கிடைத்துள்ள தகவல்களை இந்த அவையிலே வைப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று கருதி, அவற்றை எல்லாம் என்னுடைய உரையில் எடுத்துக் கூறுவேன் என்று குறிப்பிட்டு, இந்த அளவில் என்னுடைய முன்னுரையை நிறைவு செய்கிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித நெஞ்சங்களைக் குலுக்கக் கூடிய அளவில் கோவையிலே நடைபெற்ற குண்டு வெடிப்பின் காரணமாக அகில உலகமும் தமிழகத்தைப் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை சில மாதங்களுக்கு முன்பு இங்கு நடைபெற்றதை நாம் அறிவோம். அதைப் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் ஏராளமாக ஏற்பட்டு, அதற்கு விளக்கமாகப் பதில் சொல்லவேண்டுமென்பதற்காக ஒரு வெள்ளை அறிக்கை, தமிழக சட்டப்பேரவையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிறது. இயன்றவரை, அந்த வெள்ளை அறிக்கை அங்கு நடைபெற்ற சாதக பாதக நிகழ்வுகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறது என்றே தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பொதுவாக, சில விஷயங்கள் மறைக்கப்படுவதும், சில விஷயங்கள் அதிகப்படுத்திச் சொல்லப்படுவதும் கடந்த காலங்களிலே வெள்ளை அறிக்கைகளிலே வந்திருக்கின்றன. ஆனால் இந்த நிகழ்வைப் பொறுத்தவரையில் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிற காவல் துறையேகூட சில நிகழ்வுகளில் எவ்வாறு மெத்தனமாக இருந்தார்கள், அதற்காக அவர்களுக்கு அளிக்கப்பட இருக்கின்ற தண்டனைகள் எத்தகையன என்பதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பாராட்டப்பட வேண்டியது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறன்.

இந்த வெள்ளை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது அது வெறுமனே சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக மட்டும் தமிழகத்திலே இல்லை. ஒரு மாபெரும் அரசியல் பிரச்சினையாகவும் இன்றைக்கு உருப்பெற்றிருக்கிறது. மத்தியிலே ஒரு புதிய அரசாங்கம் ஏற்பட்டு, தமிழகத்திலே இருக்கிற எதிர்க்கட்சிகள் அந்த மத்திய அரசாங்கத்திலே அங்கம் வகித்த பிறகு, கோவை கலவரங்களைக் காரணமாகக் காட்டி, இந்த அரசாங்கத்தைக் கலைக்க முடியுமா என்பதனைக் கூட இந்த கோவை நிகழ்ச்சிகளுக்குப் பின்னனியிலே அவர்கள் கொண்டு வருவதை நம்மால் காண முடிகிறது. எனவே வெறும் மதப் பிரச்சினை அல்லது சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்பதற்கு மேலாக அரசியல் பிரச்சினையும் இதிலே அதிகமாக இருக்கிறது. அதுவும் சுயநல அரசியல் என்பது இப்பிரச்சினையிலே கொடிகட்டிப் பறக்கிறது என்பதனை நாம் இந்த நேரத்திலே உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம்.

நான் இந்த நிகழ்ச்சியினுடையை உள்ளார்ந்த பகுதிகளுக்குச் செல்வதற்கு முன்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வெள்ளை அறிக்கை இரண்டு வகையிலே இருக்கிறது. ஒன்று, என்ன நடந்தது என்பதைப் பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். காவல்துறை எதைச் செய்யாமல் விட்டு இருக்கிறார்கள் என்பதையும் ஓரளவிற்குச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவதாக இந்த மதக் கலவரங்களுக்குக் காரணம் யார்? எந்தக் காலத்திலிருந்து இந்த வெடிகுண்டுக் கலாச்சாரம் தமிழகத்திலே தொடங்கியது என்பதைப் பற்றியும் ஓரளவிற்குச் சொல்லியிருக்கிறார்கள். 1992 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகுதான் அமைதியாக இருந்த தமிழகத்திலே இஸ்லாமியர்களின் ஒரு பிரிவினர் வன்முறை ஆயுதத்தைத் தங்களுடைய கையிலே எடுத்துக்கொண்டார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஆனால் பாரதிய ஜனதாவைச் சார்ந்தவர்கள் இதற்கு முன்பாகச் சென்று பார்க்க வேண்டும்; மீனாட்சிபுரத்தில் மதமாற்றம் ஏற்பட்டதிலேயிருந்து வன்முறைக் கலாச்சாரம் தமிழகத்தில் தோன்றியிருக்கிறது; எனவே இந்த நிலைப்பாட்டிலிருந்து நீங்கள் வரவேண்டுமென்று பாரதிய ஜனதா கட்சியும், இந்து முன்னணியும் கூறிவருகிறார்கள். இது ஒரு விவாதத்திற்குரிய பிரச்சினை. ஆனாலும்கூட, வெள்ளை அறிக்கையையொட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



*1992* ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் வெடிகுண்டுக் கலாச்சாரம் தமிழகத்திலே பரவியது என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு, இங்கு இருக்கிற இஸ்லாமியர்களின் மனதிலே அது ஒரு மிகப் பெரிய வேதனையை ஏற்படுத்தியது. சிந்திக்க முடியாத இஸ்லாமியர்கள், வெகுண்டு எழக் கூடியவர்கள், எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள், என்ற வகையில் அதிலே இருக்கிற ஒரு சிலர் தீவிரவாதத்தைக் கையிலே எடுத்துக் கொண்டார்கள். அதனுடைய தொடர்ச்சியாக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சி செய்த காலத்திலே பல்வேறுவிதமான வன்முறைக் கலாச்சாரங்கள் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 9-50*

உதாரணமாக, அப்போது பாரதிய ஜனதா கட்சியினுடைய சிக்கந்தர் பக்த் அவர்கள் தலைமையிலே வந்த குழு ஒரு அறிக்கையிலே சொல்லியிருக்கிறது. அப்படிப் பார்க்கிறபொழுது 1983 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரை 18 நிகழ்வுகள்-- வெடிகுண்டுக் கலாச்சாரம், வெடிகுண்டு வைப்பது அல்லது குத்திக் கொல்வது, வன்முறையைப் பரப்புவது, உயிர்ப் பலியை ஏற்படுத்துவது என்று 18 நிகழ்வுகள்-- நடைபெற்றிருக்கின்றன. இந்த 18 நிகழ்வுகளுமே ஏறக்குறைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த காலங்களிலேயேதான் நிகழ்ந்து இருக்கின்றன, ஒன்றிரண்டைத் தவிர. எனவே, அதனைப் பார்க்கிறபொழுது, ஏதோ இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் வெடிகுண்டுக் கலாச்சாரம் வந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. இது 1992-லிருந்தே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதற்கான சான்றுகள் இங்கே இருக்கின்றன. சிக்கந்தர் பக்த் அவர்கள். அவர்களுடைய அறிக்கையிலே கூறியிருக்கிறார். இந்த அல் உம்மா இயக்கத்தைப் பற்றிச் சொல்கிறபோது "Their activities are known to the Government and the Police. They enjoy the support of the various political parties including some ruling AIADMK leaders" என்று சொல்லியிருக்கிறார். யார் சொல்லியிருக்கிறார்கள்? இன்றைக்கு பாரதிய ஜனதா கட்சியும், எந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து மத்திய அரசாங்கத்தை நடத்துகிறதோ, எந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அல் உம்மா இயக்கம்

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் வளர்ந்து இருக்கிறது என்று சொல்லி, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூறி 356-வது பிரிவைப் பயன்படுத்தி இந்த அரசாங்கத்தைக் கலைக்க வேண்டுமென்று சொல்கிறதோ, அந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே ஆட்சி செய்தபோது அல் உம்மா இயக்கம் எவ்வாறு வலுவடைந்தது என்பதனை பாரதிய ஜனதா கட்சியினுடைய அறிக்கை தெளிவாகக் கூறியிருக்கிறது. எனவே, இதனைப் பார்க்கும்போது, மதத் தீவிரவாதம், மத வன்முறைவாதம் என்பது ஏதோ இந்தக் காலத்திலே மட்டும் நடைபெற்றுவிடவில்லை, அது தொடர்ந்து தமிழகத்திலே 10, 15 ஆண்டு காலமாக இருக்கிறது என்பதனை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, நம்முடைய அரசியல் கட்சியினுடைய கடமை, இந்த அரசாங்கத்தினுடைய கடமை, மதவாதத்தினை வெறுமனே ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதாமல், ஒரு சமுதாயப் பிரச்சினையாகக் கருதி அதிலே அரசியல் வண்ணம் பூசாமல் அந்தப் பிரச்சினையை நாம் இரும்புக்கரம் கொண்டு அடக்குவோமேயானால், தமிழகத்திலே மீண்டும் அமைதியான ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதனை தமிழ் மாநிலச் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அவ்வாறு நிகழ்ந்ததா என்றால், அவ்வாறு நிகழவில்லை. இந்துத் தீவிரவாத அமைப்புகள் எப்போதெல்லாம் இஸ்லாமியர்களுக்கெதிராகக் கூக்குரலை எழுப்பியிருக்கின்றனவோ; அதேபோல இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் எல்லாம் எப்போது இந்து மதத்திற்கு எதிராகக் கூக்குரலை எழுப்பியிருக்கின்றனவோ அப்போதெல்லாம் அரசாங்கம் என்பது மெத்தனமாக இருந்திருக்கிறது. முறையாகச் செயல்படவில்லை. இதுதான் கடந்த கால வரலாறு நமக்குக் காட்டுகிறது. காரணம் என்னவென்றால், மதத் தீவிரவாதிகளுக்கு எதிராகக் காவல் துறையோ, அரசாங்கமோ செயல்பட்டால் வாக்கு வங்கி பாதிக்கப்படக்கூடும் என்ற ஒரு உள்ளார்ந்த பயம். அரசியல் பேராண்மை இல்லாத காரணத்தினால், மதத் தீவிரவாதத்தை அரவணைத்துச் செல்லக்கூடிய ஓர் அறியாமை தமிழகத்தில் 10, 15 ஆண்டு காலமாக இருந்து வந்திருக்கிறது. எனவே, அந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டும் என்றால், மதத் தீவிரவாதம் எப்போதெல்லாம் தலைதூக்குகிறதோ, அப்போதெல்லாம் அவர்களுக்கெதிரான ஒரு அடக்குமுறையைக் கையாள்வதில் காவல் துறை தன்னிச்சையாகச் செயல்படக்கூடிய





ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ளை அறிக்கையிலே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கோவை குண்டு வெடிப்பிற்குப் பிறகு இரண்டு மணி நேரத்திலேயே அல்-உம்மா இயக்கம் தடை செய்யப்பட்டது. ஜிகாத் கமிட்டி தடை செய்யப்பட்டது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்; இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் போதாது. அதேபோல, இந்து தீவிரவாத அமைப்புகளையும் தடை செய்வதற்கான ஒரு சூழ்நிலையை நீங்கள் கொண்டுவர வேண்டும், அதிலே காலம் கடத்தக்கூடாது. எப்படி இஸ்லாம் தீவிரவாத அமைப்புகளைத் தடை செய்கிறோமோ அதேபோல் இந்து தீவிரவாத அமைப்புகளையும் நாம் கண்டிப்பாகத் தடை செய்ய வேண்டும். தயவு தாட்சண்யம் இல்லாமல் தடை செய்ய வேண்டும். நாம் அதிலே அப்படிச் செய்வோமேயானால் அவர்கள் வேரறுக்கப்படுவார்கள் என்பதனை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது ஜிகாத் கமிட்டியும், அல்-உம்மா இயக்கமும் தடை செய்யப்பட்டு இருப்பதைக் கொஞ்சம் நாம் முன்கூட்டியே முடிவு செய்து, கோவை குண்டு வெடிப்பிற்கு முன்பாகவே இதனை நாம் செய்து இருப்போமேயானால், இந்த மாபெரும் மனித உயிர்களுடைய இழப்பை தவிர்த்திருக்க முடியும். ஆனால் அப்பொழுது நம்மால் அவ்வாறு செய்ய இயலாமல் போனது ஏன் என்பதனை ஒரு கேள்விக்குறியாக நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

தமிழகக் காவல் துறையைப் பொறுத்தவரை கோவை குண்டு வெடிப்பிற்குப் பிறகு அசுர பலத்திலே அவர்கள் செயல்பட்டார்கள். நம்முடைய காவல் துறை அதிகாரிகளுக்கு இந்தப் பலமும் இந்தச் சக்தியும் எங்கிருந்து வந்தது என்று நாம் வியக்கக்கூடிய வகையில் அவர்களுடைய செயல்பாடு இருந்தது. உலகமே பார்த்து வியந்தது. பாரதிய ஜனதா அரசாங்கம் கூட ஓரளவுக்கு அதைப் பாராட்டினார்கள். அமைதி திரும்பியிருப்பதாகச் சொன்னார்கள்.

[திரு. ச. அழகிரி] [1998 மே 11

ஆனால் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்க ஆசைப்படுகிறேன். இவ்வளவு திறமை மிகுந்த காவல் துறை இந்த கோவை குண்டு வெடிப்பிற்கு முன்பு ஏன் செயல்படாமல் இருந்தது என்பதுதான் பல பேருக்குத் தெரியாமல் இருக்கின்ற ஒரு கேள்வி. அதற்கான விடையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவிக்க வேண்டும். காரணம் என்னவென்றால் இன்றைக்கு இந்த அரசாங்கத்திற்கு எதிராக இருக்கின்ற சக்திகள் ஏதோ இஸ்லாமியருடைய ஓட்டு வங்கிக்காக அவர்களுடைய ஆதரவிற்காகத் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இஸ்லாமியத் தீவிரவாதிகளுடைய வன்முறையைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது, பாராமுகமாக இருந்தது; அவர்கள் வன்முறையைச் செய்கிறபோது காவல் துறையினுடைய கை கட்டப்பட்டு இருந்தது என்பதைப்போன்ற ஒரு தவறான பிரச்சாரத்தைத் தமிழகத்திலே செய்து வருகிறார்கள். அது உண்மையா இல்லையா? அரசாங்கம் அப்படி நடந்து கொண்டதா? காவல் துறையினுடைய கைகள் கட்டப்பட்டு இருந்தனவா? அல்லது காவல் துறை சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டும்கூட காவல் துறை செயல்படாமல் இருந்ததா? அப்படி அவர்கள் செயல்படாமல் இருந்தால் காவல் துறையின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனை அரசாங்கம் இங்கே அறிவிக்க வேண்டும்.

ஒரு காவலர் குத்திக் கொலை செய்யப்படுகிறார். அதற்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சி. 3 இஸ்லாமியத் தீவிரவாதிகள் ஒரு ஸ்கூட்டரிலே வருகிறார்கள். அங்கே இருக்கிற காவலர் அவர்களைத் தடுத்து நிறுத்தி நீங்கள் இவ்வாறு வரக்கூடாது என்று சொல்லி அவர்களைக் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார். காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற 30 நிமிடத்திலே அன்சாரி என்கிற அல்-உம்மா தீவிரவாதி அங்கே வந்து "நீ அழைத்து வந்திருக்கின்ற இந்த 3 பேரும் அல்-உம்மா இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்பது உனக்குத் தெரியாதா? அவர்கள் தங்களை அல்-உம்மா என்று சொல்லியும்கூட நீ அவர்களை அழைத்து வந்திருக்கிறாய் என்றால் உனக்கு என்ன தைரியம்" என்று அங்கே பொறுப்பிலே இருந்த காவல் துறை அதிகாரியைப் பார்த்து அந்த அன்சாரி கேட்டிருக்கிறார். அதற்கு பொறுப்பிலே இருந்த காவல் துறை அதிகாரி, "தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அழைத்து வரவேண்டியது என்னுடைய கடமை. நான் என்னுடைய கட்டுப்பாட்டிலே வைத்திருக்கிறேன்" என்று சொன்னபொழுது "இதற்கான தண்டனையை இன்னும் சில மணி நேரங்களிலே நீ அனுபவிப்பாய்" என்று சொல்லி அந்த அன்சாரி வெளியே சென்று தீவிரவாதிகளை ஒன்று திரட்டி வந்து அன்றைக்கு ஒரு பெரிய வன்முறை நிகழ்ந்திருக்கிறது. அந்தக் காவலர் செல்வராஜ் கொலை செய்யப்பட்டிருக்கிறார். நான் காவல் துறைத் தலைவரைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன். அந்த அன்சாரியை இதுவரை அரசாங்கம் கைது செய்யவில்லை. காவல் துறை கைது செய்யவில்லை. அன்சாரியைக் கைது செய்ய வேண்டும் என்று செல்வராஜ் என்ற காவலர் கொலை செய்யப்பட்ட சில மணித் துளிகளிலேயே அங்கே ஒரு கோரிக்கை எழுந்தபோது அன்சாரியைக் கைது செய்வதற்குப் போதிய முகாந்திரம் என்னிடம் இல்லை. எனவே அவரைக் கைது செய்ய முடியாது என்று உயர் போலீஸ் துறை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? வன்முறைக்கு யார் வித்தாக இருக்கிறாரோ, வன்முறையைத் தூண்டக்கூடியவராக யார் இருக்கிறாரோ-- அவர் ஒரு பெரிய தாதாவாக அங்கே செயல்படக்கூடியவர் அன்சாரி என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தும்கூட காவல் துறை அவர் மீது கை வைக்கத் தயங்குகிறது என்றால் அதற்கு என்ன காரணம் என்று நமக்குத் தெரிய வேண்டும்.



1998 மே 11] [திரு. ச. அழகிரி]

காவல் துறையிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. அவர்கள் செயல்பட முடியாத சூழ்நிலை வெறும் அரசியல் காரணங்களினால் மட்டும் அல்ல. அந்த வன்முறைத் தீவிரவாதிகளுக்கும் காவல் துறையில் பணியாற்றுகிற அதிகாரிகளுக்கும் கொடுக்கல் வாங்கல் இருக்கிறது. ஒரு நாளைக்கு 50,000 ரூபாயை அங்கே இருக்கிற அல்-உம்மா இயக்கத்தினர் வசூல் செய்கிறார்கள். ஒரு கடைக்கு 5 ரூபாய். பிளாட்பாரத்திலே கடை வைத்திருக்கிறவர்கள் தினம் 5 ரூபாய் கொடுக்க வேண்டும். 10,000 கடைகள் இருக்கின்றன. ஒரு நாளைக்கு 50,000 ரூபாய் வசூலாகிறது. இந்த 50,000 ரூபாயை வசூல் செய்வதற்கு அவர்களுக்கு ஒரு படை தேவைப்படுகிறது. எனவே அல்-உம்மா என்ற பெயரிலேதான் அந்தப் படை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு அந்தப் பணம் பல்வேறு தீய காரியங்களுக்குச் செல்கிறது. பணம் கையிலே இருப்பதனாலே அவர்களுக்குக் கட்டுக்கோப்பு இருக்கிறது. அதன் பிறகு அதனைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் மதத்தை இழுக்கிறார்கள்.

[திரு. ச. அழகிரி] [1998 மே 11

முற்பகல் 10-00

இன்னொரு பக்கம் இந்து முன்னணி இதைப் பார்க்கிறார்கள். சரி, அவர்கள் 10 ஆயிரம் கடைகளில் வசூல் செய்கிறபோது நாம் செய்யக்கூடாதா; எனவே, இந்துக்களை அழைத்து நீங்களும் பிளாட்பாரத்தில் கடைகளைப் போடுங்கள் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் 5 ரூபாய் வசூல் செய்கிறார்கள். அதை வசூல் செய்வதற்கு ஒரு படை அமைக்கப்படுகிறது. அப்படித்தான் அங்கே தீவிரவாதம் வளர்கிறது. நான் கேட்கிறேன்; அங்கே இருக்கிற காவல் துறை, சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டக்கூடியவர்கள், இதனைத் தடை செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? ஏதோ 5 ரூபாய் மாமூல் விஷயம் என்று இதை விட்டுவிட முடியுமா? இந்த 5 ரூபாய் மாமூல் விஷயம்தான் இப்போது நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். ஏதோ காவல் துறையும் மாமூலும் பிரிக்க முடியாத இரண்டு பிறவிகள் என்ற ஒரு சூழ்நிலையை நாம் மாற்ற வேண்டும். அந்தச் சூழ்நிலையை மாற்றி காவல் துறை மீண்டும் மிடுக்காகச் செயல்பட்டால்தான் இதுபோன்ற நிகழ்வுகளை நம்மால் மாற்ற முடியும் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், 2 மதங்களில் இருக்கின்ற சிலர் இந்தத் தீவிரவாதத்திற்கு எதிராக இருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். கோட்டைமேடு பகுதியில் அமீர் என்ற ஒருவர், அவர் இந்த அல்-உம்மா இயக்கத்தைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். "நீங்கள் செய்வது சரியல்ல; வன்முறையைக் கையாளுகிறீர்கள். தேவையில்லாமல் குழப்பத்தை ஏற்படுத்துகிறீர்கள்; எனவே இது தவறு. அதுமட்டுமல்லாமல் தவறு செய்கிறவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மசூதிகளுக்கு வரக்கூடாது. மசூதிக்கு வந்தால் உங்களுக்கு நான் பாதுகாப்புத் தரமாட்டேன்" என்று கோட்டைமேடுப் பகுதியைச் சேர்ந்த அமீர் சொல்லியிருக்கிறார். அவர் அப்படிச் சொன்னதற்காக அல்-உம்மா இயக்கத்தினர் அமீரைக் குத்திக் கொன்று இருக்கிறார்கள். அமீரைக் குத்திக் கொன்றார்களே அவர்கள் மீது காவல் துறை என்ன நடவடிக்கை எடுத்தது? அமீரைக் குத்திக் கொன்ற அல்-உம்மா தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? காவல் துறைக்கும் தீவிரவாதிகளுக்கும் ஒரு உடன்பாடு இருக்கிறது. நான் கேஸ் கொடுக்க வேண்டும், முதலமைச்சருக்கு நான் ரிப்போர்ட் தர வேண்டும். எனவே



1998 மே 11] [திரு. ச. அழகிரி]

யாராவது 4 குற்றவாளிகளைக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படையுங்கள் என்று சமரசம் செய்து கொள்கிறார்கள். உடனே அல்-உம்மா இயக்கமோ-- அல்லது இந்து முன்னணியோ உண்மையான குற்றவாளிகளைத் தப்ப விட்டுவிட்டு அப்பாவிகள் 4 பேரைப் பிடித்துக்கொண்டு வந்து அவர்களைக் காவல் துறையிடம் ஒப்படைக்கிறார்கள். அதன் பிறகு அந்த வழக்கு வெற்றி பெறுவது கிடையாது. ஏன் என்றால் போதிய ஆதாரங்கள் இல்லாமல், போதிய சாட்சிகள் இல்லாமல் அந்த வழக்கு வெற்றி பெறாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே இப்படித்தான் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது.

நான் முடிப்பதற்கு முன்பாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன். இது வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை மட்டும் அல்ல, அதிலே சமுதாயப் பிரச்சினையும் அடங்கியிருக்கிறது. பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். மீனாட்சிபுரத்திலிருந்து இந்தப் பார்வையைப் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன், ஏன் நீங்கள் மீனாட்சிபுரத்தைப் பார்த்து அஞ்சுகிறீர்கள். இந்து மதத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிற பாரதிய ஜனதா கட்சியினர் மீனாட்சிபுரத்தைப் பார்த்து அஞ்சுவதற்கு என்ன காரணம்? மீனாட்சிபுரத்திலே இருந்த ஆதி திராவிடர்கள் இஸ்லாமிய மதத்திற்கு மாறினார்கள். எதற்காக அவர்கள் மதம் மாறியிருக்கிறார்கள்? சொந்த நாட்டில், சொந்த மண்ணில் அவர்கள் மூன்றாம் தரக் குடிமக்களாக நடத்தப்பட்டு இருக்கிற காரணத்தால். காலம் எல்லாம் உழைத்து ஊருக்குக் கொடுத்துவிட்டு, ஊருக்கு ஒதுக்குப்புறமாக வாழவேண்டிய ஒரு சூழ்நிலை தன்னுடைய மதத்தில் இருக்கிற காரணத்தால், என்னை யார் மதிக்கிறார்களோ, நான் அந்த இடத்திற்குச் செல்கிறேன் என்று ஒரு மனிதன் சொன்னால் அது தவறு ஆகுமா? இஸ்லாமிய மதம் தீண்டாமையைக் கைவிட்டு விடுகிறது. தீண்டாமையை அது பொருட்படுத்தவில்லை. தீண்டாமையைப் பொருட்படுத்தாமல், தீண்டத்தகாதவர்கள் என்று இந்து மதத்தால் சொல்லப்படுகின்றவர்களை அது அரவணைத்துக் கொள்கிறது என்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அந்த இடத்திற்குச் செல்வதை யாரும் தடுக்க முடியாது. எனவே, நாம் அந்த இடத்திற்குச் செல்லக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமியைப் பார்த்துத் தடை சொல்வதற்கு, பாரதிய ஜனதா கட்சிக்கு அருகதை இல்லை என்பதை மட்டும்

[திரு. ச. அழகிரி] [1998 மே 11

நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மக்கள் நம்மோடு வாழவேண்டும் என்று நாம் விரும்பினால் அவர்களுக்குச் சமத்துவத்தை நாம் தரவேண்டும். நீ என்னோடு இருக்க வேண்டும். ஆனால் நீ என்னோடு அடிமையாகத்தான் இருக்க வேண்டும் என்று நாம் சட்டம் போட்டால் அதனை யார் ஏற்றுக்கொள்ள முடியும்? எனவே, பாரதிய ஜனதா கட்சி நண்பர்கள் அதை உணர்ந்து பார்க்கவேண்டும். எனவே, இந்தச் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்பதற்கு மீனாட்சிபுரத்திலிருந்து மட்டும் அல்ல; சமத்துவத்திலிருந்து தீர்வு வர வேண்டும்.

இப்போது ஒரு மதத் தலைவர் விதவைப் பெண்களைப் பார்த்து அவர்கள் எல்லாம் தரிசு நிலங்களுக்குச் சமமானவர்கள் என்று சொல்லியிருப்பதாக நான் பத்திரிகையில் பார்த்தேன். அது எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை. தரிசு நிலம் என்றால் என்ன பொருள்? தரிசு நிலத்திலே தண்ணீர் பாய்ச்ச முடியாது. தரிசு நிலம் என்பது, எந்த மாடு வேண்டுமானாலும் வந்து மேயக்கூடிய இடம். இதுதானே அதற்குப் பொருள்? "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்". என்று பாரதியார் பாடினார். எனவே, அதைப் போல மாதர்களைப் பாராட்ட வேண்டிய, மாதர்களைப் போற்றிப் புகழ வேண்டிய, மாதர்களைத் தூக்கி நிறுத்த வேண்டிய இந்து சமயம், கைம்பெண்களைப் பார்த்துத் தரிசு நிலம் என்று சொன்னால், அதற்குப் பிறகு எப்படி அந்த மதத்தை நம்மால் காப்பாற்ற முடியும்? எனவே, இந்தச் சூழ்நிலைகளை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். எனவே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் காரணம் நம்முடைய மதத்திலே இருக்கின்ற குறைபாடுகள், நம்முடைய மதத்திலே இருக்கின்ற சிறுமைகள், இவற்றை நாம் சரி செய்வோமேயானால், இந்தப் பிரச்சினைகள் குறையும் என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-05*

முடிப்பதற்கு முன்பாக ஒன்றைக் கூற விருப்பப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரிலே காவல் துறையினருடைய செயல்பாட்டிற்காகப் பாராட்டுத் தெரிவித்து, எல்லாக் காவல் துறை அதிகாரிகளுக்கும் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் என அன்பளிப்பு தந்தார்கள். இது வரவேற்கக்கூடிய ஒன்றுதான். இதுபற்றி வெளியே ஒரு விமர்சனம் எழுந்தது.



[திரு. ச. அழகிரி]

1998 மே 11]

கடமையைச் செய்வதற்காகப் பரிசா? இது பரிசா அல்லது லஞ்சமா என்றுகூடச் சில பேர் வினா எழுப்பினார்கள். சில இஸ்லாமிய சகோதரர்கள்கூட, அப்பாவி இஸ்லாமியச் சகோதரர்களையெல்லாம் காவல் துறையினர் தாக்கியிருக்கிறார்கள். எனவே ஆயிரம் ரூபாய் கொடுப்பது அவர்களை ஊக்கப்படுத்துவதாக அமையும் என்றுகூடச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அறுவடை செய்கிறபோது, சில நெல் மணிகள் கீழே விழும். நெல் மணிகள் கீழே விழுகிறதே என்பதற்காக அறுவடை செய்யாமல் இருக்க முடியாது. தீவிரவாதிகளைத் தேடுவதற்காக நாம் செல்கிறபோது, சில அப்பாவிகளும் துன்புறுத்தப்படுவார்கள்தான். எனவே அப்பாவிகள் துன்புறுத்தப்படுகிறார்களே என்பதற்காகத் தீவிரவாதிகளைப் பிடிக்காமல் இருக்க முடியாது. எனவே அந்த வகையில் தமிழகக் காவல் துறை சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது. ஆனாலும், காவல் துறையிலே ஒரு இடர்ப்பாடு இருக்கிறது. எங்கோ ஓர் இடத்தில் காவல் துறை தனது கடமையைச் செய்யத் தவறியிருக்கிறது.

எல்லா மாவட்டங்களிலும் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டபோது, கோவையிலேயிருந்து மட்டும் செய்தி வந்திருக்கிறது, வெடிகுண்டு இல்லையென்று. எனவே அதனைப் பார்த்துவிட்டு, காவல் துறைத் தலைவர், அந்தப் பிரச்சினையை, அத்தோடு முடித்திருக்கிறார் என்றால் அது தவறு. ஏனென்றால் கோவைதான் வெடிகுண்டுக் கலாசாரத்தினுடைய கருவாக இருக்கின்ற இடம். தமிழகத்திலே பிற இடங்களிலே வெடிகுண்டு கைப்பற்றப்படுகிறபோது, கோவையிலே வெடிகுண்டு இல்லையென்று காவல் துறையிடமிருந்து பதில் வந்தால், மேலும் அவற்றைத் தீவிரப்படுத்தி ஆராய்வதற்கான ஒரு சூழ்நிலையைத் தமிழக அரசாங்கமும், காவல் துறையும் எடுத்திருக்க வேண்டும். அங்கு இருக்கின்ற காவல் துறைத் தலைவர் சொல்லிவிட்டார் என்பதற்காக நாம் மெத்தனமாக இருந்ததனுடைய விளைவு, நாம் தேர்தலில் தோல்வி பெற்றது மட்டுமல்ல. பல நூறு உயிர்களை இழந்திருக்கிறோம் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் கோயம்புத்தூரிலே காவல் துறை செயல் இழந்தது என்பதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். பிற மாவட்டங்களிலே அவர்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டபோது, கோவையிலே மட்டும் காவல் துறை செயல் இழந்ததற்கான காரணம் என்ன? கோயம்புத்தூரிலே மட்டும் இரண்டு ஆண்டு காலத்தில் எத்தனை

போலீஸ் கமிஷனர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்? அப்படி இடைவிடாமல் மாற்றப்பட்டதற்குக் காரணம் என்ன? அவற்றை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். நிருவாகத்தை எப்படி வேண்டுமானாலும் நாம் கையாளலாம் என்று எண்ணினோமேயானால் அதனுடைய விளைவுகள் பயங்கரமாக இருக்கும். அதனை நாம் கோவையிலே கண்டிருக்கிறோம். எனவே, நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், காவல் துறையினுடைய சுதந்திரத்திலே அரசாங்கம் கை வைக்கக்கூடாது. காவல் துறை சிறப்பாகச் செயல்பட, தீவிரவாதிகளைப் பிடிக்க அரசாங்கம் உதவிகரமாக இருக்க வேண்டும். அதிலே அரசியல் நுழையக் கூடாது. அப்படியொரு கடுமையான நடவடிக்கை எடுத்தோமேயானால், தமிழகத்திலே இந்த மதக் கலவரங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கிய பெருமை நம்மைச் சாரும் என்று சொல்லி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு சம்பந்தமாக அரசின் வெள்ளை அறிக்கை மீது புதிய தமிழகத்தினுடைய கருத்துக்களை எடுத்து முன் வைப்பதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி, நான் கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

முற்பகல் 10-10

என்னைப் பொறுத்தமட்டிலும், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், உலகப் பொதுவுடைமைத் தந்தை காரல் மார்க்ஸ் ஆகிய தலைவர்களே, அவர்களின் தத்துவங்களே வழி நடத்துகின்றன. உலகப் பொதுவுடைமைத் தந்தை காரல் மார்க்ஸ் மதங்களைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்கிறார், 'மதம் ஒரு அபினைப் போன்றது' என்று. அதே கருத்தைத்தான் நானும் அடிப்படையிலே கொண்டிருக்கிறேன். ஆனால், இந்த நாட்டில், உலகத்தில் வந்த மதங்கள், தன்னுடைய இலட்சியங்களையும் தன்னுடைய நோக்கங்களையும் பல்வேறு விதமாகச் சொல்கின்றன. இந்த நாட்டில், உலகத்தில் அமைதியைக் கொண்டு வருவதற்காக, இந்த நாட்டில்



கொல்லாமையை உருவாக்குவதற்காக, இந்த நாட்டில் சமத்துவத்தைக் கொண்டு வருவதற்காக என்றெல்லாம் மதங்கள் சொல்கின்றன. அப்படிக் கொல்லாமை தத்துவத்தை நடைமுறையிலே கொண்டிருக்க வேண்டிய மதங்கள், அமைதியை நடைமுறையிலே கொண்டு வந்திருக்க வேண்டிய மதங்கள் இந்த அமைதியின்மைக்குக் காரணமாகின்றன. கொல்லாமைக்கு ஆளாக இருக்க வேண்டிய மதம், அதற்கே பலியாகக்கூடிய ஒரு வருந்தத்தக்க சூழ்நிலையிலேயிருந்துதான் நான் இந்த விஷயத்தை அணுக இருக்கிறேன்; அணுக விரும்புகிறேன்.

பல்வேறு மதங்கள் பல்வேறு நோக்கங்களோடு வந்திருக்கின்றன. நான் இந்த மன்றத்திலே ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். புத்த மதம் இந்த நாட்டிலே ஏற்றத்தாழ்வை ஒழிப்பதற்காக, சமத்துவத்தை உருவாக்குவதற்காக வந்திருக்கிறது. இஸ்லாமியச் சமுதாயம் சமத்துவத்தை உருவாக்குவதற்காக வந்திருக்கிறது. அதேபோல், சமண மதம் சமத்துவத்தை உருவாக்குவதற்காக வந்திருக்கிறது. ஆனால், இந்து மதம் எதை உருவாக்க வந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த மதத்திலே அப்படியொரு கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. இதுதான் நடைமுறையிலே இருக்கக்கூடிய பிரச்சினை.

இப்போது நேரிடையாக விஷயத்திற்கு வருவோமேயானால், கடந்த சில மாதங்களாகக் கோயம்புத்தூரை மட்டுமல்ல, தமிழகத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த மத மோதல்களுக்குக் காரணம் என்ன? இந்த மத மோதல்களுக்கு எல்லாம் வித்திட்டவர்கள் யார்? இந்த மத மோதல்கள் எங்கிருந்து புறப்பட்டன என்பதற்கு இங்கே ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த வெள்ளை அறிக்கையை சில பேர் கறுப்பு அறிக்கை என்று சொல்கிறார்கள். இது வெள்ளையடிக்கப்பட்ட அறிக்கை என்றும் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டிலும், இந்த அறிக்கை ஒரு நல்ல நோக்கத்தோடு வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், முழு வெள்ளை அறிக்கையாக வெளி வர இன்னும் ஆழமான பல உண்மைகளைத் தைரியமாகக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இதிலே இன்னும்

பல விஷயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தால், இந்த நாட்டு மக்களுக்கு, ஒட்டுமொத்தமாக இந்தப் பிரச்சினைகள் எல்லாம் எப்போது உருவாயின என்பதை வெட்டவெளிச்சமாக்கியிருக்க முடியும்.

நான் இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், 1980-க்கு முன்பு இந்த நாட்டிலே எந்த இடத்திலே மோதல் வந்தது? இந்த நாட்டிலே இஸ்லாமியத் தீவிரவாத இயக்கம் என்று சொல்லப்படுகின்ற அல்-உம்மாவோ, ஜிகாத் கமிட்டியோ இருந்ததா? அன்று இல்லாத இயக்கங்கள், 1985-க்குப் பிறகு, 1986-க்குப் பிறகு அல்லது 1990, 1995-க்குப் பிறகு தோன்றக் காரணம் என்ன? இவை எல்லாம் இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருந்தால் இன்னும் சந்தோஷமாகவும், இன்னும் வரவேற்கக்கூடிய விதத்திலேயும் இருந்திருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து.

இதிலே மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், 1981 ஆம் ஆண்டு தமிழகத்திலே முதன்முதலாக இந்து முன்னணியினுடைய தொடக்கக் கூட்டம் நடந்தது. இந்து எழுச்சி மாநாடு என்ற பெயரில் கோவையிலே திரு. இராமகோபாலன் அவர்களுடைய தலைமையில், திருக்கோவிலூர் சுந்தரம் போன்றவர்கள் அந்தக் கூட்டத்தைப் போட்டு, அந்த மாநாட்டிலே அநாகரிகமான பேச்சையெல்லாம் பேசினார்கள். அதற்குப் பிறகுதான் இந்த நாட்டில் வேறு ஒரு தீவிரவாதம், அன்று போடப்பட்ட இந்து தீவிரவாத விதைகள்தான் இஸ்லாமியத் தீவிரவாதம் உருவாவதற்கும் காரணமாக இருந்தன என்பதை இந்த அவைக்கு நான் சுட்டிககாட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல 10-15

அதேபோல, இந்த அறிக்கையைப்பற்றி ஓ. ராஜகோபாலனும், இராமகோபாலனும் கருத்துச் சொல்கின்றபோது ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். 1981-82-லே மீனாட்சிபுரத்திலே ஏற்பட்ட மத மாற்றத்தைத் தொடர்ந்துதான் பிரச்சினையே உருவானது என்று சொன்னார்கள், சந்தோஷம். மீனாட்சிபுரத்தில் என்ன ஏற்பட்டது? மீனாட்சிபுரத்திலே மத மாற்றம் ஏற்படக் காரணம் என்ன என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் சில உண்மைகளைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்று மத மாற்றம் ஏற்பட்டபொழுது தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசியல்வாதிகள் மட்டுமல்ல,



இந்தியாவில் இருக்கக்கூடிய அத்தனை அரசியல்வாதிகளும் அந்தக் குக்கிராமத்திற்கு ஓடினார்கள். மீனாட்சிபுரம் என்று அழைக்கப்படுகின்ற அந்தக் குக்கிராமத்தில் 180 தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தேவேந்திரகுல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மதம் மாறிய ஒரு காரணத்திற்காக, இந்தியாவில் இருக்கக்கூடிய அத்தனை இந்து முன்னணித் தலைவர்களும் அங்கே ஓடிச் சென்றார்கள். அந்நிய நாட்டுப் பணம் கோடி கோடியாக வரும் என்று சொன்னார்கள். ஆனால், உண்மை நிலவரம் என்ன என்றால், மத்திய, மாநில அரசு அதிகாரிகள் எல்லாம் இணைந்து ஒரு அறிக்கையைத் தயார் செய்தார்கள். எதற்காக மத மாற்றம் நடந்தது என்று காரணத்தை விளக்கி அறிக்கையைத் தயார் செய்தார்கள். அந்த அறிக்கையின் ஒரு பகுதியை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே உண்மையில் என்ன நடந்தது என்றால், 1972 ஆம் ஆண்டு மீனாட்சிபுரத்திலே கோவிந்தன் என்று அழைக்கப்படக் கூடிய தேவேந்திரகுல சமுதாயத்தைச் சேர்ந்தவர், வேலம்மாள் என்று அழைக்கப்படக்கூடிய தேவர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலிக்கிறார். ஆனால், அவர்களுடைய காதல் நிறைவேறவில்லை. எனவே, அவர்கள் அந்த ஊரிலிருந்து இடம் பெயர்ந்து கேரளாவுக்குச் செல்கிறார்கள். இரண்டு சமுதாயமும் இணைந்து வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, அவர்கள் அங்கே திருமணம் செய்துகொண்டு, கேரளாவிலே மதம் மாறிவிட்டு, தங்களுடைய சொந்த ஊருக்கு அருகில் இருக்கக்கூடிய மேக்கரை என்ற கிராமத்தில் 1979-80-லே, 7 ஆண்டுகள் கழித்து அவர்கள் குடியேறுகிறார்கள். அவர்கள் மதம் மாறியது 1972 ஆம் ஆண்டு. குடியேறியது 1979 ஆம் ஆண்டு. ஆக, 7 ஆண்டுகள் கழித்துக் குடியேறுகிறார்கள். அதன் பிறகு, 1981-க்குப் பிறகுதான் அங்கே 180 குடும்பங்கள் மதம் மாறுகின்றன. Sunday பத்திரிகையில், The Meenakshipuram Report என்று அரசினுடைய அறிக்கையைப் பற்றி இந்தியாவினுடைய பிரபலமான பத்திரிகை ஆசிரியர் குல்தீப் நய்யார் எழுதியிருக்கின்றார். அந்த ரிப்போர்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பது பற்றி இந்த அவைக்கு நான் படித்துக்காட்ட விரும்புகிறேன். எதற்காக மதம் மாறினார்கள் என்று பல காரணங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

"It is apt to mention an incident that took place some time in 1972. Thangaraj, S/o. Thirumalvandi had loved and married a thevar girl. As this led to ill feelings between the two communities, he was asked to leave the village by the pallans. He had left the village and went to Kerala State for conversion as Muslim. After conversion he came to Meekkarai and has been staying all alone severing all connections with his relations. His converted name is now Yussuf. But his father, brothers and sisters are staying in Meenakshipuram village. This was the first incident when the conversion to Islam took place in this village of Meenakshipuram. This incident seems to have created ill feelings between these two communities.

முதலில் அவர்கள் எப்பொழுது மதம் மாறினார்கள் என்பது பற்றி குல்தீப் நய்யார் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதற்குப் பல காரணங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். என்னென்ன காரணத்தால் மதம் மாறினார்கள் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

"The harijans cannot go to temples and schools freely....the services of barbers and washermen are not available to the harijans. With regard to drinking water there are separate wells in the localities. . . .harijans cannot get water from wells in the thevar locality."

முற்பகல் 10-20

அதைப் போல பலர் கொண்டு வருகிறார்கள். "There are three tea stalls at Panpoli run by a Moopanar, a Thevar and a Muslim. Harijans can get service at the tea shop run by the Muslim but not from the other two stalls."

கடைசியாக, இந்த அறிக்கையைப் பற்றித் தீர்மானமாக ஒன்று சொல்கிறபோது என்ன சொல்கிறார்கள் என்றால், "Conclusion-- From the discussions with the converted scheduled castes, it was obvious that a long standing social discrimination, based on untouchability and indifference of the Hindu society at large, towards them was the major cause for the conversions. This indiscrimination was felt more by the educated persons among the harijans. It may be noted here that the caste Hindus considered the incidents quoted by the converted harijans to support their conversion due to social



discrimination" என்று கடைசியாக முடிக்கிறபோது, கோடிக்கணக்கான ரூபாய் அந்நியப் பணம் வந்தது, மதம் மாறினார்கள் என்று சொல்லிக் கொண்டு வருகிறார் அந்த அறிக்கையிலே.

"The caste Hindus mentioned that money had played a role in the conversion. The representatives of the Arya Samaj......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 12 நிமிடங்கள் பேசியிருக்கின்றீர்கள். இன்னும் 3 நிமிடங்கள் தருகின்றேன். விவாதத்தில் இன்னும் 10 பேர் பேச வேண்டியிருக்கிறது. ஒருவருக்கு 15 நிமிடங்கள்தான். ஆகவே இன்னும் மூன்று நிமிடத்திற்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**Dr. K. KRISHNASAMY:** Hon. Deputy Speaker, Sir, the representatives of the Arya Samaj were of the opinion that foreign money has played a major role. As for the inducement by way of money is concerned the converted harijans categorically denied any allurement and they also said that it was they who approached the Muslim leaders first. The confidential enquiries with some of the non-converted harijans also revealed that it was only after the harijans of the village took the initiative the Muslim leaders took the action for conversion. Hence, it is not possible to say, in this regard, anything categorically, about the involvement of the foreign money.

எனவே, மீனாட்சிபுரத்திலே ஏற்பட்ட மதமாற்றம் என்பது, வெளியிலேயிருந்து திணிக்கப்பட்ட மதமாற்றம் அல்ல; அந்நிய நாட்டுப் பணத்தால் அல்லது பொருளால் ஏற்பட்ட மதமாற்றம் அல்ல. இந்து மதத்திலே இருக்கக்கூடிய சமூகக் கொடுமைகளால் ஏற்பட்ட மதமாற்றம்தான் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே கருத்தை வலியுறுத்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள், அக்டோபர் மாதம் முரசொலியிலே யார் யாரால் என்று ஐந்து நாட்கள் தொடர்கதையாகக் கட்டுரை எழுதியிருக்கிறார்கள். இதே கருத்தைத்தான் வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, ஒட்டுமொத்தமாக இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஒரு கருத்தை நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றுள்ள இஸ்லாமியர்கள் அத்தனை பேரும் அரேபிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தவர்கள் அல்ல. இந்து மதத்தினுடைய ஜாதிக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு, இங்கேயிருந்து

விடுதலையை நோக்கி தற்காலிகமாக அங்கே போனவர்கள்தானே தவிர, அவர்கள் ஒன்றும் அந்நிய நாட்டினுடைய பிரஜைகள் அல்ல; வெளியிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் அல்ல என்பதையும் இந்த மாமன்றத்திற்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இங்கே கொடுமைகளைத் தாங்க முடியவில்லை; தாழ்த்தப்பட்ட மக்களால் தீண்டாமைக் கொடுமைகளைத் தாங்கமுடியவில்லை என்று அவர்கள் அங்கே போனால், அங்கேயும் அவர்களை இந்து மதம் வந்து அடக்குவதும், ஒடுக்குவதும் சரியானது அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கோயம்புத்தூர் incident-டிலே தொடர்ச்சியாக காக்கிச் சட்டைக்குள் காவிச் சட்டைகள் இருந்திருக்கின்றன என்ற உண்மை கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். நான் கோயம்புத்தூரிலே 1981-இல் இருந்து குடியிருந்து வருகின்றேன். அதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டியாக வேண்டும். கணேசன் என்பவர் 1991-க்குப் பிறகு அங்கே I.G. ஆக வந்தார்கள். அவர் வந்த பின்பு, திட்டமிட்டே கோயம்புத்தூர் போலீசை இந்து மதவாதப் போலீசாக மாற்றினார் என்ற உண்மை இதில் சொல்லப்பட்டிருந்தால, நன்றாக இருந்திருக்கும்; சொல்லப்பட்டிருக்க வேண்டும். நம்மைப் பொறுத்தமட்டிலே, தனிப்பட்ட முறையிலே காவல் துறையோடு, காவல் துறையிலே இருக்கின்றவர்களோடு பகை கிடையாது. ஆனால், காக்கி உடை போட்ட மதவாதிகளாக, காக்கி உடை போட்டுக் கொண்ட ஜாதியவாதிகளாக, காக்கி உடை போட்டுக் கொண்ட ஊழல்வாதிகளாக, யார் இருந்தாலும் அவர்களை நிச்சயமாக அடையாளம் காட்டி ஒடுக்கினால்தான், இந்தத் துறையைப் பாதுகாக்க முடியும், இந்த அரசைப் பாதுகாக்க முடியும்.

*முற்பகல் 10-25*

ஒரு அரசு இயந்திரம் என்பது பொதுவானதாக இருக்க வேண்டும். ஒரு அரசு இயந்திரம் எல்லா மக்களுக்குமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. India is a Soverign, Socialist, Secular, Democratic Republic according to the Constitution. Secularism என்று சொன்னால், அரசு இயந்திரம் என்பது மதங்களிலிருந்து தூர விலகி நிற்க வேண்டும் என்பதுதான். ஆனால், கோயம்புத்தூரிலிருந்த காவல் துறை, திட்டமிட்டே -- R.S.S. அதாவது, இந்து மத



தீவிரவாத எண்ணம் கொண்ட இயக்கத்தைச் சார்ந்த சில காவல் துறை அதிகாரிகளால்--தொடர்ச்சியாக காவிச் சட்டைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், செல்வராஜ் என்பவர் படுகொலை செய்யப்பட்டவுடனே, அதில் தீவிரவாதியோ அல்லது 'அல்-உம்மா'வோ ஈடுபட்டிருந்தால், உடனடியாகக் காவல் துறை யார்மீது பாய்ந்திருக்க வேண்டும்? ஆனால், அவர்கள் என்ன செய்தார்கள்? தினம் 50 ரூபாய், 100 ரூபாய் சம்பாதிப்பதற்காக வீதி ஓரங்களிலே, சாலை ஓரங்களிலே, பெட்டிக்கடை வைத்திருந்தவர்களை, சாதாரணமாக தலைச்சுமையாக பொருள்களை வைத்து விற்றுக்கொண்டிருந்தவர்களை, தள்ளு வண்டியிலே வைத்து விற்றுக் கொண்டிருந்தவர்களையெல்லாம் காவல் துறையினரே, அங்கே இருக்கக்கூடிய கூலியாட்களை வைத்துக் கொண்டு organise செய்து, இரண்டு நாட்கள், ஏறக்குறைய 500 கோடி அல்லது 600 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட அவர்களுடைய சொத்துக்களை நாசம் செய்தார்களே, அதையும் இதிலே சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். 20 கோடி ரூபாய் சொத்துள்ள ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேல் பேசிவிட்டீர்கள். 15 நிமிடங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்டது. அதற்குமேல் 2 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** 20 கோடி ரூபாய் சொத்துள்ள 'ஷோபா கிளாத் சென்டர்' தாக்கப்பட்டிருக்கிறது. அங்கு போலீஸ் அதிகாரிகளே நேரடியாகச் சென்று, அந்தக் கடையின் பூட்டை உடைத்துக் கொடுக்கிறார்கள. இவையெல்லாம சாதாரண மக்களுக்கு எப்படித் தெரியும்? கோவை செல்வராஜ் என்ற காவல் துறையைச் சேர்ந்த காவலர் கொல்லப்பட்டது, எப்படி மதக் கலவரமாக மாறியது என்பதுதான் நம்முடைய கேள்வி. அதை ஏன் செய்தார்கள்? போலீஸே organise செய்துதான் அந்தக் கலவரத்தை உண்டு பண்ணினார்களே தவிர, இது இரண்டு மதத்திற்கும் இடையே உண்டான கலவரம் அல்ல. அப்படியென்றால், வேறு எங்கேயாவது ஒரு இந்துக்கும், முஸ்லீமுக்கும் கலவரம் ஏற்பட்டிருந்தால், அது இந்து-முஸ்லீம் கலவரமாகச் சித்தரித்திருக்கலாம். ஆனால், ஒரு காவல்காரர் கொல்லப்பட்டதை அடுத்து, அங்கே ஏற்கெனவே தயாராக இருந்து, எப்படியாவது ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி,

முஸ்லீம்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்காக, மதச் சார்புடைய காவல் துறையாக மாற்றப்பட்ட கோவை காவல் துறை செய்த அட்டூழியம்தான் என்பதையும் இதிலே சுட்டிக்காட்டியிருந்தால்தான், அது சரியாக இருந்திருக்க முடியும் என்பதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேராசிரியர் தீரன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலே அதிகமாகப் பேசிவிட்டீர்கள். இன்னும் பத்து பேர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்படப் பேச வேண்டும். அவர்கள் பேசிய பிறகு, முதலமைச்சர் விரிவாகப் பதில் சொல்ல வேண்டும். ஆகவே, இதற்குமேல் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்க முடியாது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், உங்களை நான் பேச அழைத்திருக்கிறேன்.

**டாக்டர். க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று நீட்டித்துக் கொண்டே போகிறீர்கள். இன்னும் சரியாக ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக நாம் விரும்புவது, சாதி வேறுபாடுகள் ஒழிய வேண்டும்; மத ஆதிக்கம் ஒழிய வேண்டும்; பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்பதுதான். ஆனால், இப்போது, என்றும் இல்லாத அளவுக்கு மதக்கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதிலே, இஸ்லாமிய தீவிரவாதம் என்று சொன்னால் மட்டும் போதாது; இந்து தீவிரவாதம் இருப்பதையும், அதே வார்த்தைகளால் சுட்டிக்காட்டப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு, இந்திய நாடே முஸ்லீம்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்; பாபர் மசூதியைக் கட்டித் தரவேண்டும்; இது தொடர்பான ஏகோபித்த தீர்மானத்தை, சட்டமன்றத்தில் இந்தத் தொடரிலேயே நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்து, இந்து தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால், ஒட்டுமொத்தமாக இயக்கங்களைத் தடை செய்வது என்பது தீர்வாகாது. ஆனால், தடை என்று வரும்போது, எல்லா இயக்கங்களும் ஒரே மாதிரியாகக் கையாளப்பட வேண்டும் என்பதுதான் என் கருத்து.



அடுத்து, நடைபாதைகளிலும், அரசுக் கல்லூரிகள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிலுமுள்ள கோயில்களையும், மற்ற சமய ஆலயங்களையும் அகற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர்கள், கண்டிப்பாக 15 நிமிடங்களுக்குள் தங்களுடைய கருத்துக்களைக்கூறி முடிக்க வேண்டும். அடுத்து திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை குண்டு வெடிப்பு சம்பந்தமாக அரசால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வெள்ளை அறிக்கை மீது இன்றைக்கு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த அறிக்கையானது, நடந்துவிட்ட சம்பவங்களையும், நடந்ததற்கான பின்னணிகளையும், கடந்த பல்லாண்டு காலமாகவே, தமிழகத்திலே, இத்தகைய சம்பவங்கள் ஒன்றையொன்று சங்கிலித் தொடர்போல பின்னிப் பிணைந்து வந்து கொண்டிருக்கின்றன என்பதையும், ஆழமாகவும் சுருக்கமாகவும் சொல்லியிருந்தாலும், ஆழமாகச் சில கருத்துக்களை இதிலே கோடிட்டுக் காட்டியிருப்பதை, இந்த அறிக்கையினைப் படிக்கின்றபோது நாம் நன்கு உணரத் தலைப்பட்டுள்ளோம். இந்தச் சம்பவங்கள் இப்படி நிகழ்வதற்குக் காரணமான நிகழ்ச்சிகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 மே 11

முற்பகல் 10-30

1983 ஆம் ஆண்டிலே நடைபெற்ற மண்டைக்காடு சம்பவமானது கிருத்தவர்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்பட்ட இந்து மத வெறியர்களுடைய நிகழ்வு என்பதை, அந்த நிகழ்ச்சியினைக் கூர்ந்து பார்த்தவர்களுக்கு, அறிந்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இங்கே எந்தத் தீவிரவாதமானாலும், எந்த மதத் தீவிரவாதமானாலும் அது மக்களைச் சீரழிக்கக்கூடிய வகையிலேதான் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு வரலாற்றிலே பல்வேறு சான்றுகள் இருக்கின்றன. தொடர்ச்சியாகத் தமிழகத்திலே அத்தகைய பின்னணிகள் அண்மைக் காலத்திலே தலைகாட்டாமல் இருந்ததற்கு அடிப்படை காரணமே இந்த மண்ணிலே பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் ஊட்டி வந்திருக்கின்ற சாதி மத பேதமற்ற சமத்துவ உணர்வுகள்தான். அவைதான் இங்கே மத உணர்வுகள் இருந்தாலும், மத சகிப்புத் தன்மையை இந்த மக்களிடம் இதுவரையிலே கட்டிக் காத்து வந்திருக்கிறது. ஆனால், அண்மையிலேதான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன. 1980 ஆம் ஆண்டிலே இருந்து பார்ப்போமேயானால் இதனுடைய பின்னணிகளை, இதனுடைய அழுத்தத்தை நாம் உணர்ந்துகொள்ளலாம். நான் எந்த ஒரு தனிப்பட்ட நபரையும் குறைத்துச் சொல்வதற்காக இதைக் குறிப்பிடவில்லை. 8000 சமணர்களைக் கழுவேற்றிய நாடுதான் இந்த நாடு. கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலேயே 8000 சமணர்களை மத சகிப்புத்தன்மை இல்லாத காரணத்தினாலே அனல்வாதம், புனல்வாதம் என்றெல்லாம் நடத்திக் கழுவேற்றிய நாடுதான் இந்த நாடு.

அதேபோல, ஒரே சமயத்திலேகூட வடகலை, தென்கலை என்று சொல்லி அப்படிப்பட்ட வாக்குவாதங்களை எல்லாம் நிகழ்த்திக் கொண்டிருக்கின்ற நாடுதான் இந்த நாடு. இருந்தாலும்கூட, இந்தத் தமிழ் மண்மட்டும் இந்த மதமாச்சரியங்களுக்கும், மதப் பூசல்களுக்கும் அப்பாற்பட்டு நின்று இதுவரையில் இயங்கி வந்திருக்கிறது. அதற்குக் காரணமாக நாம் மேலை நாட்டு அறிஞர்களை மட்டும் உதாரணம் காட்டத் தேவையில்லை. இந்த மண்ணிலே பிறந்த 'எம்மதமும் சம்மதம்' என்று வாழ்ந்த சமரச சன்மார்க்கம் கண்ட வள்ளலார் அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். மதமெனும் பேய்



1998 மே 11] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

பிடியாதிருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மதமே ஒரு பேயைப் போன்றது. பேய் பிடித்தால், மூட நம்பிக்கை உள்ளவர்களுக்குப் பேய் பிடித்தால் படாத பாடு படுத்தும் என்று சொல்வார்கள். அப்படி இருக்கின்றபோது ஒரு மதமானது ஒரு மனிதனை அண்டினால் எந்த அளவுக்குப் பாடுபடுத்தும் என்பதை நாம் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டு வருகிறோம். அதை வள்ளலார் அவர்கள் மிகச் சிறப்பாகச் சுட்டிக்காட்டிச் சென்றிருக்கிறார்கள். ஆக, இதை எதற்கு நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால் அப்படி இருந்த இந்த நாட்டிலே 1980 ஆம் ஆண்டிலே இந்து முன்னணி என்ற ஓர் அமைப்பை ஒருவர் நிறுவுகிறார். இதுவரையிலே வட இந்தியாவிலே இருந்த அந்தச் சூழ்நிலைகள் தென்னிந்தியாவிலே, குறிப்பாகத் தமிழகத்திலேயும் தொடருவதற்கு இந்த நிகழ்ச்சி அடிப்படைக் காரணமாக இருந்திருக்கிறது என்பதை யாரும் மறக்க முடியாது. இத்தகைய கொள்கை உள்ளவர்கள், இத்தகைய சிந்தனை உள்ளவர்கள், இந்தியாவிலே வதந்திகளைப் பரப்பி பாமர மக்களிடம் மலிந்து கிடக்கின்ற உணர்வுகளைச் சலபமாகச் சுண்டிவிட்டு, தூண்டிவிட்டு, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு முறைகளில், பல்வேறு சந்தர்ப்பங்களிலே செயல்பட்டுக் கொண்டு வந்திருககிறார்கள் என்பதற்கு என்னாலே ஏராளமான உதாரணங்களை எடுத்துக்காட்ட முடியும்.

பாதல்பூர் மதவெறிப் படுகொலைக்குப் பிறகுதான் பீகாரிலே இத்தகைய கொள்கையாளர்கள் கால் ஊன்றினார்கள். மொராதாபாத், மீரட், லக்னோ, கான்பூர் போன்ற இடங்களில் நடைபெற்ற மதக் கலவரங்களுக்குப் பின்னாலேதான் உத்திரப்பிரதேசத்திலே ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய அளவுக்கு அவர்கள் வளர்ந்தார்கள். அயோத்தி ரத யாத்திரை, நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்று. அதேபோல, குஜராத்திலே அகமதாபாத், பரோடா, சூரத் போன்ற இடங்களில் நடைபெற்ற மதவெறிக் கலவரங்களுக்குப் பின்னாலேதான் குஜராத்தினுடைய ஆட்சி அதிகாரத்தையே பிடிக்கிறார்கள். ஜெய்ப்பூரிலே நடைபெற்ற மதவெறிப் படுகொலைக்குப் பின்னாலேதான் இராஜஸ்தானினுடைய ஆட்சி அதிகாரம் அவர்கள் கைக்கு வருகிறது. மராட்டியத்திலே பம்பாய், பீவாண்டி போன்ற பகுதிகளிலே நடைபெற்ற கலவரங்களுக்குப் பின்னாலேதான் அந்த மாநிலத்தினுடைய ஆட்சி அவர்கள் கைக்குக் கிடைக்கிறது. இதையெல்லாம் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் என்ன

என்று சொன்னால் வதந்திகளைப் பரப்புவதால்தான் இவை ஏற்படுகின்றன. இந்த நாட்டிலே மிகச் சுலபமாகப் பரவக்கூடியது, தொற்றுநோயைவிட மிக எளிதாக, விரைவாகப் பரவக்கூடியது வதந்திதான். அந்த வதந்தியை வைத்துதான் தேர்தலுக்கு முன்னாலே, உங்களில் பலபேருக்குத் தெரியுமோ, தெரியாதோ பிள்ளையார் பால் குடிப்பதாக ஒரு வதந்தியைச் சொன்னார்கள். பத்திரிகையாளர்கள் நடத்துகின்ற கருத்துக் கணிப்பைவிட, தங்களுக்கு என்ன செல்வாக்கு இருக்கிறது என்பதை அறிவதற்காக அத்தகைய கொள்கையாளர்கள் நடத்திய ஒரு கருத்துக் கணிப்புதான் பிள்ளையார் பால் குடிப்பதான நிகழ்ச்சியாகும். அத்தகைய நிகழ்ச்சிகளின் மூலமாக தங்களுக்கு ஆதரவு பெருகி இருப்பதைத் தெரிந்து கொண்டதற்குப் பின்னாலேதான், வதந்தியை வைத்துக்கொண்டு அரசியல் அறுவடை செய்துகொள்ளலாம் என்பதற்காக, இந்தக் கோவை வெடிகுண்டு வெடித்த சம்பவத்திலேயும் இத்தகைய சக்திகளுடைய பின்னணியானது நிச்சயமாக இல்லாமல் இருக்காது என்பது என்னுடைய ஆழமான சந்தேகமாகும்.

முற்பகல் 10-35

நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எம்மதமும் சம்மதம் என்று இருபபதற்குப் பதிலாக திருக்கோவிலூர் சுந்தரம் என்ற ஒருவரும், மூகாம்பிகை மணி என்ற ஒருவரும், கூடங்குளம் செலவராஜ் என்ற ஒருவரும், அர்ஜுன் சம்பத் என்ற ஒருவரும் மேடைகளிலே நபிகள் நாயகத்தையும், இஸ்லாத்தையும், கிருஸ்துவத்தையும், ஏசுநாதரையும் பற்றிப் பேசிய வசனங்களைத் தயவுசெய்து காவல் துறை அதிகாரிகள் அவர்களிடமிருக்கும் பழைய குறிப்புகளை எல்லாம் உன்னிப்பாகப் புரட்டிப் பார்த்தால், எந்த அளவுக்கு அவர்கள் மத வெறியைத் தூண்டக்கூடிய அளவுக்குப் பேசியிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும்.

அதேபோல, இஸ்லாத்தில் இருக்கக்கூடிய சில தீவிரவாதிகள் இவர்களுக்கு நேர் எதிராக லாவணி நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் சில நேரங்களில் தவறு செய்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் பேசுகின்ற பேச்சின் அடிப்படையிலே, தீவிரவாதிகள் என்று கருதப்பட்டு இந்து மத வெறியர்களாலே அப்துல் லத்தீப் என்ற ஒருவரும், அக்கிம் என்ற ஒருவரும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருந்து வந்த மத உணர்வானது, மத வெறியாக மாறி ஒருவர் மதத்தை இன்னொருவர்



தாக்குவதும், ஒரு மதத்தின் கடவுளை இன்னொரு மதத்தவர் தாக்குவதும், இழிவுபடுத்துவதும் தொடர்ந்து 1980-லிருந்து திட்டமிட்டுச் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு, கோவை வெடிகுண்டுச் சம்பவத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், அங்கே மதத் தீவிரவாதிகள் வியாபாரிகளிடம் வசூல் வேட்டை நடத்தியதாகச் சொன்னார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. கோவை மாநகரிலுள்ள காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சிறு வியாபாரிகளிடம் வசூல் வேட்டை நடத்தி வந்தார்கள். அந்த வசூல் வேட்டையைத் தடுப்பதற்காக சில இஸ்லாமிய இளைஞர்கள் அமைப்பு ரீதியாகச் செயல்பட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் செயல்பட்டதன் விளைவாக, காவல் துறையில் இருக்கக்கூடிய சில பேர்களின் மாமூல் கொடுமையிலிருந்து சிறு வியாபாரிகள் தப்பித்ததன் விளைவாக, அந்த இளைஞர்களுக்கு அங்கே ஆதரவு கூடியிருக்கிறது. இச்சிறு வியாபாரிகளிடையேயும் அந்த முஸ்லீம் இளைஞர்களுக்குப் பெருவாரியான ஆதரவு இருந்திருக்கிறது. அதைப் பொறுத்துக்கொள்ள இயலாத 5 பெரிய முதலாளிகள், அதிலும் குறிப்பாக இந்து முன்னணியோடு வெளிப்படையாகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஒன்றாக இணைகிறார்கள். காவல் துறையினரும், அந்தப் பெரிய இந்து வியாபாரிகளும் இணைந்து இதற்காகத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதனுடைய தொடர்ச்சிதான் 1997 நவம்பரில் காவலர் செல்வராஜ் அவர்கள் படுகொலை செய்யப்பட்டதாகும். அதனுடைய பின்னணியிலே அவர்களது கைங்கரியங்கள், செயல்பாடுகள், மறைமுக வேலைகள் அடங்கியிருக்கின்றன. காவல் துறையினர் செய்த குறையைத் தட்டிக் கேட்பதற்காக உருவான இயக்கமானது கடைசியில் என்ன ஆகிறது என்றால், தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகவும், காவல் துறையினரிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், வேறு வேறு வகைகளிலே, வேறு வேறு திசைகளிலே அவர்கள் சென்று இன்றைக்குத் தீவிரவாதிகளாக மாறியிருக்கிறார்கள். நான் அதை நியாயம் கற்பித்து சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும்கூட, இத்தகைய குறைபாடுகள், அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு வளர்வதற்கு ஓர் அடிப்படைக் காரணமாக அமைந்து இருக்கின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது உலகத்திலேயே காவல் துறையினரின் பங்கு தேவையில்லை என்று கருதுகின்ற ஒன்று இருக்கிறது என்று சொன்னால், அது உணர்வால் ஒன்றுபட்டு ஒற்றுமையான பாதுகாப்புடன் வளர்வதான மதம் ஒன்றுதான். அதை யாரும் வந்து காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. யாரும் அவதாரம் எடுத்து மதங்களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்கின்ற அளவுக்கு உணர்வால் ஒன்றுபடக்கூடிய பிரச்சினைதான் இந்த மத உணர்வாகும். எனவே, இதை நான் காப்பாற்றுகிறேன், என் மதத்தை அழிக்கப் பார்க்கிறாய், என் மதத்திலிருந்து உன் மதத்திற்கு மாற்றப் பார்க்கிறாய் என்ற சில்லறைத் தனமான பிரச்சினைகளில தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் இதைப் பயன்படுத்தினார்கள்.

முற்பகல் 10-40

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எந்தச் சிறுபான்மையின மக்களுக்காக இஸ்லாமிய மக்களுக்காகப் பரிந்து பேசினார்களே அவர்களைப் போன்றவர்கள் கூட அரசியல் காரணங்களுக்காகத் தாங்கள் சொன்ன கருத்துக்களைக் கூட மாற்றிப் பேசக்கூடிய அளவிற்கு இன்றைக்குத் தமிழக அரசியலானது மிக மோசமான பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. கோவை, கோட்டைமேடுப் பகுதியிலே சோதனைச் சாவடி என்று முந்தைய ஆட்சிக்காலத்திலே போடப்பட்டது. அப்படியானால் அந்த முஸ்லீம்கள் என்ன அந்நியர்களா? அவர்கள் இந்த நாட்டினுடைய மண்ணின் மைந்தர்கள் இல்லையா? அங்கே ஏன் சோதனைச் சாவடி போட வேண்டும்? அவற்றை அகற்ற வேண்டும். இல்லையென்றால் அந்தச் சோதனைச் சாவடியை உடைத்தெறிவேன் என்று சொல்லிப்போன தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு முஸ்லீம் தீவிரவாதிகள் மீது ஏன் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுகிறார்கள். முஸ்லீம் தீவிரவாதிகள் மீது சரியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அதே நேரத்தில், எந்த சோதனைச் சாவடி எடுக்கப்பட வேண்டுமோ அந்தச் சோதனைச் சாவடியை எடுத்தது இந்த ஆட்சிதான். ஏன் எடுத்தார்கள்? அப்போது, அன்றைக்கு அவர்கள் எதற்காகப்





போராட்டம் நடத்தினார்கள், உடைத்தெறிவேன் என்று சொன்னார்கள்? ஆக, அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்பதற்காகவே, உள்ள நிலைமைகளையெல்லாம் மறந்துவிட்டு, மறுத்து விட்டு, குறுகிய கண்ணோட்டத்தோடு அரசியல் அறுவடை நடத்த வேண்டுமென்பதற்காக இத்தகைய மதக் கலவரங்களைச் சொந்த ஆதாயத்திற்காகப் பயன்படுத்த வேண்டிய ஒரு துர்பாக்கிய நிலைமைக்குத் தமிழகம் போய்க்கொண்டிருக்கின்றது.

நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்கிறேன், தமிழகத்தினுடைய வரலாற்றைத் திருப்பிப் பாருங்கள். இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் மாணவர்களாலே நடத்தப்பட்டபோது நான் அப்போது ஒரு மாணவன். அப்படி அந்தப் போராட்டத்திலே கலந்து கொண்ட பல பேர்கள் இங்கே இருக்கக்கூடியவர்களிலே ஏறத்தாழ நூற்றுக்கு தொன்னூறு சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். அந்தப் போராட்டமானது மாணவர்களாலே தொடங்கப்பட்டு, கடைசியிலே மக்கள் கைக்குச் சென்று, பிறகு வன்முறை தலைதூக்கியது. திருப்பூரிலே இன்ஸ்பெக்டர்களைக் கூட மாட்டு வண்டியிலே சேர்த்து வைத்து உயிரோடு கொளுத்தினார்கள். ஆனால், அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பேரறிஞர் அண்ணா, அவர் ஒரு சாமானிய மனிதராக இருந்தாலும், எதிர்காலச் சந்ததியினர்களுடைய நலனில் அக்கறையைக் கொண்டிருக்கின்ற ஒரு Statesman-ஆக இருந்த காரணத்தினாலே, அரசியல் ஆதாயம் தேட வேண்டாம் என்பதற்காக, பெருந்தன்மையோடு அன்று அவர்கள் வன்முறைக்குச் சென்ற அந்தப் போராட்டம் குறித்து "மாணவர்களே போராட்டத்தைக் கைவிடுங்கள், மக்களே கலவரத்திலே ஈடுபடாதீர்கள்" என்று சொல்லி, அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் மீது, அவதூறு சேற்றை அள்ளி வீசுவதற்குப் பதிலாக அமைதி திரும்ப வேண்டுமென்பதற்காக ஒத்துழைத்தார்கள். அதனாலேதான் அவர் இன்று உலகத்திலே உள்ள பல்வேறு தலைவர்களால் பாராட்டப்படக்கூடியவராக இருக்கிறார்கள். ஆனால், இப்போது எதிர்க்கட்சிகளாக இருக்கக்கூடியவர்கள் என்ன செய்கிறார்கள்? நடந்துவிட்ட சம்பவத்திற்காக, என்னவோ யாரோ கண்ணை மூடிக் கொண்டிருந்ததைப் போலப் பேசுகிறார்கள். யாராவது தீவிரவாதம் நடைபெற வேண்டுமென்று விரும்புவார்களா? இருமுனைகளும் கூர்மையாக உள்ள கத்தியைப் போன்றது தீவிரவாதம். பயன்படுத்தக்கூடியவர்களுக்கும் ஆபத்து; அதனாலே

பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆபத்து (மணியடிக்கப்பெற்றது). எனவே, அப்படிப்பட்ட ஒரு மோசமான சூழ்நிலை இருக்கிறபோது, அந்தத் தீவிரவாதத்தை அது மத வடிவத்திலே வந்தாலும் சரி, அல்லது வேறு எந்த வடிவத்திலே வந்தாலும் சரி, அதைக் கண்டுபிடிக்கின்றபோது, அதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறபோது, அதில் நமக்குத் தெரிந்த தகவல்களையெல்லாம் சொல்லி ஆதரவு அளிக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை என்பதை மறந்து விடக் கூடாது.

முற்பகல் 10-45

இந்த நேரத்திலே இன்னொன்றையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மும்பைக் கலவரம் பற்றி ஸ்ரீ கிருஷ்ணா அறிக்கையில் சொல்லப்பட்ட ஓர் உதாரணத்தை இங்கு நினைவுபடுத்திடக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு குடும்பத்திலே அண்ணன்-தம்பி இருக்கிறபோது சிறியவனாக இருக்கிறவனைப் பல்வேறுபட்ட பேர்களும் சதா தொல்லைப்படுத்திக் கொண்டிருக்கின்றபோது அந்தச் சிறியவனானவன் ஒரு நேரத்திலே ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு, சில மோசமான காரியங்களிலே எப்படி ஈடுபட்டு விடுகிறானோ அதே போலத்தான், இந்த மும்பைக் கலவரத்திலே சில இஸ்லாமிய இளைஞர்கள் இப்படிப்பட்ட தவறான பாதைக்குப் போய் விட்டார்கள் என்று மும்பைக் கலவரத்தைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணா அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

காஷ்மீர் மாநிலத்திலே உதம்பூர் மாவட்டத்திலே 26 பேர்கள் ஒரு கிராமத்திலே படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த நேரத்திலே கூட யாரும் அந்த மாநிலத்தில் உள்ள ஆட்சியைக் கலைக்கச் சொல்லவில்லை. அதற்குக் காரணமாக இருப்பது பாகிஸ்தானுடைய I.S.I. என்று சொன்னால் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறது? மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய வேலை என்னவென்று சொன்னால், பல மாநிலங்களைக் கடந்து, இந்திய நாட்டினுடைய எல்லைகளைக் கடந்து தீவிரவாதம் ஊடுருவுகிறது என்றால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு நடுநிலையோடு தோழமையுணர்வோடு நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய எச்சரிக்கைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி,





இப்படித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி நடத்த வேண்டுமே தவிர, அதற்காக இந்த ஆட்சியைக் கலைத்துவிட வேண்டும் அல்லது இந்த மாநில அரசு சரியில்லை என்றெல்லாம் சொல்வது எந்த வகையிலும் நியாயமற்றது. இதையெல்லாம் பயன்படுத்திக் கலைக்க வேண்டுமென்று சொன்னால், இராஜஸ்தானில் என்ன நடைபெறுகிறது? இப்போது திரிபுராவிலே என்ன நடைபெறுகிறது? காஷ்மீரத்திலே என்ன நடைபெறுகிறது? பக்கத்திலே இருக்கின்ற ஆந்திராவிலே என்ன நடைபெறுகிறது? மகாராஷ்டிராவிலே என்ன நடைபெறுகிறது? நேற்றுகூட I.S.I. உடன் தொடர்பு கொண்ட ஒருவரை, மும்பைக் கலவரத்திற்குக் காரணமாக இருந்த ஒருவரைக் கைது செய்திருக்கிறார்கள். ஆக, இப்படி மோசமான நிலைமைகள் இருந்தால், இந்தியாவிலே இருக்கக்கூடிய மாநிலங்களிலே ஒன்றிரண்டு மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்கள் அனைத்தையும் கலைத்தாக வேண்டும். அதனால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? ஆகவேதான், நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது என்னவென்றால், இத்தகைய நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற நேரத்திலே, எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் சரி, அல்லது தோழமைக் கட்சிகளாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சிக்கு முடிந்த வரையிலே தகவல்களைத் தந்து, முடிந்த வரையிலே ஒத்துழைப்பு தந்து, அமைதி காண்பதற்காக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பதுதான் சிறந்த ஜனநாயகப் பண்பு என்பதைத் தெரிவித்துக்கொண்டு statesman ஆக இருங்கள்; status woman ஆக இருந்து கொண்டு, இந்தத் தமிழகத்தினுடைய அமைதியைக் குலைத்து, தமிழகத்தினுடைய நிலைமைகளைக் கெடுத்து, அதன் மூலமாக ஓர் அரசியல் அறுவடை நடத்துவதற்கு யாரும் முயலக்கூடாது. அப்படி முயலக்கூடியவர்களை நிச்சயமாக மக்கள் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

ஏதோ சில நேரங்களிலே தூங்கி விடலாம். சில நாள் சிலரை ஏமாற்றலாம்; பல நாள் பலரை ஏமாற்றலாம்; ஆனால், எல்லோரையும் எல்லா நாட்களிலும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்பதை மட்டும் அவர்கள் நினைவிலே வைத்துக்கொண்டு, இத்தகைய நடவடிக்கைகளிலே தேசப் பற்றுணர்வோடு, பாரதி பாடினானே

[திரு. ஆ. இராசந்திரன் என்கிற தீரன்] [1998 மே 11

'ஆயிர முண்டிங்கு ஜாதி-எனில்
அந்நியர் வந்து புகலென்ன நீதி?-

என்று, அதுபோல, பல சாதிகள் இங்கே இருக்கலாம், மதங்கள் இருக்கலாம். ஆனால், அது வெளிநாட்டு I.S.I. ஆக இருந்தாலும் சரி, C.I.A. வாக இருந்தாலும் சரி, எந்த நாட்டு உளவு நிறுவனமாக இருந்தாலும் சரி, எங்கள் மக்களிடையே பூசல்களை, பொறாமைகளை, சண்டை சச்சரவுகளை உருவாக்கினால், நாங்கள் ஒன்றுபட்டு நின்று, அதை எதிர்ப்போம் என்கிற நாட்டுப் பற்றோடு அனைவரும் ஒத்துழைத்து, தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்குவோம்.

இந்த வெள்ளை அறிக்கையிலே, சிறப்பான முறையிலே பல நேரங்களிலே நடவடிக்கை எடுத்திருப்பதைச் சொல்லியிருந்தாலும், இன்னும்கூட, இந்து மதத் தீவிரவாதிகளைத் தடை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுச் சொன்னேன். 1980-லே இருந்து இந்தச் சதிவலை பின்னப்பட்டு வருகிறது. அந்த இந்து மதத் தீவிரவாதிகளைக் கண்டித்து, கண்காணித்து, தடைசெய்தால்தான், ஒரு நடுநிலை அரசு என்பதை ஆட்சியிலுள்ளோர் நிரூபித்துக் காட்ட முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மத நல்லிணக்க நிகழ்ச்சிகளை நாம் அந்தப் பிரச்சினை வருகின்ற நேரத்திலே மட்டும்தான் நடத்துகிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது, அந்த மத நல்லிணக்க நிகழ்ச்சி என்பது ஒரு பிரச்சினையோடு நின்றுவிடாமல், தொடர் நிகழ்ச்சியாக, ஆங்காங்குள்ள பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களையும் அரவணைத்து, கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தி நாட்டு மக்களிடம் நல்ல உணர்வுகளைப் போதிப்பதற்கு ஆய்வு செய்ய வேண்டுமென்றும், மனம் திருந்தினாலொழிய மக்களிடம் அமைதி திரும்புவதற்கு வழியில்லை என்பதால், அதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டுமென்றும் கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடிக்கின்றேன். வணக்கம்.



1998 மே 11]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

***Thiru B. Venkatasamy:** Hon. Deputy Speaker Sir, I thank you very much for giving me an opportunity to speak few words on behalf of Janata Dal about the White Paper on Coimbatore blast presented by the Hon. Chief Minister of Tamil Nadu. At the outset itself the White Paper regarding blast elaborated the bomb culture in Tamil Nadu since 5 years. The bomb culture is not started presently during the DMK rule but so many incidents have taken place because of the LTTE which was being trained in Tamil Nadu by the then Chief Minister M.G.R. and the Prime Minister Rajiv Gandhi. I came to understand in the beginning itself that the concerned officers were against implementing such training in Tamil Nadu because terrorist activities will spread throughout Tamil Nadu. I think this is the only reason and route cause of spreading terrorism in Tamil Nadu. Terrorism in Tamil Nadu should be averted then and there. If started, how to control it? This is our concern and at the same time I am very happy to state that whenever incidents take place the Government take action according to the merit of the case. But I am very unhapply to note that some people are telling that law and order situation in Tamil Nadu is deteriorating. If the law and order situation is deteriorating nobody can walk. But everybody is happily walking in the streets. Everybody is going in the street freely and protection is given to big people. How can we say that law and order situation has deteriorated in Tamil Nadu? Even Mr.Ashok Kumar has very correctly stated in his statement that law and order situation in Tamil Nadu is very good. Only some people having vested interest are telling that law and order situation has deteriorated in Tamil Nadu. *எங்கு போனாலும், எந்த கூட்டத்திற்குப் போனாலும் 356 பாயும் என்று பேசுகிறார்கள். எதற்காகப் பாய வேண்டும்?*

*முற்பகல் 10-50*

What is the reason? Tell me. Bomb-blast had taken place in Tamil Nadu. I am going to give my opinion about this.

எங்கே உட்கார்ந்தாலும், டில்லியிலே உட்கார்ந்தாலும், இங்கே உட்கார்ந்தாலும் 356 பாயும். அதற்கு இன்றைக்கு, Thiru Hegde has given a very good detailed statement that since two months the Government of India is stand-still because we are quarrelling ourselves. He is a gentleman. All these are happening only because of the lady- the former Chief Minister. Her aim is only to get withdrawal of the cases against her. She wants to save herself from the cases. If the DMK Government is dissolved, she can very well get withdrawal of the cases. That is her only aim. There is no other aim in Article 356. I want to stress this point on this occasion and at the same time I want to quote a story also. "நீங்க இல்லை என்றால் உங்க அம்மா தண்ணீர் குடித்துக்கொண்டு இருந்தது" என்று சொன்னமாதிரி--அதாவது ஒரு ஆடு தண்ணீர் குடித்துக்கொண்டு இருந்ததாம். ஒரு ஓநாய் போய், "நீ 6 மாதத்துக்கு முன்னே மேலே தண்ணீர் குடித்துக் கொண்டு இருந்தாய்; நான் கீழே இருக்கும்போது நீ மேலே தண்ணீர் குடிக்கலாமா? உன் எச்சி எல்லாம் எனக்கு வருகிறது" என்று சொன்னதாம். அதற்கு அந்த ஆடு "6 மாதத்துக்கு முன்பு நான் பிறக்கவே இல்லை" என்று சொன்னதாம். "அப்போது நீ பிறக்க வில்லையா? அப்படி என்றால், அது உங்க அம்மா அப்பாவோடதாகத் தான் இருக்கும்; அதைக் குடித்தேன்" என்றதாம் அந்த ஓநாய்.

This government is doing something good to the people, why are she spoiling this? People are really disgusted. Let us go to polls and she will face the consequences.

Coming to the White Paper presented by the Hon. Chief Minister, he has very well stated that the bomb blast culture has started in Tamil Nadu. I have already told that this should have been avoided.

Terrorism என்பது இரண்டு edge உள்ள weapon மாதிரின்னு சொன்னார். அது நடந்தது.

Our former Prime Minister was killed, it was a tragic. நாம் ஆரம்பித்தது நமக்கே அடிக்கலாம்; இன்னொருவருக்கும் அடிக்கலாம்; இந்த மாதிரி நடந்தது; அதனால் கெட்டது யாராக இருந்தாலும் You should not encourage bad things in the Society. Otherwise it will reflect on us. It is happening in the society. உலகம் பிறந்ததிலே இருந்து யாரும் நான் கெட்டதில்லை என்று சொன்னால், நாளைக்குக்





கெட்டது வரும். அதனால் அதைச் செய்யக்கூடாது. Bomb blast-ஐப் பற்றி நான் சொல்லிக் கொள்வதெல்லாம், நல்லபடியாகச் சொல்லி இருக்கிறார்கள். இதிலே முக்கியமாக யார் தப்பு செய்தாலும், ஜிஹாத் கமிட்டியை ban பண்ணி இருக்கிறார்கள்; அல்-உம்மாவை ban பண்ணி இருக்கிறார்கள்.

அப்புறம் caste-ஐப் பற்றி one of the most sensational subjects in the world ஒரு சாதி இன்னொரு சாதியைத் திட்டினால் அப்போதே சண்டை வந்துவிடும்; அப்போதே அது நடக்கும். அதை யார் செய்தாலும் root-cause பாபர் மஸ்ஜித். பாபர் மஸ்ஜித்தை இடித்தார்கள். நமக்கு மரியாதை இல்லை என்று சொல்லி fundamentalist எல்லாம் start பண்ணினார்கள். அதுவும் பண்ணக் கூடாது. அதிலே முக்கியமாக all religious leaders should be called for. இப்போது இதை இந்த மாதிரி Government Control பண்ணுவது really it is impossible. அவர்களுக்கு மன மாற்றம் வரவேண்டும். எல்லோரும் brothers ஆக இருக்க வேண்டும். முஸ்லீம் leaders இந்து leaders--அவர்களை எல்லாம் நீங்கள் கூப்பிட்டு, நீங்கள் ஜனங்களுக்கு எல்லாம் சொல்ல வேண்டும்; இந்த மாதிரி சமாதானம் சொல்ல வேண்டும்; இதெல்லாம் வரக்கூடாது என்று. முஸ்லீம்கள் ஒரு அடி அடித்தால், நீங்கள் wait பண்ணிவிட்டு ஒரு அடி அடிக்கத்தான் செய்வீர்கள். இதை மாற்றவே முடியாது. எனவே மனமாற்றம் வருகிற மாதிரி ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற செயல்பாடுகள், எடுத்து இருக்கிற நடவடிக்கைகள் எல்லாம் ரொம்ப நல்லாத்தான் எடுத்து இருக்கிறீர்கள். அவர்களை எல்லாம் கண்டுபிடித்து இதெல்லாம் பண்ணி இருக்கிறீர்கள். அதே சந்தர்ப்பத்திலே White Paper Present பண்ணி இருப்பதிலே பார்த்தால், Police should have taken early steps to stop this என்று தெரிகிறது.

முற்பகல் 10-55

அதே சந்தர்ப்பத்தில், இந்த வெள்ளை அறிக்கை இங்கே வைத்து இருப்பதில்--போலீசும் முன்கூட்டியே தடுப்பு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அப்படிப் பண்ணியிருக்கலாம்--கோயம்புத்தூரில் நடந்து இருப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே குண்டு தயாரித்தார்கள் என்று இருக்கிறது. அது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. இரண்டு மூன்று தடவை the Chief Minister has already asked the Police to take action. I think, they

have not taken proper action. Otherwise, it would have been averted. Alert ஆக இருந்திருந்தால், இந்தத் தேர்தலில் result இப்படி வந்திருக்காது. அதனால்தான் election result மாறி வந்திருக்கிறது. அதுதான் காரணம். அதைத் தடுத்திருக்கலாம். யார் தப்பு பண்ணியிருந்தாலும் அதற்கு அவர்கள் மேலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னும் ஒன்று, you are giving compensation to the families of those died in the blasts. நஷ்டஈடு கொடுப்பதில் ரொம்ப சந்தோஷம். ஆனால் இந்த குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு யார் பொறுப்பு? குண்டு வெடிப்புக்கு யார் பொறுப்போ அவர்களிடமிருந்து இந்த நஷ்டஈட்டுப் பணத்தை எல்லாம் recovery செய்ய வேண்டும். எந்த community பொறுப்போ அல்லது எந்தத் தனி நபர் பொறுப்போ, அப்படி தப்பு பண்ணியதற்கு யார் காரணம் என்று பார்த்து அவர்களிடம் இருந்து மொத்தத் தொகையையும் வசூல் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நாம் நஷ்டஈடு கொடுத்துக் கொண்டேதான் இருக்க வேண்டும். ஆகவே யார் தப்பு பண்ணினார்களோ அவர்களைப் பொறுப்பு ஏற்க வைக்க வேண்டும். அவர்களிடமிருந்து வசூல் பண்ணினால்தான் அவர்களும் நினைப்பார்கள், இதெல்லாம் பண்ணினால் நமக்கு danger என்று.

கோட்டைமேடு அமீர் பற்றிப் பேசினார்கள். முஸ்லீம்களுக்குத் தடை கூடாது என்று பேசினார்கள். அவர்களுக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டும். I came to understand that Kottaimedu Ameer belonged to Janata Dal. His family has not been given any compensation. சண்டை போடுபவர்கள் போட்டார்கள். ஆனால் சமாதானத்திற்குப் போனவர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் கூட முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். சமாதானத்திற்குப் போனவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறேன்.

In this White Paper, the Chief Minister has given a valuable suggestion "Government further appeal to leaders of the society and to leaders of all religions to extend their wholehearted co-operation to the measures being taken by the Government."



அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கைகள் சரியாக இருந்தால்தான் communityகளுக்குள்ளே பிரச்சினை வராது. அப்போதுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இவர்களை அடித்தால் அவர்களும் அடிப்பார்கள். அவரை அடித்தால் இவரையும் அடிப்பார். இதனால் communityக்கு பாதிப்பு ஏற்படுகிறது. communityக்குள்ளே இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் மதிப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். முஸ்லீமோ இந்துவோ அந்தந்த ஊர்களில் இருந்துதான் தீரவேண்டும். அவர்கள் பாகிஸ்தானுக்குப் போக முடியாது. ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு, நல்ல எண்ணத்தோடு இருந்தால்தான் நம் நாட்டில் இருக்க முடியும் என்பதைப் புரிந்துகொண்டு அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கமும் துணையாக இருக்க வேண்டும். கோட்டைமேட்டில் உள்ளவர்களுக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டும். போலீஸ் கொஞ்சம் alert-ஆக இருந்திருந்தால் இந்தப் பிரச்சினை வளர்ந்திருக்காது. (மணியடிக்கப்பெற்றது). இன்னும் ஒரே ஒரு நிமிடம்.

முக்கியமாக இன்னும் ஒன்று சொல்கிறார்கள். 'I.S.I. infiltration from other Nations.' Team from Government of India இங்கே ஏதாவது நடந்தால் அங்கேயிருந்து யாராவது வந்துவிடுகிறார்கள். அப்படி டெல்லியிலிருந்து யாரும் வரக்கூடாது. Governor is the representative of the Government of India. கவர்னரிடம் உண்மையான நிலைமை என்ன என்று கேட்டு அறிந்துகொண்டு, அதற்கு மேல் வரவேண்டுமானால் அவர்கள் வரட்டும். வந்து பார்க்கட்டும்.

Why are they coming to Tamil Nadu without taking the opinion of the Governor? What is the purpose? இதிலேயிருந்து என்ன தெரிகிறது என்றால், ஏதாவது செய்துவிட வேண்டும் என்று வருகிறார்கள். சட்டம்-ஒழுங்கு நிலைமை எப்படியிருக்கிறது என்று அவர்கள் கவர்னர் மூலமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டுதான், இங்கே பார்க்க வரவேண்டும். இப்போது என்னவென்றால் அப்படி எல்லாம் கேட்காமலேயே வந்துவிடுகிறார்கள். திரு. வடிவேல் Janata Dal President, Tamil Nadu கூட இதற்கு எதிராக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

The Honourable Chief Minister has requested the Central Government to stop I.S.I. infiltration. It is the duty of the Central Government. If it concerns internal security, the State Government can take action. But, it concerns external security. What action has

[திரு. பி. வெங்கடசாமி] [1998 மே 11

the Central Government taken to prevent I.S.I. infiltration? I want to ask the Prime Minister about this. What investigation has been done by you, Prime Minister, to prevent I.S.I. infiltration from Pakistan?

நீங்கள் பண்ணவேண்டியதை நீங்கள் பண்ணிக்கொண்டே இருக்கிறீர்கள். நல்லபடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதன் காரணமாக குண்டு வெடிப்பு இப்போது நின்று போய் இருக்கிறது. நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது, கெட்டுவிட்டது என்று சொல்வது சரியில்லை. எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. Religious பிரச்சினை எல்லாம் வரும்போது அது flare up ஆகாமல் அதை நல்லபடியா Control பண்ணி, இந்த நாடு நன்றாக வரவேண்டும். இந்தியா நன்றாக வளரவேண்டும் என்றால் நம்மிடையே Cooperation and brotherhood இருந்தால்தான் நல்லது. எல்லா communityகளுக்கும் இடையே brotherhood இருக்க வேண்டும்.

இந்தச் சமயத்திலே the Press also should cooperate with the Government and they should not spread rumours. இந்த மாதிரி ஆகி, இந்த மாதிரியாகக் கலாட்டா ஆகிற நிலைமையைத் தவிர்க்க இதிலே எல்லாம் Press கூட cooperate செய்ய வேண்டும்; நல்லபடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். Thank you very much for giving me this opportunity to say a few words on the White Paper placed before the House, by the Hon, Chief Minister.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. மணி.

*திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக 1980-ஆம் ஆண்டுக்கு முன்னால் பா.ஜ.க.-வினுடைய முன்னோடி அமைப்பு என்பது R.S.S. ஆக இருந்தது. 1989-ஆம் ஆண்டு வாக்கில்கூட நம்முடைய இந்தச் சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயே சுவரொட்டிகளைப் பார்க்கிறபொழுது அதனுடைய ஆரம்பக் குறிகள் இங்கே தென்பட்டன. அன்றையதினமே அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தோம். ஏதோ ஒரு ஆபத்தான விஷயம் நடக்கப் போகின்றது என்பதையெல்லாம் கொண்டு வந்தோம். ஆனால் யாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை.



1998 மே 11] [திரு. டி. மணி]

அதிலே குறிப்பாக இந்த R.S.S. என்ற இயக்கம் ஒரு சில பயிற்சிகளை ஆரம்பித்தார்கள். அது, கோயில் வளாகத்திலே அதுவும் குறிப்பாக அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயில் வளாகங்கள், அவர்களுடைய பள்ளிக்கூடங்கள், ஏதோ ஆண்டவனைப் பாதுகாப்பதற்காகக் கத்தியையும், வாளையும், கம்பையும் எடுத்துப் பயிற்சி ஏற்படுத்தினால்தான் ஆண்டவர்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்ற தவறான உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது போலும். அதெல்லாம் இவற்றினுடைய பின்னணி. ஆனால் இதில் முதலில் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு முக்கியமான பகுதியான எங்களுடைய ஊரைச் சார்ந்த, கன்னியாகுமரி மாவட்டத்திலே இரண்டு ஆதிதிராவிடர்கள் அதாவது இவர்கள் பச்சையான இந்துக்கள், இன்னொரு இந்து வாலிபன் இப்படி 3 பேரைக் கொலை செய்தார்கள். ஒரு கொலை நடந்தது. கொலை செய்யப்பட்ட இளைஞனுக்கு 20 வயது, 21 வயதுதான் இருக்கும். காவல் நிலையத்திற்கு முன்னாலேதான் கொலை நடந்திருக்கிறது. யாரும் கண்டு கொள்ளவில்லை. இதுதான் இந்த பா.ஜ.க.-வினுடைய முன்னோடி, அதாவது ஆரம்ப நிலை என்று சொல்லுகின்ற R.S.S. என்பதன் நிலை.

அதற்குப் பின்னாலே நடந்தது மண்டைக்காட்டிலே கலவரம். நம்முடைய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆருடைய காலத்திலே நடந்தது. நடந்த நிகழ்ச்சி என்னவென்று கேட்டால், ஒலிபெருக்கி வைத்ததிலே ஏற்பட்ட தகராறு. அங்கே ஒரு குருசடி இருக்கிறது. ஒழுங்காக வாரத்திற்கு ஒருகால் ஒரு கூட்டம் நடக்கும். ஒரு இடைஞ்சல் அதற்கு முன்னாலே ஏற்பட்டது இல்லை. ஆனால், இந்தச் சம்பவத்திற்கு முன்னாலே, இந்த மண்டைக்காட்டிலே இருந்த ஒரு ஒலிபெருக்கியைக் கொண்டு அவர்களுடைய குருசடிக்கு நேராக வைத்தார்கள். அதிலேயிருந்துதான் சண்டை ஆரம்பித்தது. அப்புறம் அது துப்பாக்கிச் சூட்டிலே போய் பலபேர் இறக்க வேண்டிய துரதிருஷ்டமான நிலை உருவானது. அதனுடைய விளைவுகளையெல்லாம் அந்தப் பகுதி மக்கள்-கிருத்தவர்களும், இந்துக்களும், அல்லாதவர்களும்தான் சந்தித்தார்கள்.

அதற்கு அடுத்த கட்டமாக, இவர்கள் ஒரு பெரிய பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டார்கள். இந்துக்கள் யாரும் கிருத்தவன் கடையிலே போய் பொருள் வாங்காதே; இந்துக்கள் யாரும்

இஸ்லாமியர்களுடைய கடையிலே போய் பொருள் வாங்காதே. அதையும் அந்தக் காலகட்டத்திலே இருந்த அரசாங்கத்தினுடைய அதிகாரிகளுடைய, காவல் துறையினுடைய கவனத்திற்கெல்லாம் கொண்டு வந்தோம். ஆனால் யாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை. அதனுடைய விளைவுக்ள் இப்பொழுது எங்கே போய் நிற்கின்றது? எனவேதான் இந்த விஷயத்திலே எங்களுடைய கட்சியினுடைய, நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விழைகின்றேன்.

ஏற்கெனவே சட்டமன்றத்திலே வெள்ளை அறிக்கை வைத்ததை வரவேற்கின்றேன். தீவிரவாதிகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைக்க அரசு எடுத்த முடிவையும், அதுபோன்று அல்-உம்மா இயக்கத்தையும் அகில இந்திய ஜிஹாத் கமிட்டியையும் தடை செய்ததையும், தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடக மாநில காவல் துறை இயக்குநர்கள், பாண்டிச்சேரி காவல் துறைத் தலைவர், இவர்கள் மாதாமாதம் கூட்டங்களை நடத்தி தீவிரவாதிகளைக் கண்காணித்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க முடிவாகி உள்ளதையும், அரசு பல எச்சரிக்கைகள் செய்தும் உரிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் எடுக்காத காவல் துறை அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாக வெள்ளை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளதையும் வரவேற்கிறேன்.

அதிலே ஒன்றுதான், இந்தக் கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிலே--இது ஒரு முக்கியமான சமாச்சாரம்-- காவல் துறை கொஞ்சம் அசதியாக இருந்ததினுடைய விளைவு என்று நாங்கள் கருதுகிறோம். அதற்கு மேலே ஒரு கடுமையான நடவடிக்கை இதிலே எடுத்திருக்க வேண்டுமென்பது எங்களுடைய நிலை.

கோவை குண்டு வெடிப்புக்குப் பிறகு அரசு வேகமாகச் செயல்பட்டு தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து கைது செய்ததையும் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகளைக் கண்டுபிடித்து மேலும் அதைத் தேடுதல் செய்வதில், தீவிரப் பணிகள் நடத்தி வருவதையும் வரவேற்கிறேன்.

ஓய்வு பெற்ற நீதிபதி பி. ஆர். கோகுலகிருஷ்ணன் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டிருப்பதையும், இக்குழு கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததற்கான சூழ்நிலைகள் குறித்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட



வேண்டியது குறித்தும் இதுபோன்ற சம்பவங்களைத் தடுப்பதற்காக வன்முறைகள் குறித்து ஆராய்ந்தும் அக்குழு அறிக்கை தரும் என்ற ஏற்பாட்டையும் வரவேற்கின்றேன்.

முற்பகல் 11-05

தீவிரவாதத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த அரசு ஒரு தடைச் சட்டம் கொண்டுவர இருப்பதையும், கோவை குண்டு வெடிப்புச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ரூ. 6 கோடிக்கும் அதிகமான தொகையை வழங்கி இன்னும் அதற்கு மேலே அதனுடைய விசாரணை பூராவும் முடிந்ததற்குப் பின்னால் அதிகப்படியான நிதியைக் கொடுப்பதாகக் கூறியிருப்பதையும் வரவேற்கின்றேன். கோவை குண்டு வெடிப்புக்குக் காரணம் பாபர் மசூதி இடிப்புதான். ஏற்கெனவே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் இந்தக் காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு மூலகாரணம் என்பதே, இந்த பாபர் மசூதியை உடைத்ததனுடைய பின்னணிதான் என்பது எங்களுடைய அழுத்தமான நம்பிக்கையாக இருக்கின்றது. ஆகவே, அது சம்பந்தமாக அறிக்கையில் கூறப்பட்டுள்ள நிலையும் சரியானதே.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு மத வெறியர்கள் குண்டுக் கலாச்சாரத்தை அமல்படுத்த ஆரம்பித்தார்கள் என்பது சரியல்ல. R.S.S. அலுவலகம் குண்டு வைத்து உடைக்கப்பட்டதும் இந்து முன்னணி அலுவலகம் குண்டு வைத்து உடைக்கப்பட்டதுமான இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடந்தவைதான். எனவே இது யார் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டது, யார் மீது பழி போடுவது என்பது நம் நோக்கமாக இருக்கக்கூடாது. ஏனென்றால் ஒரு துரதிருஷ்டவசமான சம்பவம் நடந்திருக்கிறது. இது யார் காலத்திலே நடந்தது? எப்படிச் செய்தார்கள் என்பதற்குப் பதிலாக அவை நடவாமல் தடுப்பதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து எப்படி ஓர் இயக்கத்தை, எப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஏன் இந்த நிலை ஏற்பட்டது, இதற்கு என்ன காரணம், இனிமேல் இவை வளராமல் எப்படி ஒடுக்கப்பட வேண்டும் என்பதில்தான் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இந்து மதத் தீவிரவாதிகள் முஸ்லீம் மக்களின் மனம் நோகும்படி அந்த மதத்தைக் கேவலமாகப் பேசுவதும், முஸ்லீம் பெண்களை

ஆபாசமாக விமர்சிப்பதும் போன்ற மேடைப் பேச்சுக்களை அரசாங்கம் தடை செய்ய வேண்டும். இப்படி இவர்கள் பேசுவதால் முஸ்லீம் தீவிரவாதிகள் இந்துக் கடவுள்களைப் பற்றியும், இந்து மக்களைப் பற்றியும் தாக்கிப் பேசுகின்றார்கள். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இந்த கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்திலே கேரளத்திலேயிருந்து கைது செய்திருக்கக்கூடிய மதானி என்கின்ற நபர் பேசினால் சாதாரணமாக 1½ மணி, 2 மணி நேரம் பேசுவார். பேச்சிலே பெரும் பகுதியும் இந்து கலாச்சாரத்தையும் இந்து மக்களையும் இழிவுபடுத்தக்கூடிய அளவிலேதான். முஸ்லிம்களை வெறியூட்டக்கூடிய அளவிலேதான் இருக்கும். எனவே அப்படிப்பட்ட அந்த அமைப்புக்களைத் தடை செய்ய வேண்டும். ஆனால் அந்தக் கால கட்டத்திலே அரசும் காவல் துறையும் இதைக் கண்காணித்திருக்க வேண்டும். இதிலே ஏற்பட்ட தவறுதான் இந்த நிலைக்குக் காரணம். இப்படி இரண்டு சாராரையும் தடை செய்ய வேண்டும். இப்படிப் பேசுகிறவர்கள்மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொண்டு கடுமையாகத் தண்டிக்க வேண்டும். பல இடங்களில் மதக் கலவரங்கள் ஏற்படுவதற்கு இவை காரணம் ஆகின்றன. அரசியல் கட்சிகள், மதச் சார்பற்ற கட்சிகள் கறாராக ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும். நான் ஏற்கெனவே இது சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறேன். நம்முடைய அரசியல் கட்சிகள் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, நாம் மத சம்பந்தமான மாநாடுகளிலும் ஜாதி சம்பந்தமான மகாநாடுகளிலும் கலந்து கொள்வதைக் கறாராக மறுக்க வேண்டும், வெறுக்க வேண்டும். அதிலே கலந்துகொள்ளக் கூடாது என்ற ஒரு முடிவுக்கு நாம் வர வேண்டும், அப்போதுதான் இதிலே இருக்கக்கூடிய அந்த ஊசலாட்டங்களெல்லாம் கொஞ்சம் குறையும். எனவே ஒரு மதத்தைப் பற்றி மற்றொரு மதம் வெளியிடும் சவால் விடும் சுவரொட்டிகளைத் தடை செய்ய வேண்டும். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். காவல் துறையினர் மதக்கலவரம் எப்படி, எவ்வளவு ஆபத்தானது? இதில் அவர்கள் எப்படி மதச்சார்பற்ற நிலையில் இருந்து அணுக வேண்டும்? அவர்களுக்கு எந்த அளவில் இதில் சமூகப் பொறுப்புக்கள் இருக்கின்றன என்பது பற்றி காவல் துறைக்கு நம்முடைய அரசு ஒரு பயிற்சி கொடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனக்கு முன்னாலே பேசிய சில சட்டமன்ற உறுப்பினர்கள்கூடச் சொன்னார்கள். காவல் துறை அதிகாரிகள், எனக்குத் தெரிந்த



வரையில் பல அதிகாரிகள் இருக்கின்றார்கள். ஆங்காங்கே நடக்கக்கூடிய 'ஷாகா' என்று சொல்லக் கூடிய பயிற்சிக்கு இவர்களே ஏற்பாடு செய்து கொடுக்கின்றார்கள். நாம் அதைக் கண்டு கொள்வதில்லை. அதிலும் குறிப்பாக இப்போது நடந்து முடிந்த தேர்தலிலேகூட— நான் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்—. நித்திரவிளை காவல் நிலையத்திலே இருக்கக்கூடிய ஒரு அதிகாரி, அதிகாரி என்று சொன்னால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அய்யப்பன் தம்பி, அந்தத் தேர்தலிலே முழுக்க முழுக்க பா.ஜ.க.-வுக்கு ஆதரவாக மற்றப் பிரிவு ஆட்கள் வாக்களிக்க முடியாத ஒரு சூழ்நிலையை அங்கே உருவாக்கினார். ஆனால் இன்னும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. நான் அதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கின்றேன். இப்படிப்பட்டவர்கள் இந்த காவல் துறையிலே இருந்தால் எப்படி நாம் மத நல்லிணக்கத்தை உருவாக்க முடியும்? ஆகவே இதிலே இப்படி ஒரு பயிற்சியை நாம் காவல் துறைக்குத் தர வேண்டும் என்று சொல்கின்றேன். காவல் துறைக்கும் இதிலே மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது. மதச் சார்பற்ற நிலையிலே இருக்கின்ற அதிகாரிகளைக் கண்டறிவதும் ஒரு முக்கியமான அம்சம் ஆக இருக்கின்றது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 11-10

காவலர் செல்வராஜ் முஸ்லீம் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதற்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும். R.S.S. இந்து முன்னணி, பாரதிய ஜனதா கட்சி போன்றவை சட்டத்தைக் கையில் எடுக்க யார் அதிகாரத்தைக் கொடுத்தார்கள் என்பதையும் நாம் கண்டறிய வேண்டும். அவர்கள் சேர்ந்து 18 முஸ்லீம்களைக் கொன்றதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இப்படிப்பட்ட தீவிரவாத அமைப்புகளைத் தடை செய்வதில் தவறு இல்லை. 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள் என்பதற்காக, முஸ்லீம் தீவிரவாதிகள் அதற்குப் பழி தீர்க்கும் வகையில் குண்டுமாரி பொழிந்து 60 பேர் கொல்லப்பட்டனர். 200 பேருக்கு மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். கோவை நகரமே நடுங்கிப் போனது. ஒரு கொடுமையான நிகழ்ச்சி என்று நாம் அதைச் சொல்லலாம். அப்படிப்பட்ட ஒரு கொடுமையான நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

[திரு. டி. மணி] [1998 மே 11

ஒரு மதவெறி இன்னொரு மதவெறிக்கு மாற்றாக இருக்க முடியாது. பழிக்குப்பழி என்றால் இது எங்கு போய் முடியும்? 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள் என்றால் அதற்குக் காரணமானவர்களைச் சட்டம்தான் தண்டிக்க வேண்டும். தனி மனிதர்களோ, தனி அமைப்புகளோ சட்டத்தைக் கையில் எடுக்கக்கூடாது. இரண்டு மதத் தீவிரவாதத்தையும் மக்கள் புறக்கணிக்க வேண்டும். மத மோதல், மதத் தீவிரம், பயங்கரவாதம் போன்றவற்றை எந்த அரசியல் கட்சியும் தங்களின் குறுகிய அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது. மக்களின் ஒற்றுமைக்கு, நாட்டின் நலனுக்கு எதிராக இருக்கும் மதத் தீவிரவாதத்தை எல்லோரும் பொதுப் பிரச்சினையாகப் பார்த்து, இதை ஒழிப்பதற்கு உதவ வேண்டும். எல்லா மாவட்டங்களிலும், தாலூகாக்களிலும் மதவெறியைப் போக்குவதற்கு சமூகப் பிரமுகர்கள், அரசியல் கட்சித் தலைவர்களைக் கொண்ட 'மத நல்லிணக்கக் குழுக்களை அமைத்து மக்களின் ஒற்றுமையைக் காக்கப் பாடுபடவேண்டும். சோதனை என்ற பெயரில் முஸ்லீம் அப்பாவி மக்களை, காவல் துறையினர் அலைக்கழிப்பதாகத் தெரிகிறது. அவர்கள் மத்தியிலுள்ள அச்சத்தைப் போக்க சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க, வேண்டும்.

கோவையில் முஸ்லீம் இளைஞர்களுக்கு வேலை மறுக்கப்படுவது இன்று ஒரு சாதாரண நிகழ்ச்சியாக நடந்து வருவதாகக் கூறப்படுகிறது. அதுபோன்று, குடியிருப்புகளிலிருந்தும் அவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற வாதத்தை வைத்து B.J.P., R.S.S. அமைப்புகள் நிர்பந்தம் கொடுத்து வருகின்றன. முஸ்லீம் இளைஞர்களுக்கு வேலை போனால், பறிக்கப்பட்டால் அவர்கள் விரக்தியின் எல்லைக்கே சென்று, தீவிரவாதிகளின் கையில் சிக்கிவிட ஏதுவாகும். தமிழக அரசு இப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும். கோவை நகரில் முஸ்லீம்கள் தங்கள் வீடுகளைக் காலி செய்ய வேண்டும் என்பது இப்போது சாதாரணமாக சொல்லக்கூடிய விஷயம். ஆகவே இதிலே கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதை எனது வேண்டுகோளாகச் சொல்கிறேன். தமிழக அரசும், ஜனநாயகச் சக்திகளும் விழிப்புடன் இருந்து மதத் தீவிரவாதத்தை அடியோடு வேரறுக்க, தொடர்ந்து கண்காணிக்க முன்வர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கருத்தைச் சொல்லி முடிக்கிறேன்.



1998 மே 11]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசின் சார்பில் வைக்கப்பட்டுள்ள இந்த வெள்ளை அறிக்கை மீது எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., பெருந்தலைவர் காமராஜர், இன்றைய முதல்வர் கலைஞர் இப்படி கடந்த 50 ஆண்டுகளாக, ஜாதி, மத எல்லைகளைக் கடந்த தலைவர்களாக, முதலமைச்சர்களாக இருந்து, தமிழ்நாட்டில் தொடர்ந்து மத நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் காப்பாற்றி வந்திருக்கிறார்கள்.

பொதுவாகவே தமிழக மக்கள் மிகவும் அமைதியான இயல்புடையவர்கள். வன்முறையில் நாட்டம் இல்லாதவர்கள். இங்கே இந்துக்களும், இஸ்லாமியர்களும், கிருத்துவர்களும் இப்படி எல்லோரும் மாமன் மைத்துனர் என்ற முறை சொல்லி அழைக்கக்கூடிய அளவுக்கு, அண்ணன் தம்பிகள் என்று உறவு கொண்டாடக்கூடிய அளவுக்கு, கடந்த காலங்களிலே மிக இணக்கமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இப்படி மத நல்லிணக்கம் நிலவிய தமிழகத்தில், அமைதிப் பூங்காவாகத் தொடர்ந்து எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, அது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, அதற்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க.வாக இருந்தாலும் சரி, தி.மு.க.வாக இருந்தாலும் சரி, எல்லாக் காலங்களிலும், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, தமிழகம் ஒரு பொதுவான அமைதியான மாநிலம் என்கிற, ஒரு புகழுக்குரிய, பெருமைக்குரிய மாநிலமாக இந்த மாநிலம் தொடர்ந்து திகழ்ந்து வந்திருக்கிறது.

*முற்பகல் 11–15*

இந்த மாநிலத்தில் சமீபகாலமாக, சமீபகாலமாக என்றால் பல ஆண்டுகளாக, கொஞ்சம் கொஞ்சமாக மத வெறியும், ஜாதி வெறியும் அதிகரித்து வருவது உண்மையிலேயே கவலைக்குரியது. பொதுவாக மதவெறி என்பது, அது மதவெறியாக இருந்தாலும் சரி, ஜாதி வெறியாக இருந்தாலும் சரி, இந்த இரண்டு வெறிகளும் அபினைவிட அதிகமாக போதை தரக்கூடியது என்பார்கள். எனவே, இந்த நிலை கொஞ்சம் கொஞ்சமாக எப்படித் தமிழகத்திலே வளர்ந்திருக்கிறது

என்பதைப் பார்க்கிறபோது, 1992 டிசம்பர் 6-ஆம் தேதி அயோத்தியிலே பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அது இந்தியாவினுடைய வரலாற்றில் ஒரு கருப்பு நாள்; இந்தச் சம்பவம் ஒரு மதச் சார்பற்ற இந்திய நாட்டில் நிகழ்ந்துள்ள ஒரு கரும்புள்ளி; ஒரு வரலாற்று அசிங்கம். இதனாலே இந்திய நாடு முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கிற இஸ்லாமியப் பெருமக்கள் மனம் புண்பட்டார்கள். ஆனாலும்கூட, அந்தச் சூழ்நிலையிலேயும் தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிற இஸ்லாமியப் பெருமக்கள் அமைதிதான் காத்தார்கள். வட மாநிலங்களிலே பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குப் பின்னாலே வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தபோதெல்லாம் கூட, தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருந்த இஸ்லாமியப் பெருமக்கள் அதையொட்டி வன்முறைச் சம்பவங்களிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. ஆனால் ஆறாத மனப் புண், மன வடு, மன வருத்தம், இஸ்லாமியத் தோழர்கள் அத்தனை பேருக்கும் ஏற்பட்டது. இதற்கு யார் காரணம்?

இன்னும் சொல்லப் போனால், இப்போது இங்கேயிருக்கிற இந்த மதவெறிக்கு விரோதமாக, தீவிரவாதத்திற்கு விரோதமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிற சிலர் அல்லது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், முதலமைச்சர்கள் மாநாட்டிலே கலந்து கொண்டு முன்னாள் முதலமைச்சர் பேசியபோது, அதை அன்றைய பா.ஜ.க. தலைவர்கள், இன்றைய பிரதமரும் சரி, உள்துறை அமைச்சரும் சரி,--பா.ஜ.க. முதலமைச்சர்கள் அந்த மாநாட்டிலே கலந்துகொள்ளவில்லை. எனவே, அவர்கள்--வெளியே சொன்னார்கள். எங்களுடைய பா.ஜ.க. முதலமைச்சர்கள் கலந்து கொண்டிருந்தால், இந்த முதலமைச்சர்கள் கூட்டத்திலே என்ன பேசியிருப்பார்களோ, அதைத்தான் தமிழ்நாட்டிலேயிருந்து வந்து பேசிய முதலமைச்சர் பேசினார் என்று சொல்லி, அன்றைக்குப் பகிரங்கமாகவே பத்திரிகையிலே வெளியே சொன்னார்கள். இப்படிப் பலரும் பாபர் மசூதி இடிப்பதற்கு அன்றைக்குக் காரணமாக இருந்த சூழ்நிலை உருவானது.

அதற்குப் பின்னாலே, இங்கே 28-1-1997-லே ஜிஹாத் கமிட்டியினுடைய தலைவராக இருந்த பழனிபாபா படுகொலை செய்யப்பட்டார். அதைவிட இஸ்லாமியத் தோழர்களுக்கு, அல்லது இளைஞர்களுக்கு அதிகமான கோபம் வந்ததற்குக் காரணம் என்ன? கோபம் கொண்டதற்குக் காரணம் என்ன? கோவையில் 29-11-1997-லே செல்வராஜ் என்கிற ஒரு காவலர், அவர் பணியிலே



இருக்கிறார், பணியிலே இருக்கிறபோது இரண்டு பேர்கள் ஸ்கூட்டரிலே கடந்து போகிறார்கள். அந்த நேரத்திலே, அவர்களுக்குள்ளே பிரச்சினை ஏற்பட்டு, அந்தக் காவலர் செல்வராஜ் கொல்லப்படுகிறார். அவர் ஒரு இந்து. இந்து என்கிற காரணத்தாலே மட்டும், அதைத் தொடர்ந்து அந்த வன்முறைச் சம்பவங்கள் நடந்துவிடவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அவர் ஒரு காவலர் என்ற காரணத்தாலே--பொதுவாக போலீஸ்காரர் தாக்கப்பட்டால், சாதாரணமாக மற்றவர்கள் தாக்கப்படுகிறபோது வருகிற கோபத்தைவிட, பல மடங்கு போலீஸ்காரர்களுக்குக் கோபம் வரும். அது இயற்கை. எனவே, அந்த உணர்வோடு அதைத் தொடர்ந்து கோவையிலே வன்முறை நிகழ்ந்தது. இந்த வன்முறையிலே ஏறக்குறைய 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள். முஸ்லீம் பெருமக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியிலே புகுந்து, மிகப் பெரிய அளவிலே ஒரு கொள்ளையடிக்கப்பட்டது என்று சொல்லக்கூடிய அளவிற்கு மிகப் பெரிய பாதிப்பு, கோட்டைமேட்டிலே, கோவை பகுதியிலே வாழ்கின்ற இஸ்லாமியப் பெருமக்களுக்கு ஏற்பட்டது உண்மை.

முற்பகல் 11-20

இதற்குக் காரணமாக இருந்தது, அங்கேயிருந்த காவல் துறை. தமிழகம் முழுவதும் இருக்கிற காவல் துறையே இதற்குப் பொறுப்பு என்று சொல்ல மாட்டேன். அங்கேயிருந்த காவலர்களில் சிலர் அல்லது அதிகாரிகளில் சிலர் இதற்குக் காரணமாக இருந்தார்கள். இன்னும் சொல்லப் போனால் இந்த வன்முறையை ஏவிவிட்டதே அவர்கள்தான் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இஸ்லாமிய தோழர்கள் மத்தியிலே அந்த எண்ணம் இருந்தது. பெரிய கடைகள் எல்லாம் சூறையாடப்பட்டன. பெரிய பாதிப்பு இஸ்லாமிய தோழர்களுக்கு ஏற்பட்டது. பலபேரும்--மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நானும், பலரும் பெரும்பாலான எல்லாத் தலைவர்களும் அங்கே சென்று பார்த்தோம். நானும்கூட அந்தப் பகுதியிலே பாதிப்பு ஏற்பட்டபோது, கோவையிலே சென்று பார்த்தபோது, அவர்கள் சொன்னது சிலபேர் கோபத்திலே இளைஞர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். "கூட்டமாகச் சேர்ந்து கொண்டு சிறுபான்மையாக இருக்கின்ற எங்கள் மீது இது போன்ற தொல்லைகளை, கொலைகளை, வன்முறைகளை, கொள்ளைகளை நிகழ்த்தியிருக்கிறீர்கள். இதற்கு நாங்கள் பழிக்குப் பழி வாங்காமல்

219096.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 மே 11

விட மாட்டோம்" என்று சொல்லக் கூடிய அளவிற்கு, ஒரு சபதம் எடுத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு இஸ்லாமிய இளைஞர்களுடைய மனம் இந்தச் சம்பவத்தாலே புண்பட்டது. எனவே இதைத் தொடர்ந்து பல இடங்களிலே அந்தப் பழி வாங்குகிற செயலிலே இஸ்லாமிய இளைஞர்கள் பல்வேறு பிரிவுகளின் கீழ் இந்தத் தீவிரவாதத்திலே ஈடுபடத் துவங்கினார்கள். அதுதான (திருச்சி) பாண்டியன் விரைவு வண்டியிலே குண்டுவைத்தது. ஈரோடிற்கு அருகிலே சேரன் எக்ஸ்பிரஸ்ஸிலே குண்டு வெடித்தது. தொடர்ந்து நடைபெற்றன சில வன்முறைச் சம்பவங்கள்.

இறுதியாக 14-2-1998-லே கோவையிலே நடைபெற்ற வெடிகுண்டுச் சம்பவம், இஸ்லாமிய இளைஞர்கள் சிலர் பழி வாங்குகிற நோக்கோடு செயல்பட்ட இந்தச் சம்பவத்திலே ஏறக்குறைய 46 இந்துக்கள்--இது அரசினுடைய அறிக்கைப்படி- இன்னும் 1, 2 பேர் கூடக்குறைய இருக்கலாம். அல்லது பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்துக்கள் பெருமளவில் இந்தச் சம்பவத்திலே பாதிக்கப்பட்டார்கள். இது இஸ்லாமியத் தோழர்கள் பாதிக்கப்படுகிறபோது, குடும்பங்கள் பாதிக்கப்படுகிறபோது, சில இளைஞர்கள் தீவிரவாதிகளாக மாறி, இந்துக்களைப் பழி வாங்குகிற நிலைமையும், அது போன்று இந்துக்கள் பாதிக்கப்படுகிறபோது, அதிலே சில தீவிரவாத அமைப்புகள் அல்லது சில இளைஞர்கள் பழி வாங்குவதற்காக இஸ்லாமியத் தோழர்களை, இஸ்லாமியக் குடும்பங்களைப் பழி வாங்குகிற சூழ்நிலையும், அதற்கு இன்னும் ஒரு படி மேலே சென்று, பொது மக்களைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு, பொது இடங்களை அழிக்கிற முயற்சியிலே, பொது மக்களுக்குத் தொல்லை தருகிற விதத்திலே, பொது மக்களைக் கொல்லுகிற முயற்சியிலே, கொலை செய்கிற முயற்சியிலே ஈடுபடுகிற சூழ்நிலையும் சில சம்பவங்களால் வந்துள்ளன என்பது உண்மை. அதற்குப் பின்னாலும், பொறுப்பேற்றிருக்கிற ஒரு மாநில அரசு இதிலே என்ன செய்தது என்கிறபோது- ஒரு அரசாங்கம் என்ன செய்ய முடியும் என்கிறபோது- அப்படிச் செய்ய வேண்டிய காரியங்களை இந்த அரசாங்கம் செய்திருக்கிறதா என்று நடுநிலையோடு பார்க்க வேண்டியது அவசியமாகும். இந்த வன்முறைகள் நிகழ்ந்தவுடனே, மாநில அரசின் சார்பிலே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.



1998 மே 11] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

பொதுவாக இந்தச் சம்பவம் 14-ஆம் தேதி நடக்கிறது. நடந்தவுடனே பெரிய அளவிலே வன்முறை, வெடிகுண்டுச் சம்பவம் நிகழ்ந்தவுடனேயே, இரண்டு மணி நேரத்திற்குள்ளாகவே, நாட்கணக்கிலேகூட அல்லாமல், இரண்டு தீவிரவாத அமைப்புகள் தடை செய்யப்படுகின்றன, மாநில அரசாலே. அல்-உம்மா, ஜிஹாத் கமிட்டி. இந்த இரண்டு இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளும் தடை செய்யப்பட்டு, அலுவலகம் சீல் வைக்கப்பட்டு, இந்தத் தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்த அல்-உம்மா இயக்கத்திலே 53 பேர்கள், ஜிஹாத் கமிட்டியிலே 65 பேர்கள், கைது செய்யப்பட்டு, இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் வேகமாக எடுக்கிறது. அதைத் தொடர்ந்து முன்னாள் தலைமை நீதிபதி திரு. கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே இந்தச் சம்பவங்கள் ஏன் நிகழ்ந்தன, எப்படித் தடுக்கப்பட வேண்டும், என்ன நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் ஆய்வு செய்ய ஒரு கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. அதன் தீர்ப்பு வர காலதாமதம் ஆகலாம் என்கிற காரணத்தினாலே ஏறக்குறைய 6½ கோடி ரூபாய் இடைக்கால நிவாரண நிதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசின் சார்பிலே வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-25

இது தவிர, மாநில அரசு இந்தத் தீவிரவாதத்திலே ஈடுபடுகிற தீவிரவாதிகளை உடனடியாகத் தண்டிப்பதற்காக, தனி கோர்ட் (Special Court) அமைக்க வேண்டும் என்ற அந்த முயற்சிலே ஈடுபடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக உயர் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று இந்தத் தனி கோர்ட் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுபோல, முழுமையாகத் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த தனிச் சட்டம் கொண்டு வருவது பற்றி யோசிப்போம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அந்தச் சட்டத்தையும் உடனடியாகக் கொண்டு வந்து நிறைவேற்ற தமிழக அரசு முன்வர வேண்டுமென்கிற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சம்பவம் எல்லாம் நடந்து காவல் துறை முழுமையாக முடுக்கிவிடப்பட்டு--புள்ளிவிவரங்கள் எல்லாம் தேவையில்லை, என்னென்ன எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டன என்பதற்கு--

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 மே 11

சென்னையிலே மட்டும், ஏறக்குறைய 1042 electric detonators 1102 சாதாரண detonators, நாட்டு வெடி குண்டுகள், பெட்ரோல் வெடிகுண்டுகள், ஜெலட்டின் குச்சிகள், இப்படிப்பட்டவை சென்னையிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதுபோல, துப்பாக்கியிலே இருந்து, ரிவால்வரிலேயிருந்து, வெடிகுண்டுகளிலேயிருந்து இப்படிப் பலவும் தமிழ்நாடு முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தினம் தினம் கண்டுபிடிக்கப்படுகிற செய்திகள், கைது செய்யப்படுகிறவர்களுடைய விவரங்கள், இவையெல்லாம் பத்திரிகைகளிலே வருகின்றன.

இப்போது இந்த வெள்ளை அறிக்கை வைக்க வேண்டிய நிலையே கூட ஏன் ஏற்பட்டது என்று சொன்னால், அதற்குக் காரணம் தமிழ்நாட்டிலே சட்டம்- ஒழுங்கு பரிபூரணமாகக் கெட்டுவிட்டது என்று கூறி தமிழக அரசை உடனடியாகக் கலைக்க வேண்டும் என்கிற கோரிக்கையை சிலபேர் வற்புறுத்தி வருகிறார்கள். இந்தக் கோரிக்கையிலே நியாயம் இருக்கிறதா, நிகழ்ந்து இருக்கிற வெடிகுண்டு சம்பவங்களினாலே இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டிய ஆட்சிதானா என்பதையெல்லாம் விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்புத் தருகிற விதத்திலே, அதன்மூலம் நாட்டு மக்களும் தெளிவடைய வேண்டும், மத்திய அரசும் தெளிவடைய வேண்டும். இன்றைக்கு இப்படிக் கலைக்க வேண்டும என்று--முதலமைச்சர் கூட இங்கே பேசுகிறபோது சில பேர் கலைக்க வேண்டும், கலைக்க வேண்டும் என்று சொல்லியே களைத்துப் போய் விட்டார்கள் என்று சொன்னார்கள்- களைத்துப் போவது மட்டுமல்ல; இன்னும் காலப்போக்கிலே அவர்கள் இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால் இளைத்தும் போவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்தக் கோரிக்கை வேகமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது.

மத்தியிலே நடைபெற்றுக் கொண்டிருந்த மத்திய அரசு கவிழ்ந்து தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலிலே பா.ஜ.க. கூட்டணி பெரும்பான்மை பெற்றது தமிழ்நாட்டிலே. உண்மைதான். அதற்கான காரணங்களை நாம் ஏற்கெனவே பலமுறை விவாதித்துள்ளோம். அதிலே முக்கியமான காரணமாக ஒரு நிலையான ஆட்சியை மத்தியிலே தருவோம் என்கிற ஒரு கவர்ச்சிகரமான கோஷத்தை மக்களிடத்திலே வைத்து, பிரதமர் யார் என்பதையும் சுட்டிக்காட்டி வாக்குகளை மக்களிடத்திலே பெற்றார்கள். அன்றைக்கு எப்படி



1998 மே 11] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மக்களிடத்திலே ஒரு நிலையான ஆட்சி, யார் பிரதமர் என்றெல்லாம் சொல்லி வாக்குக் கேட்டார்களோ, அந்த நிலையான ஆட்சி நடப்பதற்கு அப்படி வாக்குக் கேட்டவர்கள் உதவியாக இருக்கிறார்களா என்பதையும் நாட்டு மக்கள் இன்றைக்குச் சிந்தித்துப் பார்க்கிறார்கள். பாவம் வாஜ்பாய். கிராமத்திலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். புலிவால் பிடித்த நாயர் கதை என்று சொல்லுவார்கள். புலியைப் பிடிக்கவும் முடியவில்லை, அடக்கவும் முடியவில்லை, விடவும் முடியவில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்றைக்கு வாஜ்பாய் அவர்கள் மிகவும் சிரமப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அடிக்கடி கூட்டணியிலே இருக்கிற சிலருக்குக் கோபம் வருவதாலே டெல்லியிலேயிருந்து சமாதானம் செய்ய இரவோடு இரவாக தூதுவர்கள் வர வேண்டியிருக்கிறது. டெல்லியிலே இருக்கிற வடநாட்டு எம்.பி. கூட என்னிடத்திலே விளையாட்டாகக் கேட்டார், என்ன சிலருடைய கோபத்தைத் தணிப்பதற்கு டெல்லியிலேயிருந்து இவ்வளவு தூரம் சில பேர் வர வேண்டியிருக்கிறதே, இந்தக் கோபத்தைத் தணிக்க தமிழ்நாட்டிலே யாரும் ஆளே இல்லையா என்றுகூட விளையாட்டாக ஒரு வடநாட்டு எம்.பி. என்னிடத்திலே கேட்டார். அதுமாதிரி வந்து சமாதானம் செய்ய, கோபத்தைத் தணிக்க டெல்லியிலே திரு. வாஜ்பாய், அத்வானி எல்லாம் சேர்ந்து அதிலேயும் ஒருத்தர் யாரையாவது செலக்ட் பண்ணி அனுப்ப வேண்டியிருக்கிறது. இதற்கும் பின்னாலேயும் கோபம் தணிந்ததா என்றால் கோபம் தணியவில்லை. இதற்கு என்ன காரணம்? உண்மையிலேயே இப்போது தினம் தினம் வெடிகுண்டு வெடித்துக்கொண்டிருக்கிறதா? பொது மக்கள் மத்தியிலே இந்தத் தலைவர்கள் விடுகிற அறிக்கைதான் பீதியை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறதே தவிர பொதுமக்கள் நிம்மதியாகத்தான் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

முற்பகல் 11-30

இன்னும் நான் சொல்வேன். சட்டம்-- ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய ஒரு பொறுப்பு என்பது மாநில அரசுக்கு மட்டும்தான் இருக்கிறதா? ஒரு கூட்டமைப்பிலே கூட்டாட்சி முறையில் மத்திய அரசுக்கு அதில் பங்கு இல்லையா? இங்கே ஜனதா தள உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பான I.S.I. சார்பிலே இங்கே ஊடுருவல் இருக்கிறது என்று சொன்னால் அதற்காக கலைக்க வேண்டும் என்று சொன்னால் அதற்காக

கலைக்கப்பட வேண்டிய அரசு மாநில அரசு அல்ல; மத்திய அரசு தானே தவிர மாநில அரசு என்ன செய்ய முடியும்? எனவே மத்திய அரசுக்கு அதில் பொறுப்பு இல்லையா? இன்னும் சொல்லப்போனால் சில பத்திரிகைகளிலேகூட செய்தி வந்திருக்கிறது. இரண்டு நாளைக்கு முன்னாலே ஒரு மாலை பத்திரிகையிலே I.S.I. அமைப்பிற்கும் தி.மு.கவிற்கும் தொடர்பு இருக்கிறது என்று ஒரு செய்தி வந்திருக்கிறது. இரண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் I.S.I. அமைப்போடு இரகசியமாக பேசினார்கள் என்றெல்லாம் செய்தி வந்திருக்கிறது. அதை ஏன் நீங்கள் மறுக்கவில்லை என்றுகூட எனக்குத் தெரியவில்லை. கட்சியின் சார்பிலே மறுப்பு வரவில்லை. அரசின் சார்பிலேயும் மறுப்பு ஏதும் வரவில்லை. இங்கே நீங்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலேகூட அப்படி தகவல் ஏதும் இல்லை என்றுதான் சொலலியிருக்கிறார்கள். எனவே ஒருசில பத்திரிகைகளிலே இப்படிப்பட்ட தவறான செய்திகளும் சொல்லப்படுகின்றன; பேசப்படுகின்றன என்கிற அடிப்படையிலே பொது மக்களிடத்திலே பீதியைக் கிளப்பக்கூடிய அளவுக்கு வெளிவருகின்றன. எனவே இதற்கான காரணம் என்ன, (மணியடிக்கப்பெற்றது) நோக்கம் என்னவென்றால் தமிழ்நாட்டு மக்கள் சிக்கலிலே இல்லை. துயரத்திலே இல்லை. ஒரு சில தலைவர்கள் சிக்கலிலே இருக்கிறார்கள். இப்படிச் சிக்கலிலே இருக்கிற ஒருசில பேர், இந்த ஆட்சி கலைக்கப்பட்டு--கலைத்தால் மீண்டும் தாங்கள் ஆட்சிக்கு வந்துவிட முடியும் என்று நம்புகிற காரணத்தினாலே, மத்திய அரசு ஒரு பலவீனமான மத்திய அரசாக இருக்கிற காரணத்தினாலே, பெரும்பான்மை அற்ற அரசாக இருக்கிற காரணத்தினாலே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மத்திய அரசை வற்புறுத்தி ஆட்சியைக் கலைத்துவிட்டு--மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். நான்கூடச் சொல்வேன். ஒருசில இடங்களிலே வெடிகுண்டுகள் வெடித்தன என்கிற காரணத்தினாலே ஆட்சி கலைக்கப்பட்டால் வருங்காலத்திலே பல மாநில ஆட்சிகள் கலைக்கப்படுவதற்கு முன் உதாரணமாக அமைந்துவிடும். எதிர்க்கட்சிகளிலேகூடச் சில வன்முறையாளர்கள் தோன்றிவிடுவார்கள். ஒன்றிரண்டு இடத்திலே குண்டு வெடித்தால் போதும். இந்த ஆட்சியைக் கலைத்துவிடலாம் என்கிற நிலைமையும் பிறகு எந்த அரசும் இந்தியாவிலே எந்த மாநிலத்திலேயும் 5 ஆண்டுகள் ஆட்சி நடத்த முடியாது என்ற ஒரு தவறான முன் உதாரணமும் இதனாலே நிச்சயமாக ஏற்பட்டுவிடும். எனவே



என்னைப் பொறுத்தவரை மத்திய அரசு இதைப்போன்ற வற்புறுத்தல்களுக்கு நிச்சயமாக ஒத்துக்கொள்ளாது. சம்மதிக்காது என்றே நம்புகிறேன். திரு. வாஜ்பாய் அவர்களைப் பொறுத்தவரை அவர் இதுபோன்ற அச்சுறுத்தல்களை மீறி இதுபோல வற்புறுத்தல்களைத் தாண்டி ஆட்சி நடத்தக்கூடிய ஒரு நடுநிலையான நல்ல மனிதராக இருப்பார் என்கிற நம்பிக்கை நடுநிலையாளர்கள் மத்தியிலே இருக்கிறது. அந்த நல்ல பெயரை திரு. வாஜ்பாய் அவர்கள் நிச்சயமாக இழக்க மாட்டார் என்றுதான் நாமெல்லாம் மனப்பூர்வமாக நம்புகிறோம். எனவே, தமிழக அரசின் சார்பிலே என்னென்ன வேண்டுகோள் வைக்கப்பட்டு இருக்கிறதோ, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற, தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த, வன்முறையை ஒடுக்க, வெடிகுண்டுக் கலாச்சாரத்தை அழிக்க தமிழக அரசு என்னென்ன உதவிகளை மத்திய அரசிடத்திலே கேட்டிருக்கிறதோ அந்த உதவிகளை மத்திய அரசு மனமுவந்து தந்து அவர்களும் பங்கேற்கச் செய்து தமிழகத்திலே பரிபூரண அமைதியை நிலைநாட்ட, தீவிரவாதத்தை ஒடுக்க மத்திய அரசும் துணை நிற்க வேண்டுமே தவிர இதிலே ஆட்சியைக் கலைப்பது என்கிற பிரச்சினையே இல்லை. அப்படி யாராவது தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று வற்புறுத்தி அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆட்சியைக் கலைப்பது என்கிற ஒரு நிலையை எடுத்தால் நிச்சயமாக அதற்குத் தமிழக மக்கள் வட்டியும் முதலுமாகச் சேர்த்து அதற்குரிய தண்டனையை நிச்சயமாக வழங்குவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

அரசின் சார்பிலே எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கைகளோடு இன்னும் ஒரு வேண்டுகோளை மட்டும் நான் சொல்வேன். இதிலே தீவிரவாதத்தில் ஈடுபடுகிற இஸ்லாமிய சகோதரர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஒருசில பேர், ஒருசில இளைஞர்கள் எல்லாம் கோர்ட்டுக்கு வருகிறபோது பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது; பாவமாக இருக்கிறது. 18, 19, 20 வயதில் இருக்கிற இளைஞர்கள், இப்படி ஒருசில பேர் - 40, 50 பேர் - இதுபோன்ற வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுகிற காரணத்தால் ஒரு சமுதாயத்திற்கே இழிவு அல்லது ஓர் அவப் பெயரை, கெட்டப் பெயரை உண்டாக்கித் தருகிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்து, அவர்கள் எல்லாம் மனம் திருந்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தின்

சார்பில் இஸ்லாமியத் தோழர்களை, இளைஞர்களை கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

இன்னும் சிலபேர் தேடப்படுகிறார்கள். அப்படித் தேடப்படுகிற இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து surrender ஆக வேண்டும். சரண் அடைய வேண்டும். சரண் என்பதை விட மனம் திருந்தி அவர்களே தங்களை மாற்றிக்கொள்ள முன்வரவேண்டும். அப்படி அவர்களே முன்வந்து தாங்களே surrender ஆகிறபோது அரசு அவர்களுக்குக் கருணை அடிப்படையில் சட்ட ரீதியாகவும் என்னவெல்லாம் உதவிகளைச் செய்ய முடியுமோ அப்படிப்பட்ட உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும். அந்த மன மாற்றத்திற்குத் தீவிரவாதத்திலே ஈடுபட்டிருக்கிற சில இஸ்லாமியத் தோழர்கள், இளைஞர்கள் தங்களை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒருசில பேர் செய்கிற காரியங்களினால் மற்ற எல்லோரும் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகக் கூடாது. எனவே, அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பைத் தந்து காவல் துறை நடுநிலையோடு செயல்படச் செய்ய வேண்டும்.

மொத்தத்திலே பெரும்பான்மையாக இருக்கிற இந்துக்கள் சிறுபான்மையாக இருக்கிற இஸ்லாமியத் தோழர்களை அரவணைத்துச் செல்லவேண்டும். சிறுபான்மையாக இருக்கிற இஸ்லாமியத் தோழர்கள் பெரும்பான்மையாக இருக்கிற இந்துக்களோடு அனுசரித்துச் செல்லவேண்டும். இந்த நிலையை இரண்டு தரப்பினரும் எடுத்து, பொதுமக்கள் மத்தியில் பயம் அற்ற நிலையை ஏற்படுத்தி, மீண்டும் தமிழகத்தில் அமைதிப் பூங்கா என்று சொல்லக்கூடிய ஒரு நிலையை உருவாக்கி இரண்டு தரப்பில் இருக்கின்ற இளைஞர்களும் யார் இந்த வன்முறை இயக்கத்திலே இருந்தாலும் சரி, அவர்கள் மனம் மாற வேண்டும், மனம் திருந்த வேண்டும், அது இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் செய்கிற, இந்த மக்களுக்கு நீங்கள் செய்கிற தொண்டு, நன்மை என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழக அரசு இந்த அவைக்குத் தந்திருக்கின்ற இந்த வெள்ளை அறிக்கையின் மீது எங்களது இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு



வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே எங்கள் இயக்கத்தை ஏற்படுத்திய நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய தலையாய கொள்கைகளில் ஒன்று இந்த நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்பது. அந்தச் சுதந்திரத்தின் வாயிலாக மதமாச்சரியங்களை எல்லாம் ஒதுக்கிவைத்து, மதம் என்று இருக்கிற பெயர்களால் வன்முறைகள் நடப்பதை எல்லாம் தவிர்த்து மனித நேயத்தை வளர்க்கின்ற ஒரு நல்ல சமுதாயத்தை அமைப்பதுதான் சுதந்திரம் பெறுவதன் தலையாய நோக்கம் என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

அதுபோலத்தான் இன்றைக்குத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசும் மதச்சார்பற்ற கொள்கையிலே மிகத் திடமாக தன்னை ஆட்படுத்திக்கொண்டு மதமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு யார் தவறு செய்தாலும்கூடத் தண்டிக்கின்ற ஒரு நல்ல மனப்பக்குவத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அரசு என்கிற காரணத்தால் இங்கு அளித்து இருக்கின்ற இந்த வெள்ளை அறிக்கையிலே எந்தவித ஒளிவு மறைவும் இல்லாமல் கடந்த காலத்தில் நடந்திருக்கின்ற சம்பவங்களை எல்லாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 2 ஆண்டுகளில் நடந்தவற்றை எல்லாம் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இந்தக் கோவை குண்டு வெடிப்பு என்பதுபோல் இந்த 2 ஆண்டுகளில் மட்டும் அல்லாது அதற்கு முந்தைய, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்திலேயும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆரம்ப காலத்திலே 1984-லே சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலே நடந்த குண்டு வெடிப்பு; அதன்மூலமாக 30 பேர் உயிர் இழந்த நிலை; அதுபோல 1987-லே நடந்த அரியலூர் இரயில் விபத்து; அதற்குப் பின்னாலே 1995-லே நடந்த பல்வேறு நிகழ்ச்சிகள். அதன்மூலமாக, இன்றைக்கு இந்தியாவைக் கோலோச்சிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு திரு. வாஜ்பாய் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, தமிழகத்தில் நடந்து இருக்கின்ற சம்பவங்களை எல்லாம் ஆராய்வதற்காக ஒரு குழுவினை சிக்கந்தர் பக்த் தலைமையிலே அனுப்பி வைத்து, அந்தக் குழு சென்னையிலே மட்டும் வந்து தங்கி, பல்வேறு இடங்களுக்கும் செல்லாத நிலையிலும், இங்கு இருக்கின்ற நிலைமைகளையெல்லாம்

[திரு. லா. சந்தானம்] [1998 மே 11

ஆராய்ச்சி செய்கிறபொழுது அன்றைக்கும் R.S.S. அலுவலகத்திலே குண்டு வெடிப்பின் காரணமாக மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை; அதுபோல இந்து முன்னணி அலுவலகத்திலே குண்டு வெடிப்பின் காரணமாக மாண்டவர்கள்; மதுரையிலேகூட இராஜகோபாலன் என்கின்ற ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்; அவற்றையெல்லாம்கூட அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

சென்னையில் மட்டுமல்ல, கோவை, மதுரை, இராமநாதபுரம் போன்ற இடங்களிலெல்லாம் தீவிரவாதங்கள் ஊடுருவி இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திலே கடத்தல் செய்வதற்கு ஏதுவாகக் கடற்கரை இருக்கின்ற காரணத்தினால் அந்த மாவட்டத்திலே கடத்தல் மூலமாக வெளிநாட்டுப் பணம் எல்லாம் இந்த நாட்டுக்கு வந்து சேர்கிறது. அந்த வெளிநாட்டுப் பணத்தின் மூலமாகவும் மதத்தை ஊக்குவித்து அதன் பேரில் பல்வேறு சீரழிவுகள் நடந்திருக்கின்றன என்பதையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டிவிட்டு, கடைசியாக அவர்கள் சொல்லியிருக்கிற ஒன்றை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற, ஒளிவு மறைவு அற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பிலே கோவையிலே குண்டு வெடித்து விட்டது, அதன் காரணமாகச் சட்டம்-ஒழுங்கு வெகுவாகப் பாதிக்கப்பட்டு விட்டது. எனவே, இன்றைக்கு இருக்கின்ற தமிழக அரசு கலைக்கப்பட வேண்டும் என்று சொல்லக்கூடியவர்களுக்கு, இன்றைக்கு நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற பிரதமர் அனுப்பிய அந்தக் குழு கொடுத்திருக்கின்ற அறிக்கை-அதிலே கடைசியாக அவர்கள் குறிப்பிட்டு இருப்பது, 'Situation in Tamil Nadu is not at all normal." 1995-லே அவர்கள் ஆள்கின்ற நேரத்திலே இதே பாரதிய ஜனதா அனுப்பிய குழு இங்கு வந்து,

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் குழுவை வாஜ்பாய் அவர்கள் அனுப்பியபொழுது அவர் பிரதமராக இல்லை; எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1998 மே 11]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொன்னது இங்கேயிருந்த ஆட்சியைப் பற்றி.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதும், இன்றைக்குப் பிரதமராக இருக்கின்ற வாஜ்பாய் என்று குறிப்பிட்டேனே தவிர, அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்தான். நானும் அதை ஒப்புக்கொள்கிறேன்.

அவர்கள் 1995-லே கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே தமிழகத்தினுடைய சட்டம்-ஒழுங்கு சீராக இல்லை என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த அரசைக் கலைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் 356-ஐப் பயன்படுத்தச் சொல்லவில்லை.

ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்கு மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்ற இந்த அரசைக் கலைக்கச் சொல்வதிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதனை இப்போது பிரதமராக இருக்கின்ற வாஜ்பாய் அவர்கள் நிச்சயமாக உணர்வார்கள் என்பதை இந்த அவையின் மூலம் நான் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோயம்புத்தூரிலே நடக்கவிருந்த நிகழ்ச்சி பற்றி, நமது வெள்ளை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதுபோல, அங்கிருந்த காவல் துறைக்கு முன்னரே, ஏறக்குறைய 12 முறை தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. காவலர் செல்வராஜ் கொலையிலிருந்து தொடர் நிகழ்ச்சியாக அங்கு நடந்து வருகின்ற வன்முறைச் சம்பவங்களின் காரணமாக அங்கு ஒரு பெரிய குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்வதற்குத் திட்டங்கள் இருக்கின்றன என்பதை, அதிலும் குறிப்பாக, தேதிகள்கூடச் சொல்லப்பட்டிருக்கின்றன. 14-2-1998, அதுபோல 20-2-1998 ஆகிய நாட்களில் குண்டுகள் வைப்பதற்கு ஏதுவான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியும்கூட, ஒன்றல்ல, இரண்டல்ல, 12 முறை எடுத்துக்காட்டியும்கூட, அங்கு இருக்கின்ற காவல் துறை உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்பதற்கு என்ன காரணம் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தச் சம்பவத்திற்குப் பின்னால், எந்த முனையிலும், சென்னையிலிருந்து கன்னியாகுமரி கடற்கரை வரை எந்த இடத்திலாவது ஒரு சிறு அசம்பாவிதமாவது நடந்திருக்கிறதா என்ற கேள்வியைக்

[திரு. லா. சந்தானம்] [1998 மே 11

கேட்போமேயானால், எங்கும் நடைபெறவில்லை என்கிற பதிலை தமிழக மக்கள் இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற நிலையிலே, ஒளிவுமறைவு அற்ற இந்த அரசு எப்படி அந்த நிகழ்ச்சிக்குப் பின்னால், துரிதமான முறையிலே நடவடிக்கை மேற்கொண்டு, அசம்பாவிதங்களைக் கட்டுப்படுத்தியதோ அதுபோல, தொடர்ந்து, இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல, வன்முறையாளர்களை, மதவாதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால், இந்த நாட்டிலேயிருக்கின்ற அமைதியைக் குலைத்து பொது மக்களைத் தீய வழியிலே அழைத்துச் செல்கின்றவர்களைத் தண்டிப்பதற்கு, அவர்கள் சொன்னது போல, தனிகோர்ட் அமைத்து, அதன் மூலமாகச் சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்று கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், 15 நிமிடங்கள் மட்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, நம்பர் 1 சார்பாக, பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை முதலிலேயே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரை, நான் கவர்னர் உரையிலே பேசும்போதே கேட்டிருந்தேன், வெள்ளை அறிக்கை வேண்டுமென்று. இந்தக் கோவை குண்டுவெடிப்பைப் பொறுத்தவரை, மிகத் தெள்ளத் தெளிவாக நான் கவர்னர் உரை மீது பேசும்போது பேசியிருக்கிறேன். கோவை குண்டு வெடிப்பு ஒரு மாபெரும் ஜனநாயகப் படுகொலை. அந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் நாட்டிலே இருக்கக்கூடிய நல்லவர்கள் யாரும் ஜீரணிக்கொள்ள முடியாத அளவிற்கு ஒரு கொடூரமான சம்பவம் என்பதை நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். அந்த வகையிலே கோவை குண்டு வெடிப்பு நடந்திருக்கிறது. இந்த வெள்ளை அறிக்கையைப் பொறுத்தவரை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியிலே, 1984-லே நடந்த சம்பவங்கள் பற்றிய விவரங்களையெல்லாம் இங்கே கொடுத்து, கோவை குண்டு வெடிப்புச் சம்பவம் என்று 4, 5, பக்கங்கள், பிற சம்பவங்கள் பற்றி எல்லாம் வருகின்றன. நான் கேட்கிறேன், இந்த 1984-லே இந்த குண்டு வெடிப்பின்போது, எம்.ஜி.ஆர். காலத்திலே, மத்திய அரசு இதுபோல



1998 மே 11] [திரு. ஐ. கணேசன்]

குண்டு வெடிக்கப்போகிறது என்று ஏதாவது தஸ்தாவேஜ்களை மாநில அரசுக்கு, எம்.ஜி.ஆர். அரசுக்கு அனுப்பியிருக்கிறதா? தற்செயலாக இலங்கை விடுதலைப் புலிகளால் பல அசம்பாவிதங்கள் ஏற்பட்டன. அதற்கும், இந்த வெள்ளை அறிக்கைக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குப் புரியவில்லை. இதைத்தான் டாக்டர் இராமதாஸ் அவர்கள் அறிக்கையிலே சொன்னார்கள், பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்குக்கு விலை சொல்கிறீர்களே என்று. அதைத்தான் நான் கேட்கிறேன்.

1984-லே பல அசம்பாவிதங்கள் நடந்தன. ஆனால், அப்போது, மத்திய அரசு எந்தவிதமான தஸ்தாவேஜ்களையும் அனுப்பவில்லை. இந்தக் குண்டு வெடிப்பைப் பற்றி மத்திய அரசு தன்னுடைய தஸ்தாவேஜ்களை, இதுபோல, குண்டு வெடிக்கப்போகிறது, நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசுக்கு அனுப்பி, சொல்லியிருக்கிறது. மாநில அரசு அந்தக் காவல் நிலையங்களுக்கு சொல்கிறது. இருந்தாலும், இந்தக் குண்டு வெடிப்பைத் தவிர்க்க முடியாத காரணம் என்ன? அரசுக்கும் காவல் துறைக்கும் ஒரு அன்னியோன்யமான பிணைப்பு இல்லை என்பதைத்தானே இந்தக் குண்டு வெடிப்பு எடுத்துக்காட்டுகிறது? தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். போலீஸ் இரண்டு மணி நேரத்திலே இராணுவத்தின் உதவிகொண்டு கலவரத்தை அடக்கும்போது, போலீஸ் நினைத்திருந்தால் ஓராண்டு காலமாக இதுபோன்ற அசம்பாவித சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றனவே இதைத் தடுத்து இருக்க முடியாதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்

முற்பகல் 11-50

இந்த அவையிலே பேசியவர்கள் சொன்னார்கள், யாரோ ஒரு செல்வராஜ் குத்திக் கொலை செய்யப்பட்டார் என்று. யாரோ ஒரு செல்வராஜ் அல்ல. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலீசார் தன்னுடைய கடமையைச் செய்யும்போது, அதைச் சிலர் தடுத்து, வார்த்தைகள் தடித்து அந்தப் போலீசார் குத்திக் கொல்லப்பட்டிருக்கிறார். இந்த அசம்பாவிதத்தை அரசு கண்டுகொள்ளவில்லை என்ற அச்சத்தோடு அந்தப் போலீசார்களின் மனைவிமார்கள் அத்தனைபேர்களும் நடுரோட்டிலே வந்து உட்கார்ந்து சாலை மறியலிலே ஈடுபட்டார்கள். ஏன் சாலை மறியலிலே ஈடுபட்டார்கள்? தங்களுக்கு, காவலர்களுக்கே இந்த அரசால் பாதுகாப்புக் கொடுக்க முடியவில்லையே என்ற அச்ச

[திரு. ஐ. கணேசன்] [1998 மே 11

உணர்வினால் சாலை மறியலிலே ஈடுபட்டார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

1992-லே பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அதன்மூலம் இந்த நாட்டுக்கு ஒரு மாபெரும் அவமானச்சின்னம் ஏற்பட்டது. 1992-லே பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது தமிழ்நாடு அமைதியாகத்தான் இருந்தது. ஆனால் உ.பி.-யிலேயும் மற்றப் பகுதிகளிலேயும் எத்தனையோ மதக் கலவரங்கள், எத்தனையோ கொலைகள், எத்தனையோ கொள்ளைகள் எவ்வளவோ அசம்பாவிதங்கள், கோடானுகோடி ரூபாய்ச் சொத்துக்கள் பறிபோய்க்கொண்டிருந்த அந்த நேரத்திலேகூட தமிழ்நாடு அமைதியாகத்தான் இருந்தது. 1992-க்குப் பிறகு, 1998-லே ஒரு மாபெரும் அசம்பாவிதம் தமிழ்நாட்டிலே ஏற்பட்டது. இது பாபர் மசூதி இடிப்புச் சம்பவத்தினுடைய தொடர்ச்சி என்று சொல்லுவது நிச்சயமாக ஒத்துக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. எங்கள் கிராமத்திலே சொல்வார்கள், 'முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது' என்று. அதுபோன்று நம்முடைய அரசு சரியாக, முறையாகக் குற்றவாளிகளைக் கைது செய்யாததன் காரணமாகத்தான் இந்த அசம்பாவிதச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அதை விடுத்து, பாபர் மசூதி இடிப்பு பற்றி இப்போது முஸ்லீம்கள் கொந்தளித்தார்கள் என்று சொல்வதெல்லாம் நம்மால் ஒத்துக்கொள்ள முடியாத ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது.

அதைப்போல, நான் கவர்னர் உரையின் மீதான விவாதத்தின்போது மிகத் தெளிவாகச் சொன்னேன். இந்தத் தேசத்தினுடைய மாபெரும் தலைவர்களில் திரு. அத்வானியும் ஒருவர். அந்த அத்வானியைத் திட்டம் போட்டுக் கொல்வதற்காக, வெடிகுண்டின் மூலம் கொல்வதற்காக சில தீவிரவாதிகள் முயற்சி எடுக்கிறார்கள் என்று கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய அத்தனை பெரியவர்களுக்கும் தெரிந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் வீட்டிலே இருக்கும் தாய்மார்கள் எல்லாம் ஓர் அசம்பாவிதம் நடக்கப்போகிறது, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்திவிட வேண்டும் என்பதைப்போல பேசக்கூடிய நிலை இருந்தது. அந்த அளவிற்கு நிலைமை இருந்தும், அத்தனை குண்டுவெடிப்புகள் எப்படி நடந்தன? 60-க்கும் மேற்பட்டவர்கள் இறந்தார்களே, இதைத் தடுத்திருக்க முடியாதா என்பதனை இந்த மாமன்றம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள



1998 மே 11] [திரு. ஐ. கணேசன்]

ஆசைப்படுகிறேன். திரு. அத்வானி அவர்கள் மட்டும் குறிப்பிட்ட நேரத்தில் வந்திருந்தால், அதனால் இன்று தமிழ்நாட்டிற்கு ஒரு மாபெரும் களங்கம் ஏற்பட்டிருக்கும் என்று இங்கு கவர்னர் உரையின் மீதான விவாதத்தின்போது வாதிட்டிருக்கிறேன் என்பதை மீண்டும் இங்கே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவ்வளவு பெரிய உ.பி.-யிலே, அந்த பாபர் மசூதி இடிப்பின்போது நடந்த கலவரத்திற்கு பின்பும், இப்போது அந்த உ.பி.-யினுடைய அரசு திரு. கல்யாண்சிங் தலைமையிலே அமைதியாக இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நாம் மறந்துவிட முடியாது. ஆகையினாலே, இந்தக் குண்டு வெடிப்பினுடைய உண்மையான காரணத்தை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். 3-12-1997 முதல் 10-2-1998 வரை கிட்டத்தட்ட 12 முறை, கோவையில் குண்டு வெடிக்கும் என்று அரசு எச்சரித்தும், அங்கு இருக்கக்கூடிய காவல் துறையினர் சரியான நடவடிக்கையை எடுக்காததன் காரணமாக, கிட்டத்தட்ட 60 பேர் கொலையுண்டியிருக்கிறார்கள். இன்னும் ஆயிரக்கணக்கான பேர் பல சித்ரவதைக்கு ஆளாகியிருக்கிறார்கள். கோவையிலே அப்போது, எந்த நேரத்திலே குண்டு வெடிக்குமோ நாம் எப்படியாவது கோவையிலிருந்து தப்பித்து வெளியே சென்று விட வேண்டும் என்ற அளவிற்கு கோவை மக்கள் எல்லாம் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதனை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இங்கே படங்களாக இருக்கக்கூடிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், ஈரோட்டுச் சிங்கம் பெரியார் அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், காமராசர் அவர்களும் பழம்பெருந் தலைவர்களெல்லாம் இந்த நாட்டை அமைதிப் பூங்காவாக ஆக்கி வந்தார்கள். ஆனால் இப்பொழுது மட்டும் இந்த அரசுக்கு இவ்வளவு பெரிய சோதனை எப்படி வந்தது என்பதனை இந்த மாமன்றமும், நம்முடைய முதல்வர் அவர்களும் சிந்திக்க வேண்டும். இந்த அரசினுடைய ஒரு மூலையிலே போலீஸுக்கும் அரசுக்கும் சரியான ஓர் உறவு இல்லை என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது. குற்றம் செய்தவர்களைக் கடுமையாகத் தண்டித்திருந்தால் இத்தகைய ஓர் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்குமா என்பதனை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டிலே இராணுவம் அழைக்கப்படுகிறது என்றால் என்ன காரணம்? 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக இராணுவம் அழைக்கப்பட்டது. கிட்டத்தட்ட 33 ஆண்டுகளுக்குப் பிறகு, இரண்டு முறை இராணுவம் அழைக்கப்பட்டிருக்கிறது என்றால் இங்கே சட்டம் ஒழுங்கு சரியில்லை என்றுதானே அர்த்தம். தயவுசெய்து இதை எண்ணிப் பாருங்கள். இராணுவம் எல்லையைக் காக்கவேண்டிய ஒரு படை. வெளிநாட்டு எதிரிகள் எல்லைக்குள் புகாதவாறு காப்பாற்றவேண்டிய ஒரு படை, உள்நாட்டில் புகுகின்றது என்றால், நிச்சயமாக இங்கே சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்பதுதான் அர்த்தம் என்பதனை நான் மிகத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்கிறேன். இந்த நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டும். இராணுவம் உள்ளே நுழைந்தது உள்ளபடியே தமிழ்நாட்டுக்கும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் மிகப் பெரிய அவமானம் என்பதனை மறந்துவிட வேண்டாம் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-55*

மேலும், இங்கே தரப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையில் 158 பேரைக் குற்றவாளிகளாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 102 பேர் மட்டும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதியுள்ள 56 பேரில், 8 பேர் மரணமடைந்து இருக்கிறார்கள். மீதியுள்ள 48 பேர் இன்னும் கைது செய்யப்படவில்லை என்பதனை இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல, இன்னும் நம்மையெல்லாம் பயமுறுத்திக் கொண்டிருக்கின்ற ஆயிஷா போன்ற பெண்களெல்லாம் இன்னும் கைது செய்யப்படவில்லை என்பதனையும் இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இன்னும் எத்தனையோ குற்றவாளிகள் இந்தக் கோவை கொடிய நிகழ்ச்சிக்குப் பின் தப்பித்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் இந்த அரசு விரைவிலே கண்டுபிடித்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).





அதுபோல இங்கே பேசியவர்கள் கோவையிலுள்ள check post பற்றிப் பேசினார்கள். அன்றாடத் தேவைக்காக அங்கே செல்லும் முஸ்லிம் பெண்களை, வெளிநாட்டவர்களைப் போல அன்றாடம் விசாரணை செய்து. அவர்களை அவமதிப்பது போல நடந்துகொள்கிறார்கள். சில எண்ணத் தகாத, அஞ்சக்கூடிய வகையிலே அவர்களை விசாரணை செய்து உள்ளே விடுவதும், வெளியே அனுப்புவதும் தேவையற்றது என்பதற்காகத்தான், டாக்டர் இராமதாஸ் அய்யா அவர்கள் போராட்டம் செய்தார்கள். அந்த check post-ல் முஸ்லிம் பெண்கள் மீது தகாத வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு அவர்கள் கண்காணிக்கப்படுகின்றார்கள். இது தேவையற்றது. தமிழ்நாட்டில் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் அந்த இடத்தில் அதைச் செய்தார்கள் என்பதை இங்கே சொல்கிறேன்.

*நண்பகல் 12-00*

அதேபோல, குண்டு வெடிப்பைப் பொறுத்தவரையில், சாலிய மங்கலம் அரிசி ஆலையில் நடைபெற்ற குண்டு வெடிப்பு பற்றி ஏன் இந்த வெள்ளை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. 1984-இல் இருந்து நடைபெற்ற குண்டு வெடிப்புகளெல்லாம் இதிலே இடம்பெற்றிருக்கின்றபோது அந்தக் குண்டு வெடிப்புப் பற்றி மட்டும் ஏன் அதிலே குறிப்பிடப்படவில்லை என்பதையும் முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஆணித்தரமான வாதம் என்னவென்றால், கோவை குண்டு வெடிப்பு என்பது, மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட, ஒரு கொடிய சம்பவம் என்பதனை நாங்கள் அன்றும், இன்றும், என்றுமே சொல்வோம். அந்தச் சம்பவத்தைத் தடுக்க இந்த அரசு தவறிவிட்டது. இந்த அரசு கோவை குண்டு வெடிப்பைத் தடுக்கத் தவறிவிட்டது என்பதற்காக எங்களுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்த கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு சம்பந்தமான வெள்ளை அறிக்கை

மீது எங்களுடைய இயக்கத்தின் சார்பாக எனது கருத்துக்களைக் கூறுகின்றேன். தீவிரவாதிகள் பழி தீர்க்கப் போகிறார்கள் என்றும், குண்டு வெடிக்கப் போகிறது என்றும் ஓராண்டுக்கு முன்பே கேரளப் புலனாய்வுப் பிரிவினர் எழுத்து மூலம் தமிழக போலீசுக்குத் தகவல் கொடுத்துள்ளனர். கேரளா மற்றும் தமிழ்நாட்டிலுள்ள பல பத்திரிகைகளிலும் இந்தச் செய்திகள் வந்துள்ளன. ஆனால், முன்னெச்சரிக்கையாக தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. அதுமட்டுமல்லாமல், இந்த வெள்ளை அறிக்கையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒன்றைக் கோடிட்டு......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஓராண்டுக்கு முன்பே கேரள அரசு எழுத்து மூலமாக இதைத் தமிழக அரசுக்கு அறிவித்து இருப்பதாக திரு. தாமரைக்கனி அவர்கள் சொல்கிறார்கள். அந்த ஆதாரக் கடிதம், எழுத்து மூலமாக உள்ள கடிதம் அவரிடம் இருந்தால், அதைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுதே தந்தால் நலமாக இருக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அந்த ஆதாரக் கடிதம் டி.ஜி.பி. அலுவலகத்திலே இருக்கின்றது. அவர்களிடமிருந்து அதைப் பெற்றுக்கொள்ளலாம். (சிரிப்பு) அதுமட்டுமல்லாமல்,....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி எழுத்து மூலமாக எந்தக் கடிதமும் வரவில்லை என்பதற்காகத்தான் அதைச் சொன்னேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தமிழகத்தில் உள்ள பத்திரிகைகளிலும், கேரளாவில் உள்ள பத்திரிகைகளிலும் செய்திகள் வந்திருக்கின்றன.

அடுத்து, கோவையில் நடைபெற்ற குண்டு வெடிப்பிற்கு முன்பு, கோவை கோட்டைமேடு பகுதியிலுள்ள Police Outpost மூடப்பட்டது. போலீஸ் தொடர்புடைய ரெக்கார்டுகள் மற்றும் குற்றவாளிகள் பட்டியல் என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. வெள்ளை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்துச் சொல்லவில்லை.

அடுத்து, பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர் திரு. இல. கணேசன் அவர்கள், பிப்ரவரி 28 ஆம் தேதி ஓர் அறிக்கை



விட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையில் கோவை குண்டு வெடிப்புச் சம்பவம் நடக்க இருப்பது.. அங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகருக்குத் தெரியும் என்று தெரிவித்திருக்கிறார். மாலையில் குண்டு வெடிக்கிறது. தனது நண்பருடன் அது சம்பந்தமாக அவர் ஃபோனில் பேசியிருக்கிறார். இது சம்பந்தமாகத் தமிழகப் போலீசார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? சம்பந்தப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகரை விசாரித்தார்களா? இதெல்லாம் தெரியவில்லை.

தமிழகம் உட்பட ஆறு மாநிலங்களில் வன்முறை ஏற்படக்கூடும் என்று இந்திய தலைமைத் தேர்தல் கமிஷனர் கில் அவர்கள் 9-2-1998 அன்று டெல்லியிலே பேட்டி அளித்திருக்கின்றார்கள். "தீவிரவாதத்தை ஒடுக்க எந்தவிதமான நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கவில்லை. கோவை குண்டு வெடிப்பிற்குப் பிறகுதான் பல்வேறு இடங்களில் வெடிகுண்டுகள், வெடிமருந்துப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த இந்த அரசு தவறியது, இந்த அரசினுடைய செயலாண்மையை, கையாலாகாத தனத்தைக் காட்டுகிறது" என்று ஒரிசா மாநிலக் கூடுதல் டி.ஜி.பி. 31-3-1998 அன்று இந்து பத்திரிகையிலே அறிக்கை கொடுத்திருக்கின்றார். அதுமட்டுமல்லாமல், (குறுக்கீடு) முன்னாள் கூடுதல் டி.ஜி.பி. என்னங்க,.....(குறுக்கீடு) 31-3-1998 அன்று. நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடு) என்னங்க,......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை, அவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நான் பார்த்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**திரு. இரா. தாமரைக்கனி:** கோவை குண்டு வெடிப்புக்கு முன்னால், அல்-உம்மா, ஜிகாத் கமிட்டி ஆகிய இயக்கங்களைத் தடை செய்திருக்க வேண்டும். மத்திய அரசின் உளவுத் துறை, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே, மாநில அரசுக்குச் சுட்டிக்காட்டியும் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை; காவல் துறை

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 மே 11

சுயமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் கூறியிருக்கிறார். முதலமைச்சர் அவர்கள், நீதிபதி கோகுலகிருஷ்ணன் தலைமையில் ஒரு நபர் கமிஷனைப் போட்டுவிட்டு அந்தக் கமிஷன் சொன்னால் கேட்போம் என்று சொல்லிவிட்டு, நீதிமன்றம் சொன்னாலும் சி.பி.ஐ. விசாரணை கேட்கமாட்டோம் என்று சொல்வதா? இதுசம்பந்தமாக 6-3-1998 ஆம் தேதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வாறு கூறியிருக்கிறார்கள். வெள்ளை அறிக்கையில், 3-12-1997 முதல் 10-2-1998 வரை 12 எச்சரிக்கைச் செய்திகளை, இந்த அரசு......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக்கபூர்வமாக, விவாதத்திலே பலபேர் பேசினார்கள்; நான் குறுக்கிடவில்லை. வேண்டுமென்றே சில தவறான தகவல்களைச் சொல்லி, அவற்றை விளம்பரம் செய்ய வேண்டுமென்ற கருத்தோடு இவர் பேசுவதால், அடிக்கடி குறுக்கிட நேரிடுகிறது. ஏதோ, நீதிமன்றம் சொன்னாலும் சி.பி.ஐ. விசாரணை வைக்க மாட்டோம் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார்; அது தவறான தகவல்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்த வெள்ளை அறிக்கையில், இந்த அரசு, 3-12-1997 முதல் 10-2-1998 வரை 12 எச்சரிக்கைச் செய்திகளை, கோவை காவல் துறைக்கு விட்டதாகச் சொல்கிறது. ஆனால், தீவிரவாதிகளின் மீது நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பிக்கவில்லை. காவல் துறை மீது ஒழுங்கு நடவடிக்கை என்பது, திறமையற்ற அரசு என்பதைக் காட்டுகிறது. தன்மீதுள்ள குற்றங்களை மறைக்கவே இந்த வெள்ளை அறிக்கை என்று நான் கருதுகிறேன்.

திரு. அத்வானி அவர்கள் கூறியிருக்கிறார்கள். மத்திய உளவுத் துறை அமைச்சரான அவர், கோவை குண்டு வெடிப்பு சம்பந்தமாக 26 இடங்களில் ஓரே நேரத்தில் அது வெடித்தது; இது தி.மு.க. வின் சதி என்று, பிப்ரவரி 14 ஆம் தேதி விமான நிலையத்தில் கூறியிருக்கிறார். அதேமாதிரி, திரு. வாஜ்பாய் அவர்கள், மும்பையில், 27-2-1998 ஆம் தேதி, தன்னுடைய பேச்சில், மத்திய அரசு தகவல் தெரிவித்தும் சரியான பாதுகாப்பு, திரு. அத்வானிக்குக் கொடுக்கவில்லை என்று கூறியிருக்கிறார். ஆகவே, தீவிரவாதிகளுக்கும், தி.மு.க. விற்கும் சம்பந்தம் உள்ளது என்று நான் இந்த நேரத்திலே குற்றம் சாட்டுகிறேன்.



1998 மே 11] [திரு. இரா. தாமரைக்கனி]

ஜிகாத் கமிட்டியினுடைய தலைவர், குணங்குடி அனீபா, 15-2-1998 அன்று தேவகோட்டை நிருபர் கூட்டத்தில் பேசும்போது, தி.மு.க. போட்டியிடும் 18 தொகுதிகளிலும் எங்களது ஜிகாத் கமிட்டி பிரச்சாரம் செய்கிறது என்று கூறியிருக்கிறார். முஸ்லிம் தீவிரவாதி அப்துல் ரஹீம், தி.மு.க. எங்கள் நண்பன் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் புலனாய்வுத் துறையின் மூலம் வெடிகுண்டு பற்றி, 12 முறை எச்சரித்தும்--வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டதைப்போல--தொடர் வெடிகுண்டுகள் வெடித்தன என்றால், தி.மு.க.-விற்கும், தீவிரவாதிகளுக்கும் சம்பந்தம் இருப்பதாகப் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். பாட்சா உட்பட தடா கைதிகள் 30 பேரை, எந்த நிபந்தனையும் இல்லாமல் விடுதலை செய்தது தி.மு.க. அரசு. அவர்களைத் தாராளமாக நடமாடக்கூடிய அளவுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது இந்த அரசு. இதை நான் சொல்லவில்லை. பாரதிய ஜனதா கட்சியினுடைய துணைத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், திரு. ராஜகோபால் அவர்கள் சொல்கிறார்கள். வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்கும் இந்த அரசு துணை போகிறது என்றும் சொல்கிறார்கள். வெளிநாட்டு உளவாளிகளுக்குத் தி.மு.க. அரசு எப்படியெல்லாம் உதவிகள் செய்தது என்று வெள்ளை அறிக்கையில் வரவில்லை. 1989-91 ஆம் ஆண்டுவாக்கில், பத்மநாபா உட்பட 14 பேர்களைப் படுகொலை செய்தவர்கள், தஞ்சை மாவட்டக் கடற்கரையில் கோழிக்கறி சாப்பிட்டுவிட்டு, இலங்கைக்குத் தப்பிச் சென்றதெல்லாம் நினைவிருக்கலாம். தி.மு.க. அமைச்சர் ஒருவருடைய உதவிகள் மூலம், பத்மநாபா கொலைவழக்கில் ஈடுபட்டவர்களை, நீதிமன்றத்தில் ஜாமீன் எடுத்தது, சமூக நலத் துறையின் மூலம், விடுதலைப் புலிகளுக்குச் சீருடை தைத்துக்கொடுத்தது--அப்போது இருந்த பெண் அமைச்சர்--இவையெல்லாம் சுட்டிக்காட்டப்படவில்லை. காரணம், உங்கள் கட்சியில்.......

***திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில், என்மீது வேண்டுமென்றே பொய்யான காரணங்களைச் சொல்லி, என்னையும் என் கணவரையும் கைது செய்து, ஜாமீனிலே வெளிவர முடியாதபடி செய்தனர். நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டதோடு, அந்த வழக்கு கிட்டத்தட்ட 6 ஆண்டு காலம் விசாரணையில் இருந்தது.

விசாரணையில் இருந்த அந்த வழக்கில், என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு, எந்தவிதமான முகாந்திரமும் இல்லை; ஆதாரமும் இல்லை என்று (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு, வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த அரசின்மீது களங்கம் சுமத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, கடந்த ஆட்சியில், சமூக நலத் துறையின் மூலம் சீருடைகள் தைத்துக் கொடுக்கப்பட்டன என்று அபாண்டமான குற்றச்சாட்டை, மாண்புமிகு உறுப்பினர் சுமத்துகிறார். அந்தக் குற்றச்சாட்டை, அவைக்குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் கூறிய அந்தக் கருத்துக்கு நீங்கள் பதில் அளித்து விட்டதால், அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** பாரதிய ஜனதா கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. ராஜகோபால் அவர்கள் சொல்கிறார்கள்; தமிழ்நாட்டில் எப்படியெல்லாம் தீவிரவாதிகள் இருக்கிறார்கள் என்பதற்காக ஆய்வு செய்யும் குழுவில் இடம் பெற்றுள்ள அவர் 3 முறை தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர், அண்ணா தி.மு.க. ஆட்சியில் வன்முறை நடந்தாலும், தீவிரவாதிகளுக்குத் தொடர்பு இருந்ததாகக் கூறவில்லை.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு clarification. மாண்புமிகு உறுப்பினர், விடுதலைப் புலிகளோடு தொடர்பு வைத்திருந்ததாக இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சில பேர் கள்ளத் தோணியிலே ஏறிக் கடந்து போனார்கள் என்று ஒரு பிரச்சினை வந்தது. அவர்களோடு எல்லாம் இவர்கள் கூட்டு வைத்துக் கொண்டிருக்கிறார்களே, அதைப் பற்றி எல்லாம் இங்கே அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. தாமரைக்கனி:** அப்போது அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தார்கள். தலைவர் என்ன ஆணையிடுகிறாரோ அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டுப் போய்



இருப்பார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வன்முறை நடந்ததாகவோ, தீவிரவாதிகளுக்கும் அ.இ.அ.தி.மு.க.-விற்கும் தொடர்பு இருந்ததாகவோ யாரும் கூறவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தி.மு.க.விற்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக பாரதிய ஜனதா கட்சியினுடைய துணைத் தலைவர், அதாவது அந்தக் குழுவின் உறுப்பினராக இருந்த திரு. ராஜகோபால் அவர்கள் கூறுகின்றார்கள்.

எங்களுடைய ஆட்சியில் R.S.S. அலுவலகத்தில் குண்டு வெடித்ததாகச் சொல்கிறார்கள். அப்போது முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் அதற்காக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டார்கள். தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் மசூதிகள் எல்லாம் இடிக்கப்படும் என்று கூறினார்கள். முஸ்லிம் மதத் தீவிரவாதிகளைத் தூண்டுவதாக அவருடைய பேச்சு இருந்தது.

இன்னொன்று தமிழகக் காவல் துறையினர் தீவிரவாதிகளைக் காப்பாற்ற முயற்சி செய்தார்கள். ஆகவே, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் அந்த விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1991 நவம்பர், 1998 பிப்ரவரி ஆக மொத்தம் இரண்டு முறை இராணுவம் வரவழைக்கப்பட்டது. சட்டம்-ஒழுங்கு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சி.பி.ஐ. விசாரணைக்கு ஏன் முதலமைச்சர் அவர்கள் தயங்க வேண்டும்.

1995-ல் பா.ஜ.க. ஓர் அறிக்கை விட்டதாகத் தேடிப் பிடித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை விட்டார்கள். கோவை குண்டு வெடிப்புக்குப் பரிகாரம் இது ஆகாது என்று பா.ஜ.க.வே சொல்கிறது. விடுதலைப் புலிகளை ஒடுக்குவதிலும், முஸ்லிம் தீவிரவாதிகளை ஒடுக்குவதிலும் நடவடிக்கை எடுத்தது எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு.

அல்-உம்மா போன்ற அமைப்பு, ஜிகாத் கமிட்டி போன்ற அமைப்பு, அது மட்டும் அல்லாமல் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் போன்ற அமைப்புகள் எல்லாம் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களை தீர்த்துக் கட்டும் லிஸ்ட்டில் முதலாவது இடத்தில் வைத்திருக்கின்றன.

தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் அந்தத் தீவிரவாதிகளோடு தொடர்பு வைத்திருந்த காரணத்தினால் அதைத் தடை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இச்சம்பவங்களைப் பற்றி அறிய நியமிக்கப்பட்ட அந்தக் குழு தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசின் அலட்சியத்தால் குண்டு வெடிப்பு, தீவிரவாதிகளின் ஊடுருவல் என்றுதான் அது புகார் கூறியிருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை.

கோவையில் குண்டு வெடிப்பு நடந்திருக்கிறது. இதற்கும் I.S.I. என்ற பாகிஸ்தான் உளவுத் துறைக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. பாகிஸ்தான் உளவுத் துறை அதிகாரிகள் திராவிட முன்னேற்றக் கழக எம்.பி.-க்களை ஜனவரி 4-ந்தேதியிலிருந்து 25-ஆம் தேதிக்குள் இரண்டு முறை சந்தித்திருக்கிறார்கள். இந்த ஆதாரங்களை இந்திய உளவுத் துறை கைப்பற்றி இருக்கிறது. அதற்குப் பிறகுதான் திரு. அத்வானி அவர்கள் பேசிய பொதுக் கூட்டத்திலே வெடிகுண்டுகளை, மனித வெடிகுண்டாக வெடித்து திரு. அத்வானி அவர்களைத் தீர்த்துக் கட்ட சதி நடந்திருக்கிறது என்று பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வருகின்றன. ஆதாரம், மக்கள் குரல். 9-5-1998 ஆம் தேதி மக்கள் குரலில் செய்தி வந்திருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது).*

தமிழ்நாடு பயங்கரவாதிகளுடைய நாடாகிவிட்டது. பாகிஸ்தான் உளவாளிகள் தமிழ்நாட்டில் எளிதாகத் தங்கள் கைவரிசையைக் காட்டிவிட்டார்கள். ஆகவே, மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பு இங்கே தேவை. மத்திய அரசையும், தமிழக மக்களையும் ஏமாற்றுவதுதான் இந்த வெள்ளை அறிக்கை. இந்த மாமன்றம் இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடாது. தொடர் குண்டு வெடிப்புக்கு சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும். திரைமறைவில் இருப்பவர்களைக் கண்டுபிடித்து கூண்டில் ஏற்ற வேண்டும். இதுதான் எங்கள் கட்சியினுடைய கருத்து.

அதுமட்டுமல்லாமல் இப்போது பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வருகின்றன. தீவிரவாதிகள் சென்னை நகருக்குள் நுழைந்துவிட்டார்கள். கோவைக்குப் போகப் போகிறார்கள். சேலத்தை நாசமாக்கப் போகிறார்கள், மதுரையை நாசமாக்கப்





போகிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள முக்கியமான ஸ்தலங்களை எல்லாம் குண்டு வைத்துத் தகர்க்கப்போகிறார்கள். உயர்நீதிமன்றத்திலே குண்டு வைக்கப்போகிறார்கள், கோட்டையிலே குண்டு வைக்கப்போகிறார்கள். D.G.P. அலுவலகம், B.J.P. அலுவலகம், R.S.S. அலுவலகம், அண்ணா சாலையிலுள்ள பத்திரிகை அலுவலகங்கள் போன்றவற்றில் எல்லாம் குண்டு வைக்கப் போகிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. இரண்டு தீவிரவாதிகள் சென்னையிலே நுழைந்துவிட்டார்கள். அவர்களைப் பிடிப்பவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் பரிசு கொடுக்கப்போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். மக்கள் மத்தியிலே ஒரு அச்ச உணர்வு, பீதி ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறி, விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

*பிற்பகல் 12-15*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோவை குண்டு வெடிப்பு தொடர்பாக இந்த அவையில் கடந்த 23 ஆம் தேதி வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையின் மீது பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பாக, தேவையான உண்மைகளை, தெளிவான விளக்கங்களை எந்த அளவுக்குக் கோர்வைப்படுத்திச் சொல்ல முடியுமோ, எந்த அளவுக்குச் சொன்னால் நாட்டில் சகஜ நிலை ஏற்படுமோ, அமைதி ஏற்படுமோ, அந்த அளவுக்கு அரசு பொறுப்புடன் சிந்தித்து, இந்த அறிக்கையைத் தந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இது பொதுத் துறையால் தயார் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து இரண்டுவிதமான கருத்துக்கள் நாட்டில் உருவாகியிருக்கின்றன. கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கும், நடைபெற்றிருக்கின்ற வன்முறைகளுக்கும், தீவிரவாதத்திற்கும் பாபர் மசூதி இடிப்புதான் காரணம் என்று ஒரு சாரார் தங்களுடைய

கருத்தாக எடுத்து வைக்கிறார்கள். இன்னொரு சாரார், அதற்கு மாறாக, 'இல்லை, மீனாட்சிபுரம்தான் அதற்குக் காரணம்' என்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டுவிதமான கருத்துக்கள் குறித்தும் நாம் நடுநிலையில் நின்று சிந்தித்துத்தான் அதற்கான முடிவை எடுக்க வேண்டுமே தவிர, நடந்துவிட்ட நிகழ்ச்சிகளுக்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று கண்டுபிடித்துத்தான் முடிவு எடுக்க வேண்டுமே தவிர, எடுத்த எடுப்பிலேயே, 'இதுதான், அதுதான்' என்று என்னைப் பொறுத்தவரையில் நான் கூற விரும்பவில்லை. ஏனென்றால், பாபர் மசூதி இடிப்பு என்பது ஏதோ ஒரு கட்டிடம் இடிந்துவிட்டது என்பதற்காக நாங்கள் அலமலந்து நிற்கவில்லை. ஏனென்றால், இத்தகைய கட்டடங்களை இடித்துவிட்டால் மீண்டும் கட்டிக்கொள்ளலாம். ஆனால், ஒரு நாட்டில், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலே நடைபெறுகின்ற ஒரு நாட்டில், அரசமைப்பின் அடிப்படையிலே உருவகம் பெற்று நடைபெறுகின்ற ஒரு அரசில், **Rule of Law,**—சட்டத்தினுடைய இறையாண்மையை ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு நாட்டில், கட்டடத்தை இடிப்பதாக இருந்தாலும், கட்டுவதாக இருந்தாலும் சட்டப்படிதான் இடிக்க வேண்டும், சட்டப்படிதான் கட்டவேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலை. பாபர் மசூதியை இடித்தீர்கள். பாபர் மசூதியைச் சட்டத்திற்குப் புறம்பாக இடித்ததன் காரணமாக இந்த நாட்டில் அரசமைப்புச் சட்டத்தையே இடித்துவிட்டீர்கள். சட்டத்தின் இறையாண்மையை இடித்துவிட்டீர்கள். இனிமேல் சட்டத்தின் மூலமான பாதுகாப்பு இந்த நாட்டு மக்களுக்கு எங்கே இருக்கிறது என்ற கேள்வியை நாட்டிலே பாரதூரமாக நீங்கள் ஏற்படுத்திவிட்டீர்கள் என்பதற்காகத்தான் நாங்கள் அலமலந்து நிற்கின்றோம்.

இன்னொரு கருத்தும் இங்கே சொல்லப்பட்டது. பாபர் மசூதி இடிப்புக்காக யாரோ சில பேர் உணர்ச்சிவசப்பட்டுத் தெருவீதிகளுக்கு வந்தார்கள். வன்முறையைத் தூண்டினார்கள். ஊர்வலம் நடத்தினார்கள். அதனால் நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டது. அதன் காரணமாக எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டன. அந்த எதிர்மறை விளைவுகளின் அடிப்படையிலேதான் நாட்டில் சில சூழ்நிலைகள் உருவாயின என்றெல்லாம்கூட இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.





உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் இது குறித்து விளக்கமாகப் பேசினார்கள். மீனாட்சிபுரத்தில் பணம் கொடுக்கப்பட்டு அவர்கள் ஒரு மதத்திற்கு மாற்றப்பட்டார்களா என்பது ஒரு கேள்வி. மனிதன் மனசாட்சி உள்ளவன். அவன் விரும்புகின்ற இடத்திற்கு அவன் செல்வதை இந்த நாட்டில் சட்டம் தடை செய்கிறதா? அவனவன் விரும்புகிறான், ஒரு கட்சியில் தேர்ந்தெடுக்கப்படுகிறான். இன்னொரு கட்சிக்குத் தாவுகிறான். இன்றைக்கு இந்தக் கட்சியில் இருக்கிறான். நாளைக்கு அந்தக் கட்சிக்குப் போகிறான். மரத்துக்கு மரம் தாவுவதைப்போல, இப்படிப் பல சம்பவங்கள் இந்த நாட்டிலே நடந்துகொண்டிருக்கின்றன. அவர்களை எல்லாம் தடுப்பதற்கு இந்த நாட்டிலே சட்டம் இருக்கிறது. கட்சித் தாவல் தடைச் சட்டம் இருக்கிறது. அப்படி இருந்தும், அதிலே நெளிவு, சுளிவுகள் இருப்பதன் காரணமாக இந்த நாட்டில் கட்சித் தாவல் நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு நான் ஒரு முஸ்லீம், நாளைக்கு நான் ஒரு இந்துவாக மாறுகிறேன் என்று சொன்னால் என்னை யார் தடுக்க முடியும்? என்னைத் தடுப்பதற்கு இந்த நாட்டில் எந்தச் சட்டம் இருக்கிறது? என்னுடைய மனசாட்சிப்படி வாழ எனக்கு உரிமை இருக்கிறது. எனக்கு எங்கே மரியாதை இருக்கிறதோ, எனக்கு எங்கே சுயமாகச் செயல்படுகின்ற வாய்ப்பு இருக்கிறதோ, அந்த வாய்ப்பினை நான் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய அரசமைப்புச் சட்டபூர்வமான அதிகாரமும், உரிமையும் இந்த நாட்டிலே இருக்கிறது. இல்லாவிட்டால் இல்லையென்று சொல்லுங்கள். எந்த அடிப்படையிலே இது தவறு என்று நீங்கள் சொல்கிறீர்கள் என்பதை விளக்கிச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லமாட்டீர்கள்.

பிற்பகல் 12-20

இந்த மீனாட்சிபுரம் மதமாற்றம் ஏற்பட்ட பிறகு, சாட்சாத் இன்றைய பிரதமர் மரியாதைக்குரிய அடல்பிகாரி வாஜ்பாய் அவர்களோடு, மற்றும் சிலரும் அந்த ஊருக்கே சென்றார்கள். ஊருக்குச் சென்று, புதிதாக முஸ்லீம்களாக மாறியவர்களை அழைத்து வாருங்கள் என்று சொன்னார்கள். அவர்களை அழைத்து வந்தார்கள். வாஜ்பாய் என்ன சொன்னார் தெரியுமா? 'நான் இந்த முஸ்லீம்களைச் சொல்லவில்லை. புதிதாக மாறி இருக்கிறார்களே, அவர்களை அழைத்து வாருங்கள்' என்று சொன்னார். அப்போது ஊரிலே இருப்பவர்கள் சொன்னார்கள், 'அவர்கள்தான் இவர்கள்' என்று.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 மே 11

'அப்படியா? 200, 300 ஆண்டுகளுக்கு முன்னுள்ள பாரம்பரியமான முஸ்லீம்களைப் போலவே காட்சி தருகிறார்களே' என்று அப்போது திரு. வாஜ்பாய் அவர்கள் சொன்னார்கள். இதுவெல்லாம் பத்திரிகைகளிலே வந்திருக்கிறது.

அவர்களிடத்திலே அவர் கேட்டார், 'நீங்கள் பணத்திற்கு ஆசைப்பட்டுப் போனீர்களா' என்று. அவர்கள் பதில் சொன்னார்கள், "அவர்கள் எங்களுக்கெல்லாம் தலா ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்து, முஸ்லீம்களாக மாற்றினார்கள். நீங்கள் வேண்டுமானால் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்துப் பாருங்களேன்" என்று சொன்னார்கள். "எங்களை மறுபடியும் அந்தத் தாய் மதத்திற்கு மாற்ற நீங்கள் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்துப் பாருங்கள். நாங்கள் மாறுகிறோமா என்று பாருங்கள். இல்லையென்றால் ஒரு கோடி ரூபாய் கொடுங்கள் நாங்கள் மாறுகிறோமா என்று பாருங்கள்" என்றார்கள். பிறகு அவர் வெளியே வந்து' 'இங்கே ஒன்றும் நடக்காது. அவர்கள் உணர்ச்சிபூர்வமாக, உளப்பூர்வமாக விரும்பி முஸ்லீம்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களை யாரும் மாற்ற முடியாது' என்று அன்றைக்கே இன்றைய பிரதமர் மரியாதைக்குரிய திரு. அடல்பிகாரி வாஜ்பாய் அவர்கள் கூறியிருக்கிறார்கள். யாரையும் யாரும் தடுக்க முடியாது. யாரையும் யாரும் மாற்றிவிட முடியாது. அதுதான் காரணம். ஆனால், அதற்காக வில்லங்கங்கள் செய்வோம், இந்த நாட்டிலே குழப்பங்களை ஏற்படுத்துவோம் என்று யாராவது சொன்னால் தயவுசெய்து நான் அவர்களுக்கு ஒரு ஆலோசனை கூறுவேன். நம்முடைய அரசமைப்புச் சட்டத்தையும் மாற்றி விடுங்கள். அதாவது யாரும் மதம் மாறக்கூடாது என்று மாற்றிப் பாருங்கள். மதமாற்றத் தடைச் சட்டம் ஏதோ வருகிறது என்று ஏன் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள்? அந்தத் தடைச் சட்டத்தை கொண்டு வாருங்கள். என்ன நடக்கிறது என்று பாருங்கள். நான் இந்த நாட்டினுடைய சுதந்திரமான பிரஜை. நான் என்ன விரும்பினாலும், எதை விரும்பினாலும் சட்டத்திற்குட்பட்டுச் செய்ய உரிமை படைத்தவன். இல்லையென்று சொன்னால் இந்த ஜனநாயக, மதச்சார்பற்ற நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை மாற்றி விடுங்கள். இப்போதுதான் பாராளுமன்றத்திற்கு வந்திருக்கிறீர்கள். மாற்றிப் பாருங்களேன். ஆகையினாலே தயவுசெய்து அந்த நோக்கம் யாருக்கும் வேண்டாம், அந்தக் கருத்து யாருக்கும் வேண்டாம் என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.



1998 மே 11] [திரு. ம. அப்துல் லத்தீப்]

பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அதனால் பல்வேறு ஊர்களிலே சில சூழ்நிலைகள் உருவாயின. தமிழகத்திலேகூட சில பேர் ஊர்வலங்களை நடத்தி தங்களுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார்கள். வருத்தத்தைத் தெரியப்படுத்திக்கொண்டார்கள். அப்படிச் செய்வதற்கு சட்டபூர்வமான தகுதியும், உரிமையும் இந்த நாட்டிலே இருக்கிறது. தனி ஒரு மனிதனுக்கும் உண்டு, குழுக்களுக்கும் உண்டு, கட்சிகளுக்கும் உண்டு. அதனால்தான் ஒவ்வொரு நாளும் சில பேர் இந்த நாட்டிலே ஊர்வலங்களை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். மறியலை நடத்திக்கொண்டே இருக்கிறார்கள். அவற்றைத் தடை செய்ய வேண்டுமானால் தடை செய்யுங்கள், ஏன் பேசுகிறீர்கள்? நான் முஸ்லீமாக இருக்கிறேன், ஆனால் இந்துவாக மாறுகிறேன் என்று சொன்னால் யார் என்னைத் தடுக்க முடியும்? என்னைத் தடுக்க முடியுமா? நான் இன்று காலையிலிருந்து இந்து என்று சொல்கிறேன், என்னுடைய பெயர் அப்துல் லத்தீப் என்பதை சூட்சமதாசன் என்று மாற்றிக் கொள்கிறேன். ஆனால்.........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எதைச் சொன்னாலும் 15 நிமிடத்திற்குள் சொல்லுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மதம் மாறினால் எதிலே என்னைச் சேர்த்துக்கொள்வீர்கள்? சொல்லுங்கள். நான் இந்துவாக மாறினால் எதிலே என்னைச் சேர்ப்பீர்கள்? நான் பிராமணனாக விரும்புகிறேன், உயர்மட்டத்திலே இருக்கிற பிராமணனாக விரும்புகிறேன். என்னைப் பிராமணனாக ஏற்றுக்கொள்வீர்களா? அல்லது சத்திரியனாக ஏற்றுக்கொள்வீர்களா?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் இந்துவாக மதம் மாறுவது என்று முடிவு செய்து, அவர் இந்து மதத்தில், எந்த ஜாதியில் சேர்வது என்று முடிவு செய்தாலும் சேர்த்துக்கொள்வார்கள். ஏனென்றால், இராமானுஜர் அவர்கள் ஆதிதிராவிடர்களை பிராமணர்களாக மாற்றி இருக்கிறார்கள், ஐயங்காராக மாற்றி இருக்கிறார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே இராமானுஜரும் இல்லை, அவர் கோபுரத்தின்

மேல் நின்று கொண்டு பிரகடனப்படுத்தினாரே. அப்படி இங்கு பிரகடனப்படுத்தக்கூடிய வாய்ப்பும் இல்லை. பிறப்பால் ஒருவன் பிராமணனாக முடியுமே தவிர, மாறுவதால், மாற்றத்தினால் மாற முடியாது என்று சொல்லியிருக்கும்போது, யார் உங்களுக்கு அதிகாரம் கொடுத்தது, அதை மாற்றுவதற்கு? உங்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறதா? முதலில் அதைச் சொல்லுங்கள். ஆகையினாலே......

*பிற்பகல் 12-25*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களைப் பிராமணராக மாற்ற முடியும் என்று சொல்கிறபோது, ஏன், ஒரே நாளில், கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களைப் பிராமணர்களாக மாற்ற முடியாது என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்து மதத்தினுடைய சிறப்பு அதிலேதான் இருக்கிறது. மிகக் கீழ் நிலையிலே இருக்கிற ஒருவரைப் பார்த்து, நீங்கள் பிராமணராக மாறுகிறீர்களா என்று கேட்டால், அவர், தான் சார்ந்திருக்கிற ஜாதிதான் சிறந்த ஜாதி என்று கருதுவார். பிராமணராக மாறுவதைவிட, ஓர் ஆதிதிராவிடராக இருப்பதே மேல் என்பது அவருடைய கருத்தாக இருக்கிறது. இராமானுஜர், பல ஆதிதிராவிட மக்களைப் பிராமணர்களாக மாறச் சொல்லியும், அவர்கள் மாறவில்லை. இப்போது நானே சொல்கிறேன், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பிராமணராக மாறுவதற்கு யாரும் தடை விதிக்க முடியாது. ஆதிதிராவிடராக இருப்பதுதான் அவருக்கு இலாபமேயொழிய, பிராமணராக மாறினால் அவருக்கு எந்த விதத்திலும் இலாபம் கிடையாது. எனவே, அவர் விரும்புவதும் அதைத்தானேயொழிய, இந்து மதத்தினராக மாறுவதற்கு யாரும் தடை செய்ய முடியாது. இராமானுஜர்கூடச் செய்து காட்டியிருக்கிறார். ஆயிரக்கணக்கான ஆதிதிராவிட மக்களைப் பிராமணர்களாக மாற்றியிருக்கிறார். பிராமணர்களிலே, கருப்பு நிற பிராமணர்கள் யார் என்று கேட்டால், இராமானுஜரால் பிராமணர்களாக ஆக்கப்பட்டவர்கள்தான் அவர்கள் என்று அந்தக் காலத்திலே சொல்வார்கள். எனவே, மதம் மாறுவதற்கு ஒன்றும்



தடையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது விவாதம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. என்ன point of order. சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதியாரும் அப்படி மாற்றியிருக்கிறார். பூணூல் போட்டு வைத்திருக்கிறார். இராமானுஜரும், பாரதியாரும் செய்தது, அவர்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்தியதே தவிர, சட்டபூர்வமான மாற்றமல்ல. சட்டம் இப்படி மாறுவதை அனுமதிக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தை நான் நீட்டிக்க விரும்பவில்லை. ஏனென்றால் பேசுவது நான். எனவே, அது குறித்து மிகுந்த எச்சரிக்கையோடு பேசவேண்டும். எனவே, இந்த அளவோடு இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்கிறேன். ஒரு கேள்வியாக இதை எழுப்பினேன். அதற்கு விடை இருந்தால் உரியவர்கள் சொல்லட்டும். உரியவர்கள்தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு அழகிரி அவர்கள் சொல்வதை, ஜகத்குரு சங்கராச்சாரியார் அழகிரி சொல்வதை, நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (சிரிப்பு) சொல்பவர்கள்தான் சொல்ல வேண்டும்.

நான் இந்த அவையினுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சரியாக, ஓராண்டுக்கு முன்னால், கடந்த முறை அடல்பிகாரி வாஜ்பாய் அவர்களுடைய ஆட்சி 13 நாட்களிலே முடிந்துவிட்ட பிறகு, அந்தக் கட்சியினுடைய அகில இந்திய செயற்குழு ஜெய்ப்பூரிலே கூடியது. அந்தக் கூட்டத்திலே அவர்கள் அதிகாரபூர்வமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். நான் பல தடவை சொல்லியும் இருக்கிறேன். இதற்கு இராஜேந்திர சிங்கும் பதில் சொல்லியிருக்கிறார். அத்வானி அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைக்காரர்களுக்கும் இது தெரியும்.

"வடபுலத்திலே, இந்தி பேசுகின்ற பகுதிகளிலே, மற்ற இடங்களிலே நாம் பெற்றிருக்கக்கூடிய அரசியல் உயர்வு ஏன் தமிழகத்திலே இல்லாமல் போனது. தென்புலத்திலே இல்லாமல் போனதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, வடபுலத்திலே எந்தக் காரணத்தினாலே நாம் வெற்றி பெற்றோமோ, அதே காரண, காரியங்களை, சூழ்நிலைகளை தென்புலத்திலே ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், தென்புலத்திலே தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா ஆகியோர் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து பகுத்தறிவுத் தத்துவத்தை உணர்த்தி அத்தகைய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு, வடபுலத்திலே நாம் கையாண்ட முறைகளை, யுக்திகளைத் தென்புலத்திலேயும் கையாள வேண்டும்" என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அப்போதே நாங்கள் சொன்னோம். ஒரு பெரிய ஆபத்து வரவிருக்கிறது. தமிழகத்தினுடைய தனித் தன்மைக்கு ஊறு ஏற்படப் போகிறது. எனவே, கவனமாக இருக்கவேண்டுமென்று சொன்னோம். அவர்கள், கொஞ்சம் கொஞ்சமாக, மராட்டியத்திலே இருந்து ஆந்திராவிலே புகுந்தார்கள். அங்கேயிருந்து தமிழகத்தில் வந்து, இன்றைக்கு அந்தப் பழைய உணர்வை ஏற்படுத்தி, நம்முடைய தூய்மையான மக்களுடைய உள்ளத்தில் ஒருவிதமான சிந்தனையை அவர்கள் ஏற்படுத்திய காரணத்தினால்தான் இந்தத் தேர்தலிலே அதற்கான விளைவு வடபுலத்திலே தெளிவாகத் தெரிந்தது. தென்புலத்திலே ஒரு ஒளிக்கீற்றாகத் தோன்றியிருக்கிறது என்பதை நாம் இந்த நேரத்திலே புரிந்துகொண்டு, அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், இத்தகைய வெள்ளை அறிக்கைகளை அடிக்கடி வெளியிட வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தென்புலத்திலே அவர்களுக்கு யார் கதவைத் திறந்துவிட்டார்கள்? மற்ற காரியங்கள் எல்லாம்-- நான் என்னுடைய சகோதரனை அடிக்கிறேன்; என்னுடைய சகோதரன் என்னை அடிக்கிறான்; அடிதடி கொஞ்ச காலம் நடக்கிறது; மீண்டும் நட்பு பாராட்டுகிறோம்; அது வேறு விஷயம். ஆனால், தென்புலத்திலே வாராத ஒன்றை, வரக்கூடாத ஒன்றை, வருவதற்கு பராக்குக் கூறி, ரத்தினக் கம்பளம் விரித்து, அவர்களை இங்கே வரவேற்று வேரூன்றச் செய்ய, வடபுலத்துக்காரர்கள் காரணமாக அமையவில்லை; தென்புலத்திலே பெரியாருடைய பெயரையும், அண்ணாவினுடைய பெயரையும் சொல்லக்கூடியவர்கள்--வேறுவிதமாக எடுத்துக்கொள்ளாதீர்கள்,



பெரியாருடைய பெயரை எல்லோரும் சொல்கிறோம்--அதனைத் தங்களுடைய அரசியல் காரணங்களுக்காகச் சொல்லக்கூடியவர்கள் அதற்குக் காரணமாக அமைந்துவிட்டார்கள். அதற்குக் காரணம், தூண்டுகோலாக, நம்முடைய உணர்வுக்கு அப்பாற்பட்டு--அந்த உணர்வுகளுக்கு உச்சாணி நான்தான், நான்தான், பரிணாம வளர்ச்சி என்று சொல்லக்கூடிய ஒரு சிலர், அவர்களுக்குக் கதவையும் திறந்துவிட்ட காரணத்தால்தான் தமிழகத்திலே இந்த நிலைமை உருவாகி இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. (மணியடிக்கப்பெற்றது) நான் முடித்துவிடுகிறேன்.

*பிற்பகல் 12-30*

கோவையைப் பொறுத்தவரையில், முதலிலே முஸ்லீம்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பது ஒரு படலம். அது நவம்பர் மாதத்திலே நடந்தது. அதற்கு அடுத்து வந்தது, டிசம்பர் 14 ஆம் தேதி நடந்த குண்டு வெடிப்புகள். அதிலே சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் ஏறக்குறைய 20 முஸ்லீம் இளைஞர்கள். (குறுக்கீடு) பிப்ரவரியிலே குண்டு வைத்ததனால் 60 பேருக்கு உட்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். முதலிலே நடந்தது சுட்டுக்கொல்லப்பட்ட நிகழ்வு. இரண்டாவது நடந்தது குண்டு வைக்கப்பட்ட நிகழ்வு. இன்னார்தான் என்று, கணக்கு இல்லாமல் பழி வாங்க வேண்டும் என்ற உணர்வோடும் இருக்கலாம்; அதை நான் மறுக்கவில்லை. ஆனால், இந்த இரண்டாவது குண்டு வெடிப்பில் செத்தார்கள். முதலாவது, 18 பேரோ அல்லது 20 பேரோ போலீஸ்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பது. நாம் இரண்டையும் பிரித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. கொஞ்ச காலமாகவே, கோயம்புத்தூரில் இருக்கிற போலீஸ்காரர்கள் முஸ்லீம்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு சதியின் விளைவாக 18 பேர் கொலை செய்யப்பட்டார்கள். (குறுக்கீடு)

**திரு. வி.கே. லட்சுமணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் முதலில் கொலை நடந்ததே, சுட்டுக் கொல்லப்பட்ட கொலை, அந்தக் கொலையின்மீது நாட்டிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் தங்களுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருந்தால், அதிருப்தியை வெளிப்படுத்தி இருந்தால், ஏன், இன்னும் சொன்னால், அரசேகூட அதற்கு முனைப்பான நடவடிக்கைகளை, தன்னுடைய reaction-ஐ காண்பித்திருந்தால் தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், அதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவுக்கு திருப்தி ஏற்பட்டு இருக்கக்கூடும். 18 பேரை அநியாயமாகக் கொன்றுவிட்டார்கள். *(மணியடிக்கப் பெற்றது).* எனவே, இந்த வெள்ளை அறிக்கையைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது-- தயவுசெய்து ஒரு பிரச்சினையை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்--அது என்னவென்றால், அங்கே இருக்கக்கூடிய 2 அதிகாரிகள் அரசுக்கு ஏன் தவறான தகவல் கொடுத்தார்கள்? அப்படித் தவறான தகவல் கொடுப்பதில் அவர்களுக்குள்ள ஆதாயம் என்ன? அரசில் பணி செய்கின்ற 2 அதிகாரிகள், உண்மை நிலையை அரசுக்கு அறிவிக்க வேண்டிய அவர்கள், தவறான, உண்மைக்கு மாறான தகவல் கொடுத்தார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு இன்றைக்கு இருக்கிறது. அப்படிக் குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்டவர்கள், எந்தக் காரணத்தினாலே, எந்த நோக்கத்தோடு, கொடுக்க வேண்டிய தகவலை அரசுக்குக் கொடுக்கவில்லை என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். எல்லோரும் அதிக நேரம் பேசினார்கள். நான் ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். அப்படி அவர்களுக்கு எந்தக் காரணமும் இல்லாவிட்டால்--என்னுடைய கருத்து என்னவென்றால், அந்த உயர் அதிகாரிகள் கொடுத்த தகவல் சரியானது; அப்படி அவர்கள் தவறான தகவல் கொடுக்கக்கூடிய வாய்ப்போ அல்லது அதற்கான காரணமோ அவர்களுக்கு இல்லை; எந்த இலாபமும் இல்லை; எனவே, தவறான தகவல் கொடுக்கவில்லை; சரியான தகவல்தான் கொடுத்து





இருக்கிறார்களா என்றால்-- அதற்குப் பிறகுதான் ஆயுதங்கள் அங்கே வந்து இருக்கின்றன. பல இடங்களிலே வைக்கப்பட்டு இருக்கின்றன. திரு. அத்வானி வருகிறார். கூட்டம் பேசுவதாக அறிவிக்கிறார். அவர் கூட்டம் பேசக்கூடிய அந்த மேடைப் பூராவும் எத்தனையோ அதிகாரிகள் எல்லாம் surveilance இருந்தார்கள். போலீஸ் சர்வைலன்ஸிலே இருக்கிற ஓரிடத்திலே இவ்வளவு குண்டுகள் எப்படி வைக்கப்பட்டன என்பதற்குத்தான் இன்றைக்கு விளக்கம் தேவை. யார் வைத்தார்கள் என்று இதுவரையில் விளக்கப்படவில்லை. நான், இவர், அவர் என்று சொல்ல விரும்பவில்லை. இதுவரையிலே அது தெளிவாகவில்லை. யார் வைத்தார்கள்? அதனுடைய நோக்கம் என்ன? அரசியல் பின்னணி ஏதாவது இதற்கு இருந்ததா? போலீஸ் துறையிலே சில பேர் இப்படி ஒரு கலவரத்தை ஏற்படுத்தித் தேர்தல் காலத்திலே ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று விரும்பினார்களா அல்லது யாராலாவது இப்படித் தூண்டிவிடப்பட்டார்களா, என்ன காரணம் என்பதை அரசு கண்டறிந்து இதிலே சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இன்னும் ஒன்று. R.S.S. தீவிரவாதிகள் என்று இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் முஸ்லீம்களைச் சொல்லும்போது, முஸ்லீம் தீவிரவாதிகள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இது நாட்டிலே ஒருவிதமான எண்ணத்தை உருவாக்கி இருக்கிறது. வேண்டுமானால் அல்-உம்மா தீவிரவாதிகள் என்று சொல்லுங்கள். யார் இதிலே சம்பந்தப்பட்டவர்களோ, அப்படிச் சொல்லுங்கள். அல்-உம்மா தீவிரவாதிகள் அல்லது மற்ற தீவிரவாதிகள் என்று சொல்லுங்கள். முஸ்லீம் தீவிரவாதிகள் என்று இதிலே சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது எங்களைப் பொறுத்தவரையிலும் மிகுந்த வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. அப்படிப் பயன்படுத்தி இருக்கக்கூடாது என்று, நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

ஏனென்றால், பார்வையாளர்கள் வரிசையிலேகூட-- இங்கே பேரவையில், மேலே என்னைப் போல தொப்பி போட்டுக்கொண்டு யாராவது வந்தால் விடமாட்டேன் என்கிறார்கள். கடந்த எட்டு நாட்களாக, யாராவது என்னைப் போல் தொப்பி போட்டுக்கொண்டு மேலே வந்தாலும், இந்தப் போலீஸ் துறையினர் அவர்களை

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 மே 11

அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள். அந்தத் தொப்பியைத்தான் கழற்றி அதிலே என்ன இருக்கிறது என்றுதான் பாரேன். இல்லையென்றால் என்னையும் சொல்லிவிடுங்கள், நீயும் உள்ளே வரக்கூடாது என்று. தொப்பியிலே என்னவோ மறைத்து வைத்திருக்கிறாய் என்று சொல்லுங்களேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பார்வையாளர்களைச் சோதனை செய்து அனுப்ப வேண்டியது காவலர்களின் கடமை. பார்வையாளர்களைச் சோதனை செய்துதான் அனுமதிக்க வேண்டும். அது அவர்களுடைய கடமை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தொப்பி போடக்கூடாது என்று எப்படிச் சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொப்பியைச் சோதனை போட்டிருப்பார்கள். சோதனை பண்ணவேண்டுமென்று சொல்லியிருப்பார்கள். பேசி முடியுங்கள். அதிக நேரமாகிவிட்டது. எவ்வளவு நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, இது குறித்துக் கவனம் செலுத்தவேண்டும். இது தவறான போக்கு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை விசாரித்துப் பார்க்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கையைப் பொறுத்தவரைக்கும், இதிலே சொல்ல வேண்டிய கருத்துக்களை எவ்வளவுக்குச் சொல்லவேண்டுமோ, அவ்வளவுக்குச் சொல்லியிருக்கிறீர்கள். சில நேரங்களில், சில வார்த்தைகளை -- யோசனை பண்ணாமல்--இப்போது நான் சொன்னேனே, அந்த மாதிரி-- முஸ்லீம் தீவிரவாதிகள் என்று எழுதியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அது வேண்டாம்.

இந்த ஆட்சியை இதை வைத்துக்கொண்டு கலைத்துவிடலாம் என்று யாராவது கனவு காண்பார்களேயானால், வேறு விளைவுகள் ஏற்படும். நான் சரியாகச் சொல்கிறேன். திரு. எல்.கே. அத்வானியே பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாள் என் வாழ்க்கையில் கண்ட மிகப்



1998 மே 11] [திரு. ம. அப்துல் லத்தீப்]

பெரிய துக்க நாள் என்று இப்போது அறிவித்திருக்கிறார். நீங்கள் துக்கப்பட்ட நாள், இந்த நாட்டுக்குத் துக்க நாள் அல்லவா? நீங்கள் துக்கப்படும்போது நாங்கள் துக்கப்படுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் மீதே குற்றச்சாட்டு சாட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் மீதே குற்றப்பத்திரிகை தரப்பட இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்களை வைத்துக்கொண்டு இந்த மாநில ஆட்சியைக் கலைத்துவிடலாம், குளிர்காயலாம், குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கலாம் என்று யார் நினைத்தாலும், அவர்கள் கனவு பகற் கனவாக இருக்கும். அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே இது ஒரு அராஜகம். அதுவே ஒரு தீவிரவாதம். It is an onslaught on the Constitution என்ற அளவுக்கு, அரசியல் சட்டத்தின் மீது கை வைக்க இந்த நாட்டிலே யாருக்கும் உரிமை இல்லை. அது உரிய முறையிலே நாட்டப்பட்டால்தான், மாறுதலுக்கேற்ப எல்லாம் நடைபெறும். வேறு இல்லை. எனவே, இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, உரியவர்கள் உரிய முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று நான் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

முள்ளிலே துணி பட்டாலும், துணியிலே முள் பட்டாலும், துணிக்குத்தான் அது கேடு என்பதை இஸ்லாமியச் சகோதரர்கள், எண்ணத்தில் வைத்து நிதானமாகவும், விவேகமாகவும், பொறுமையாகவும், மற்ற சகோதரர்களோடு உடன்பிறப்புக்களாகவும், விட்டுக்கொடுப்பவர்களாகவும், சகித்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் அவர்கள் இருக்கவேண்டுமே தவிர, தீவிரவாதிகள் என்ற பெயரை எந்த முஸ்லீம் பெற்றாலும், அவன் பெருமானாருடைய வாழ்க்கை முறையிலிருந்து மாறியவன் என்பதை எண்ணத்தில் கொண்டு, அமைதிக்காகப் பாடுபட்ட அமைதியானவன் என்ற நற்பெயரை எடுக்கவேண்டுமென்று நான் அவர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முதலமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற வெள்ளை அறிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

முதலில் இந்த வெள்ளை அறிக்கையின் மீது இருந்த மனநோக்கு விவாதிக்கின்ற அரசியல் பண்பை வளர்த்துக்கொள்வது நல்லது என்று கருதுகின்றேன்.

முளைக்குருத்தியில் கட்டப்பட்டுக் கிடக்கின்ற மனநல்ல போர் தங்களுடைய அரசியல் கொள்கைகள், கட்சி நிலைகளில் இருந்து மட்டுமே இந்தப் பிரச்சினையை அணுகுவது என்பது, ஒரு நல்ல முடிவுக்கு வர வழி கோலிவிடும் என்பதை நான் எச்சரிக்கையாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சமூக வாழ்வில் தோன்றக்கூடாத ஒரு தீவிரவாதம் தோன்றிவிட்ட நிலையில், அதை எதிர்கொள்வது ஏதோ, திராவிட முன்னேற்றக் கழகம், அல்லது கம்யூனிஸ்ட் கட்சி அல்லது தமிழ் மாநில காங்கிரஸ் அல்லது குறிப்பிட்ட அரசியல் கட்சியினுடைய கடமை என்று குறுக்கிப் பார்ப்பது பொருத்தமற்றதாகும். இந்தப் பிரச்சினைக்கு, எப்படித் தீர்வு காண்பது என்பதை, விசாலமான இதயத்தோடும் விரிந்த அரசியல் கண்ணோட்டத்தோடும் பரிசீலிக்க வேண்டும் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய நீண்ட அரசியல் அனுபவத்தின் காரணமாக, மிக நிதானமான முறையில் வார்த்தைகளை அளந்து போட்டு, இந்த வெள்ளை அறிக்கையை முன்வைத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நிதானம் அவசியம்தான். ஆனால் நிதானம் இருக்கக்கூடாத இடத்தில் நிதானம் இருந்துவிட்டாலும் விபத்து வந்துவிடும் என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன். நாம் நிதானமாகவே அணுக வேண்டிய ஒரு உணர்ச்சி சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற முறையில் மட்டும் இதைப் பார்த்து, ரொம்பவும் நிதானமாக அணுகிப் பார்க்க வேண்டிய சில விஷயங்களைப் பார்க்காமல், அம்பலப்படுத்த வேண்டிய சில விஷயங்களை அம்பலப்படுத்தாமல் இருந்துவிட்டாலும் தவறாகும் என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

குறிப்பாக, சமூக வாழ்வில் தீய விளைவுகளைத் தோற்றுவிக்கிற இந்தத் தீவிரவாதம் ஏதோ திடீரென்று தோன்றிவிட்ட ஒரு தற்செயல் நிகழ்ச்சி அல்ல. இந்தத் தீவிரவாதத்திற்கு நீண்ட வளர்ச்சிப் பின்னணி



உண்டு என்கிற அறிவியல் உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. இன்றைக்கு எதிர்க்கட்சி என்கிற காரணத்தினால் எதை வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போவது ஒரு பொறுப்பற்ற அரசியல்வாதியின் முன்னுதாரணமாக அமைந்துவிடுமே தவிர, பிரச்சினைக்குத் தீர்வு அளிக்கிற, அரசியல்வாதியின் பொறுப்பை நிறைவேற்றுவதாக அது அமையாது.

இந்தத் தீவிரவாதம் திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் தோன்றியதாகக் கருதுவது அடிமனதில் ஏற்பட்டு இருக்கிற அரசியல் அரிப்பின் காரணமாக வலிந்து சொல்லப்படுகிற ஒரு குற்றச் சாட்டே தவிர, வேறொன்றும் அல்ல. ஆனால், உண்மையில் இந்த தீவிரவாதம் ஏன் தோன்றியது, எப்படித் தோன்றியது என்பதற்கான அரசியல், பொருளாதார, சமூகக் காரணங்களை அறியாமல், வெறுமனே இந்தப் பிரச்சினையை சட்டப் பிரச்சினையாக முன்வைப்பது என்பது நல்லதல்ல என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இந்த வெள்ளை அறிக்கை 1983 ஆம் ஆண்டிலேயிருந்து, குண்டு வெடிப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறது. 1983 ஆம் ஆண்டிலே குண்டு வெடிப்பு ஏற்பட்ட சம்பவங்களிலிருந்து குறிப்பிடுகிறது. நான் இன்னும் தெளிவாகச் சொல்ல விரும்புவது, ஏறத்தாழ 1976-க்குப் பின்னர், தமிழ்நாட்டில் 25 ஆண்டுக் காலமாக, சிறுகச் சிறுக வளர்ந்து வந்துள்ளது. அதுவும் தமிழ்நாட்டில் குறிப்பிட்ட இந்தக் கருத்து விளைய வேண்டுமானால், விளைவதற்குரிய—எப்படி ஒரு விதை முளை விடுவதற்குரிய மண் வளம் வேண்டுமோ, அதைப்போல்—ஒரு தீய கருத்து வளர்வதற்கும் மன வளம் உருவாகிவருகின்றது. அப்படி உருவாக்கப்படுவதில் அன்றைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருந்த ஆளுகிற கட்சியும் இதற்கு இசைவான முறையில், இந்தத் தீவிரவாதக் கருத்துக்கள் தோன்றுவதற்குரிய முறையில் தமிழ்நாட்டில் மக்களின் மன நிலையை வளப்படுத்திவிட்டது என்றுதான் நான் கருதுகிறேன்.

இன்றைக்கு நாம் இஸ்லாமியத் தீவிரவாதம் என்று சொல்கிறோம். நான் எடுத்த எடுப்பில் சொல்ல விரும்புகிறேன், அது தீவிரவாதம். இந்துத் தீவிரவாதமா, இஸ்லாமியத் தீவிரவாதமா என்பதல்ல. தீவிரவாதம் தவறானது தீவிரவாதம் ஆபத்தானது. தீவிரவாதம் வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டியது. ஆனாலும், அந்தத் தீவிரவாதம் தமிழ்நாட்டில் தோன்றி

[திரு. கே. சுப்பராயன்] [1998 மே 11

வளர்வதற்கான காரணமாக அமைந்தது என்பது, இன்றைக்கு இந்து மதத் தீவிரவாதிகளின் சட்டவிரோத, தேவையற்ற ஆத்திரமுட்டல் நடவடிக்கைகள்தான் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், இதே தமிழ்நாட்டில் இந்துத் தீவிரவாத அமைப்பினர் இன்றைக்கு, சுதந்திரமாக உலவிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சுதந்திரமாக உலவிக் கொண்டிருக்கிற இவர்கள், இதே தமிழ்நாட்டில் பல பிரச்சினைகளை உருவாக்கினார்கள். மைனாரிட்டி மக்களின் மனதைப் புண்படுத்துகின்ற முறையில், மைனாரிட்டி மக்களின் வணக்கத்திற்குரியவர்களையெல்லாம் கீழ்மைப்படுத்தி, கேவலப்படுத்திப் பேசுவதையே தங்கள் அரசியல் நடவடிக்கைகளாகக் கொண்டு இயங்கினார்கள். இப்படி இயங்கி ஆத்திரமூட்டியதன் மூலம் பல விளைவுகள் ஏற்பட்டன.

*பிற்பகல் 12-45*

நான் இங்கே நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, வேணுகோபால் கமிஷனுடைய பரிந்துரையின் கடைசிப் பாகத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். காலம் கருதி அவற்றை நான் படிக்க விரும்பவில்லை. 1982-ல் மண்டைக்காட்டிலே நடைபெற்ற கலவரத்தையொட்டி, மத மோதலையொட்டி அமைக்கப்பட்ட அந்த வேணுகோபால் கமிஷன் 1986-ல் அன்றைய அரசிடம் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையின் இறுதிப் பாகத்தில் R.S.S. என்கிற ஒரு தீய அமைப்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் எப்படி மக்களை மத ரீதியாகப் பிளந்து, குரோத, விரோத உணர்ச்சிகளைத் தோற்றுவித்து, மோதலின் முதல் தீக்கங்கைத் தோற்றுவித்தது என்பதை ஆராய்ந்து, மிக அழகாக அம்பலப்படுத்தியிருக்கிறது அந்த வேணுகோபால் கமிஷன். அந்த வேணுகோபால் கமிஷன் R.S.S.இன் நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் அம்பலப்படுத்தியது, இன்றைக்கல்ல, 1982-ல். அதனால்தான் அதே விஷயங்களை காலத்தின் அருமை கருதி, திரும்பப் படித்துக் குறிப்பிட விரும்பவில்லை. அவற்றை அரசு கவனத்திலே கொள்ள வேண்டும்; இறுதிப் பகுதியாக அது சொல்லப்பட்டிருக்கிறது. அதை இன்றைக்குப் பொருத்திப் பாருங்கள். தீவிரவாதத்தால் குண்டு வெடித்தது. கோயம்புத்தூரில் குண்டு வெடித்தது. கோயம்புத்தூரைச் சுற்றிலும் இருக்கிற மக்கள் மிகப் பெரிய பீதிக்கு உள்ளானார்கள். ஆனால் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் எப்படி நிகழ்ந்தது? இந்தக் குண்டு வெடிப்புக்கு



1998 மே 11] [திரு. கே. சுப்பராயன்]

முன்னர் நிகழ்ந்த சம்பவத்தைக் கோடிட்டு காட்டுகிறது வெள்ளை அறிக்கை என்றாலும், விரிவாக அதைச் சொல்லவில்லை.

நவம்பர் 29 ஆம் தேதி ஒரு போலீஸ்காரர் 'செல்வராஜ்' கொல்லப்பட்டார்- இது கொடுமையானதுதான், மிகக் கொடுமையான ஒன்றுதான். ஆனால், ஒரு போலீஸ்காரர் கொல்லப்பட்டவுடன்--நான் மனவேதனையுடன் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய சிற்றறிவுக்கு எட்டிய அளவில்--நான் அப்படிப் பார்த்ததில்லை. 'போலீஸ்' என்ற வார்த்தைக்கு என்ன பொருள் உண்டோ, அந்தப் பொருளை நாசப்படுத்தியது கோவை மாநகரப் போலீஸ். கோவை மாநகரப் போலீஸின் நடவடிக்கைகள் இந்த மாநில அரசு பல விஷயங்களுக்குப் பதில் அளிக்க வேண்டிய ஒரு பிரச்சினைக்குரிய விஷயத்தைத் தோற்றுவித்துவிட்டது. அந்த 29-ல் ஒரு செல்வராஜ் கொல்லப்பட்டு விட்டார். கொல்லப்பட்ட கொடுமையை இன்றும் நான் முழு வலிமையோடு கண்டனம் செய்கிறேன். ஆனால், எவனோ ஒரு இஸ்லாமியச் சமூகத்தைச் சேர்ந்த 3 ரௌடிகள் கொன்றுவிட்டார்கள் என்றால், அந்த இஸ்லாமியச் சமூகத்தைச் சேர்ந்த ரௌடிகளைத் தண்டிக்க வேண்டுமே தவிர, இஸ்லாமியர்கள் அனைவரையும் தண்டிக்க அனுமதிக்கலாமா?

ஒரு போலீஸ் கொல்லப்பட்டவுடன், தங்களில் ஒரு போலீஸ்காரர் கொல்லப்பட்டுவிட்டார் என்று போலீஸ்காரர்களே ரௌடித்தனத்திலே இறங்கினார்கள்; போலீஸ்காரர்களே சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டார்கள்; போலீஸ்காரர்களே சூறையாடத் தூண்டிவிட்டார்கள். இவையெல்லாம் வரலாற்றில் அழிக்க முடியாத களங்கங்கள். இந்தக் களங்கங்களைக் கோவை மாநகர போலீஸ் அன்றைக்கு நிகழ்த்தியது. அதனுடைய விளைவு என்ன ஆயிற்று தெரியுமா? ஏறத்தாழ 100 கோடி ரூபாய் மதிப்புள்ள இஸ்லாமியர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டுவிட்டன. நான் மிக அமைதியோடு கேட்க விரும்புகிறேன். 'கிறிஸ்துவர்களுடைய கடைகளில் பொருள் வாங்காதே, இஸ்லாமியர்களின் கடைகளில் பொருள் வாங்காதே' என்று wall writings உட்பட, துண்டு வெளியீடுகளை வெளியிடுவது 20 ஆண்டுக் காலமாக நடைபெற்றது. அன்றைக்குத் தடுக்காததனுடைய விளைவு, சிறுகச் சிறுக, சிறுபான்மை எதிர்ப்பு உணர்வு கீழ்மட்டம் வரையிலும் தூண்டிவிடப்பட்டு, அது குண்டு வெடிப்பாக விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. இன்றைக்கு அது விஸ்வரூபம் எடுத்திருக்கிற நிலை கண்டு வேதனைப்பட்டு

பயனில்லை. இது விஸ்வரூபம் எடுப்பதற்கு விதை போட்ட காலம், 25 ஆண்டுக் காலத்திற்கு முன்னர் தொடங்கி விட்டது. என்றைக்குச் சிறுபான்மை மக்களை வேட்டையாடுகிற உரிமையை ஜனநாயகத்தின் பெயரால் இந்துமத வெறியர்களுக்கு இந்தியா அனுமதித்ததோ, தமிழகம் அனுமதித்ததோ அன்றைக்குத் தொடங்கியதுதான் இந்த நிகழ்ச்சியின் முதல் தொடக்கம். அதுதான் இவ்வளவு தீய விளைவுகளைத் தோற்றுவித்துவிட்டது. இதற்குப் பின்னர் என்ன நடந்தது? கோவை மாநகரத்தை நான் சுற்றிப் பார்த்தேன். 'ஷோபா கார்னர்' எரிந்திருப்பதையும், பல இஸ்லாமியர்களின் வீடுகள் தேடித் தேடித் தீ வைக்கப்பட்டிருப்பதையும்--அதுவும் என்ன தெரியுமா? கிறிஸ்துவர்களின் கடைகளில், இஸ்லாமியர்களின் கடைகளில் வாங்க வேண்டாம் என்று சொன்ன அந்தச் சொல்லைச் செயல்படுத்தி விட்டார்கள். இந்த நிலை வந்தவுடன் தங்களைத் தட்டிக் கேட்க போலீஸ் இல்லை. போலீஸ் தங்களோடு இருக்கிறது என்பதால், தேடித் தேடி, முஸ்லீம்களின் கடைகளைச் சூறையாடி, ஒரு பைசாகூட அவர்களுக்கு இல்லாமல், பொருளாதாரத்தில் கோவணாண்டியாக அந்த இஸ்லாமியர்களை, கோவை மாநகரத்திற்குள் மாற்றினார்கள். இப்படி மாற்றி, பொருளாதார ரீதியாக அவர்களை முடமாக்கிவிட்டார்கள். இப்படி முடமாக்கியதற்குப் பின்னால் எழுந்த ஆத்திரத்தில், எரிச்சலில் தீவிரமாகப் பழி வாங்கவேண்டும் என்கிற வெறியில், வெடிகுண்டுக் கலாச்சாரத்திற்கு இரையானார்கள் இஸ்லாமியர்களில் ஒரு பகுதி இளைஞர்கள்.

நான் இப்போதும் சொல்கிறேன். இஸ்லாமியர்கள் பெரிதும் வன்முறையை வெறுக்கிறார்கள் என்பதை நாங்கள் நேரில் பார்த்தோம். இஸ்லாமியர்கள் பெரிதும், வன்முறைக்கு எதிராக, குறிப்பிட்ட தீவிரவாதிகளை போலீஸுக்குக்கூட அடையாளம் காட்டினார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அந்த அளவுக்கு, இஸ்லாமியர்களில் பெரும் பகுதியினர் எதிர்த்தார்கள். ஆனால் இவ்வளவு நடந்து, இந்தத் தீவிரவாத் இளைஞர்க்ள் இதற்குப் பலியாகிவிட்டார்கள். நான் இந்தப் பேரவையின் வாயிலாக, தீவிரவாதத்திற்குப் பலியாகியிருக்கிற இளைஞர்களையும், அவர்களை ஆதரிக்கிற சில பேர்களையும் எச்சரிக்க விரும்புவது இஸ்லாமியர்களில் தோன்றியுள்ள இந்தத் தீவிரவாதம், 3 தீய விளைவுகளை, சமூக வாழ்வில் தோற்றுவித்திருக்கிறது. ஒன்று, எவரைக் காப்பாற்ற வேண்டும் என்று இவர்கள் வெடிகுண்டு செய்து வீசுகிறார்களோ, அவர்களைப் பாதுகாப்பற்றவர்களாக ஆக்கிவிட்டது. இரண்டாவது,



இஸ்லாமியர்களைப் பழி வாங்கக் கூடாது என்று, இந்து சமூகத்திலே மதச்சார்பற்ற அரசியலை முன்னிறுத்திப் போராடுகிற சக்திகளைப் பலவீனப்படுத்திவிட்டது. மூன்றாவது, எவருக்கு எதிராக இவர்கள் வெடிகுண்டு வைக்கச் செய்தார்களோ, அந்தத் தீய சக்தியான இந்துத் தீவிரவாதம், இந்து மக்கள் மத்தியில் ஆதரவு பெற்று வளர, வாய்ப்பு அளித்துவிட்டது. இந்த மூன்று தீங்குகள் இஸ்லாமியத் தீவிரவாதத்தால் தோன்றிவிட்டன என்கிற வேதனையை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். எனவேதான், இவ்வளவு மிக மோசமான பின் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தீவிரவாதத்திற்குப் பலியாகி இருக்கிற அந்த இளைஞர்களை உண்மையில் காப்பாற்ற வேண்டும்.

பிற்பகல் 12-50

இது ஒரு சமூகப் பிரச்சினை, சட்டப் பிரச்சினையல்ல. எனக்கு நேரம் இல்லாததால் நான் விவரங்களுக்குள் போகவில்லை. ஆனாலும், இந்த முஸ்லீம் இளைஞர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்தான். இவர்களுக்கு இத்தகைய நோயை ஏற்படுத்தியவர்கள் இந்த R.S.S. இந்து முன்னணியினர். நான் கேட்கிறேன், 100 குண்டுகள் வெடிக்கும் என்று இந்து முன்னணித் தலைவர் இராமகோபாலன் சொன்னாரே, அவரே வெடிக்க ஏற்பாடு செய்திருக்கிறாரா? அல்லது வெடிக்கும் என்பது எப்படி அவருக்குத் தெரியும்? இந்த இடத்திலேதான் நீங்கள் ஒரு அரசியல் சதியை உணரவேண்டும். ஒரு பத்திரிகை,, தினமலர் என்று கருதுகிறேன். ஒரு கட்டத்திலே செய்தி போட்டது,, கோவைப் பதிப்பிலே. சசிகலா நடராஜன் இதற்குப் பின்னால் இருக்கிறார் என்று செய்தி போட்டார்கள். இதுபற்றி எல்லாம் ஏதாவது பரிசீலிக்கப்பட்டது உண்டா? இதற்குள் ஓர் ஆழமான அரசியல் பின்னணி இருக்கிறது என்று இன்னமும் என்னுடைய உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை உள்ள ஒவ்வொரு மயிர்க்காலிலும் ஆவேசம் பொங்க, நான் மாநில அரசுக்கு எச்சரித்து எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இதை நீங்கள் அவ்வளவு எளிதில் விட்டுவிடாதீர்கள் இதற்கு ஓர் ஆழமான அரசியல் பின்னணி உண்டு. மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என்று விரும்புகிற ஒரு சக்தி, நிர்ப்பந்தம் செய்தும் 356-ஐப் பயன்படுத்தவில்லை என்கிற விரக்தி நிலையில், அதுவும் ஒரு பொறுப்பற்ற அரசியல்வாதி, அந்த சம்பந்தப்பட்ட நபர்-- எந்த விளைவையும் தோற்றுவித்து அதிகாரத்தைக் கைப்பற்றுவார். எந்த

விலையயும் கொடுத்துக் கைப்பற்றுவார் அந்த நபர்---அவர் இத்தகைய நடவடிக்கையில் இறங்குவார். நான் மீண்டும் பொறுப்போடு--சுப்பராயன் என்ற நபர் ஒரு சிறிய நபராக இருக்கலாம். ஒரு தனி நபராக இருக்கலாம். ஆனால் நான் பிரதிநிதித்துவப்படுத்துகிற இயக்கம், வரலாற்றுப் பெருமை கொண்டது என்பதால் குறிப்பிடுகிறேன். அரசியல் கீர்த்தி கொண்டது எனபதால் குறிப்பிடுகிறேன். இந்த நபர்கள், இத்தகைய அரிப்புள்ள அரசியல்வாதிகள்--- எப்படி இராமகோபாலன் 100 குண்டுகள் வெடிக்கும் என்று சொன்னாரோ, அதேபோல்---ஜெயலலிதா போன்றவர்கள், அவரைச் சேர்ந்தவர்கள், இந்த அரசைக் கலைக்க வைப்பதற்குரிய வேலைகளைச் செய்வோம் என்று சொல்லி இருப்பது, வெறும் வார்த்தை விளையாட்டு அல்ல. எதிர்காலத்தில் அவர்கள் நடத்தப்போகிற அரசியல் விளைவுகளின் முன் அடையாளம்தான். எனவே, மாநில அரசு இதில் விழிப்போடு இல்லை என்றால், இராமகோபாலன் ஒரு விநாயகர் சிலையை வைத்துக்கொண்டு தப்பித்துக் கொள்வார். இதையெல்லாம் நாம் அனுமதிக்க முடியாது.

நான் இன்னும் கேட்க விரும்புகிறேன். எங்களுடைய மூதாதையர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தது வேறு. என்றைக்குத் தமிழ்நாட்டுத் தெருக்களிலே விநாயகர் சிலையை ஊர்வலமாக விட்டார்கள், யோசித்துப் பாருங்கள். எங்கள் மூதாதையர்கள் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தது, உருட்டிப் பிடித்தால் பிள்ளையார்; சாணத்தை உருட்டிப் பிடித்து ஒரு புல்லை நட்டுவைத்தால் அது பிள்ளையார். வழித்து எறிந்தால், அது சாணம். உருட்டி வைத்தாலே போதும், சாணம்-- மாட்டுச் சாணத்தை வைத்து வணங்கிவிடலாம் என்று தான் எங்களுடைய முன்னோர்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். ஆனால் இவர்கள் என்ன செய்கிறார்கள்? தெருத்தெருவாக விநாயகர் சிலையை வைத்து, தமிழக வரலாற்றில் கேட்டிராத ஒன்றைச் செய்து, வகுப்புக் கலவரத்தை வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு, நெஞ்சுக்கு நெஞ்சு, தீப்பற்ற வைக்க வேண்டும் என்ற ஆழமான உள்நோக்கத்தோடு, இந்தத் தீய வேலைகளில் இறங்கி இருக்கிறார்கள். இது ஒன்றும் விநாயகரைக் காப்பாற்றுவதற்கோ, விநாயகருக்குப் பூஜை செய்ய வேண்டும் என்றோ அல்ல. எனவே, மாநில அரசு என்ன செய்ய வேண்டும் தெரியுமா? இந்துத் தீவிரவாதத்தின் தீய நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.



திருப்பூரிலே ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியில் R.S.S.-ஐச் சேர்ந்தவர்கள் ஆயுதங்களோடு விளையாட்டு நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். தனியார் பள்ளியில், பள்ளி நடத்த அனுமதி வாங்கி, அங்கு R.S.S. விளையாட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே. இப்படிப்பட்ட இந்த நடவடிக்கைகளைப் பற்றியும் அரசு மிக உஷாராகப் பரிசீலிக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். சமூக விரோதிகளைப் பற்றிச் சொல்கிறோம். துரதிருஷ்டவசமாக, தேச விரோதிகள் இப்போது தேசத்தின் தலைவர்களாக மாறிவிட்டார்கள். இந்தியாவை வழிநடத்துகிற ஆட்சி இந்தியாவின் தலைமைப பொறுப்புக்கு வந்திருக்கிறவர்கள் தேசிய விடுதலைக்கு எதிராக நின்றவர்கள் என்பதல்ல, தேசத்திற்கே எதிராக நின்றவர்கள். தேசம் என்பது எது? வெறுமனே, மண்ணும் மரமும், மலையும் மட்டையுமா தேசம்? தேசம் என்பது மக்கள்தான். மக்கள் என்பவர்கள் யார்? ஜாதிகளாகப் பிரிந்திருக்கிறார்கள், மதங்களாகப் பிரிந்திருக்கிறார்கள். எல்லா ஜாதிகளையும், எல்லா மதங்களையும் சேர்த்து இவர்களின் ஒட்டுமொத்த நலன்களைப் பிரதிபலிப்பதுதான் தேசப் பற்று, தேச நலன். ஆனால், இவர்கள் எதைச் செய்கிறார்கள் என்றால் மக்கள் பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் பிரதிநிதிகளாகச் செயல்படுவதன் மூலம், ஒட்டுமொத்த மக்களின் நலன்களை இவர்கள் புறக்கணிக்கிறார்கள். அதற்கு எதிராகச் செயல்படுகிறார்கள். எனவே, இவர்களின் நடவடிக்கை சமூக விரோதச் செயல், தேச விரோதச் செயல் என்பதை நாம் மிக ஆழமாகப் புரிந்து, அவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம், பத்திரிகைகள்.....

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** நீங்கள் வரும்போதே புரிந்துகொண்டேன். வருகிறபோதே எல்லோருக்கும் இருக்கின்ற சுதந்திரம் எனக்குக் கிடைக்காது என்று புரிந்துகொண்டுதான் வெகு விரைவாக முடித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நியாயமான குற்றச்சாட்டு அல்ல. எனக்குப் பதிலாக துணைத் தலைவர், மற்றவர்களுக்கு எல்லாம் நேரத்தை நினைவுபடுத்தினார். அதுபோல் நானும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். அவ்வளவுதான்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகள் ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கிற நான்காவது தூண் என்று நாம் சொல்கிறோம். ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கின்ற நான்கு தூண்களுமே அழுகிவிட்டன. எல்லாத் தூண்களும் அதனதன் தன்மைக்குத் தக்கபடி அழுகியிருக்கின்றன. பத்திரிகைகளும் அழுகாமல் இல்லை. பத்திரிகைகளும் அழுகியே நிற்கின்றன. பத்திரிகைகள் பொறுப்பற்ற முறையிலே இந்த வகுப்புக் கலவரங்களில் தலைப்பிட்டுச் செய்திகளைப் போடுகின்றன, எரிகிற வகுப்பு வெறியை விசிறி விடுகிற வேலையைச் சில பத்திரிகைகள் செய்கின்றன. நான் எல்லாப் பத்திரிகைகளையும் சொல்லவில்லை. எல்லாச் செய்திகளையும் சொல்லவில்லை. அவர்கள் எப்போதுமே பரபரப்புக்கு மட்டுமே முதலிடம் கொடுப்பார்கள். பரபரப்பிற்கு முதலிடம் கொடுக்கிற பழக்கத்திற்கு addict ஆகிவிட்ட அந்தப் பத்திரிகைகள் இந்த விஷயத்திலே தன்னுடைய சமூகப் பொருளாதாரக் கடமையை உணர்ந்து செயல்படவில்லை என்றால் ரொம்பவும் கஷ்டம் என்பதைத்தான் நான் தங்கள் மூலம் தெரிவித்துக்கொண்டு, பத்திரிகைகளும் இந்த விஷயத்தில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அரசு செய்ய வேண்டிய மிக முக்கியமான விஷயம். என்னவென்றால் அங்கே கோவையில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. ரூ.100 கோடிக்கு மேல் கோவை மாநகரத்தில் சூறையாடப்பட்டு விட்டது. இஸ்லாமியரில் பெரும்பகுதியினர் சூறையாடப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கு ஓர் இடைக்கால நஷ்டஈடு வழங்கவேண்டும். இடைக்கால நஷ்டஈடு வழங்கி அவர்கள் இந்த மண்ணில் நிற்பதற்குரிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல் அவர்களை நடைமுறையில் இரண்டாம் குடிமக்களாக நடத்துகிற போக்கு கோவை மாநகரில் நிலவுகிறது. அவர்கள் குடியிருக்கின்ற வீட்டைக் காலி செய்கிறார்கள். நானே ஒரு பஸ்ஸில் கோயம்புத்தூருக்கு ஏறினேன். ஒரு சி.டி.சி. பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தவுடன், திடீரென்று வேறு ஒருவர்-- என்னோடு வந்தவர் இறங்கிக்கொண்டார். ஏனென்று கேட்டேன். 3 பெண்கள்-கோஷா



பெண்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று இறங்கிக் கொண்டார். அப்போது ஆயிஷாவைத் தேடிக்கொண்டிருந்த நேரம். உட்கார்ந்திருந்தப் பெண்ணுக்கும், இதற்கும் சம்பந்தமே இல்லை. எந்த அளவிற்கு இஸ்லாமியர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள் என்கிறபோது அவர்களுக்கு இந்த நாட்டின்மீது அக்கறை பிறக்குமா? இத்தகைய நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படலாமா? குடியிருக்கிற வீட்டைக் காலி செய்யச் சொல்கிறார்கள். பல இடங்களில் பல பிரச்சினைகளை ஏற்படுத்துகிறார்கள். எனவே அவர்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களை வளர்த்ததே 2 பேர்தான். இஸ்லாமியத் தீவிரவாதத்தை வளர்த்த குற்றவாளிகள் இருவர். ஒன்று போலீஸ். இரண்டு இந்துத் தீவிரவாதம். போலீஸ் துறையில் ஏற்பட்ட ஊழல் முறைகேட்டுத் தொடர்பு, இவர்களைப் பாதுகாத்தது.

இன்னொரு விஷயம். இன்றைய இந்து இஸ்லாமிய மதங்களில் இருக்கிற பெரு முதலாளிகள் தங்கள் நலன்களைக் காப்பாற்றிக்கொள்ள அடியாட்களாக இத்தகையவர்களை உருவாக்கி காசு கொடுத்து வளர்த்துக் காப்பாற்றி வருகிறார்கள். இத்தகைய போக்கு இன்றைக்கும் கோயம்புத்தூரில் இருக்கிறது. இதுபோல் இன்னும் பல இடங்களில் இருக்கும். எனவே இவற்றையெல்லாம் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, நெறிமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான, உகந்ததான முறையை நாம் உருவாக்க வேண்டும் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிறைவாக ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைப்பதற்கு ஏதாவது காரணம் இருந்தால், அதுபற்றி நீங்கள் சிந்திக்கலாம். அதற்காகப் போராட்டத்தைக்கூட நடத்தலாம். எந்த அரசியல் கட்சி இயக்கங்களுக்கும் இது பொருந்தும். ஆனால் ஒரு வரையறை வேண்டாமா? ஒரு நெறிமுறை வேண்டாமா? நாடே கலங்கியிருக்கின்ற ஒரு தீவிரவாதப் பிரச்சினையைச் சந்திக்கும்போது அக்கறையற்ற முறையில் அரசியல் கண்ணோட்டத்தோடு இதை அணுகலாமா? இதை அந்தக் கட்சியில் இருக்கிறவர்கள் அந்தந்தத் தலைவருக்குச் சொல்ல வேண்டாமா? அந்தந்தக் கட்சிகளிலே சொல்லி அதை முறைப்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாமா என்பதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அப்படிச் செய்யவில்லை என்றால், பல சிக்கல்களைத் தமிழ்நாடு சந்திக்க வேண்டிவரும்.

நிறைவாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இனிமேல் முதலமைச்சரே சொன்னாலும் நான் ஒத்துக்கொள்ளப் போவதில்லை. இனிமேல் குண்டு வெடிக்காது என்று சொல்ல முடியுமா? 6 கோடி பேர் இருக்கிறார்கள். 6 கோடி மக்கள் பல லட்சக்கணக்கான வீடுகளில் வசிக்கிறார்கள். எங்காவது ஓர் இடத்தில் குண்டு வெடிக்காது. குண்டு வெடிக்காமல் இருக்க நான் உத்தரவாதம் என்று யாராவது உறுதிமொழி கொடுக்க முடியுமா? முடியவே முடியாது. 80,000 போலீசை வைத்துக்கொண்டு எப்படிச் செய்ய முடியும்? அதுவும் கிழடுதட்டிப் போன இந்த புலனாய்வுத் துறையை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? இதை வைத்து ஒன்றும் செய்ய முடியாது என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். தீவிரவாதம் நவீனப்படுத்தப்பட்டு நிற்கிறது. காவல் துறை கிழடு தட்டிப்போயிருக்கிறது. எனவே தீவிரவாதம் எப்படி நவீனப்படுத்தப்பட்டு மக்களைத் தாக்குகிறதோ, அதற்கேற்றபடி பொருத்தமான முறையில் இந்த அரசு இயந்திரம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

*பிற்பகல் 1-00*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் போன வாரம் பிற்பட்டோர் நலத் துறையிலே நாமெல்லாம் இங்கே பேசி, தமிழ்நாடு முழுவதும் என்ன சட்டசபையிலே ஒரே ஜாதியைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்று ஒரு அவப்பெயர் இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சிக்கு ஏற்பட்டது. இப்போது, இன்று ஏற்பட்ட இந்தச் சூழ்நிலையின் காரணமாக, நாளைக்கு தமிழ்நாட்டிலே, சட்டசபையிலே என்ன பேசினார்கள்? அன்றைக்கு ஜாதியைப் பற்றி பேசினார்கள். இன்றைக்கு மதத்தைப் பற்றி பேசுகிறார்கள் என்ற சூழ்நிலைதான் நாளை வரும். ஆகவே, இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற முறையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நான் கருதுகிறேன்.



கோயம்புத்தூர் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி ஒரு நல்ல அறிக்கையை வெள்ளை மனதோடு தயார் செய்து நமக்கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1983-ஆம் ஆண்டு தொடங்கி 1995 ஆம் ஆண்டு வரை 11 இடங்களில் 9 குண்டு வெடிப்புகள் தமிழ்நாட்டிலே நடந்து இருக்கின்றன. அதில் 3 இடங்களில் மட்டும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை கொடுத்திருக்கிறார்கள். மீதம் இருக்கின்ற 6 இடங்களில் யார் குண்டு வைத்தது, எதற்காக வைத்தார்கள் என்ற கண்டுபிடிப்பு இதுவரை நடைபெறவேயில்லை.

அதேபோல, இந்தக் குண்டுவெடிப்புக்கு முன்பு, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவதற்கு முன்பு நடந்த குண்டு வெடிப்புகளைப் பற்றி இங்கே விரிவாக, விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, ஏற்கெனவே 1987 ஆம் ஆண்டு அரியலூருக்கு அருகில் மருதையாற்றுப் பாலத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 26 பேர் மரணம் அடைந்தார்கள். 140 பேர் காயமுற்றார்கள். ஆனால், எதற்காக குண்டு வைத்தார்கள். அவர்கள் யார் என்ற விவரம் இதுவரை இந்த அவைக்கோ, மக்களுக்கோ நம்முடைய அரசு, அப்போதிருந்த அரசும் சரி, இப்போது இருக்கிற அரசும் சரி தெரிவிக்கவில்லை. தேனி மாவட்டம் சுருளிப்பட்டியில் 1992-ஆம் ஆண்டு ஒரு குண்டு வெடிப்பு நடந்தது. குற்றவாளி 6 ஆண்டுக்காலமாக தலைமறைவாகவே இருந்து கொண்டிருக்கிறான். அந்தக் குற்றவாளி யார், எதற்காக அந்தக் குண்டு வைக்கப்பட்டது--அவர்கள் ஆட்களையெல்லாம் அடையாளம் கண்டிருக்கிறார்கள். ஆனாலும்கூட, அவர்களைப் பற்றிய எந்தவிதமான தகவலும் நம்முடைய அரசு இதுவரை நமக்குத் தெரிவிக்கவில்லை. அப்படி ஒரு குண்டுவெடிப்பில் ஈடுபட்டு, 6 ஆண்டுக்காலமாக தலைமறைவாக, குற்றவாளியாக இருக்கின்றவரை proclaimed offender என்று அறிவித்து அவருடைய சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்யலாம் என்று சட்டத்தில் இருந்தும்கூட நம்முடைய போலீஸ் துறை, நம்முடைய அரசு அதில் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. இதையெல்லாம் எதற்காக இங்கே சொல்கிறேன் என்றால், நம்முடைய போலீஸ் துறையைப் பொறுத்தவரை அவர்கள் இன்று குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறார்களே தவிர, தண்டனை கொடுப்பதில் அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

இருக்கிறது. இதுவரை யாருக்காவது தண்டனை கொடுத்திருக்கிறோமா? ஏன் கொடுக்கவில்லை? அவர்களை எல்லாம் பிடித்து வைத்திருக்கிறோம் என்று சொன்னால்-இப்போது TADA வும் கிடையாது. இப்போது இருப்பது National Security Act தான். National Security Act-லே என்ன செய்ய முடியும்? ஒரு வருஷம்தான் வைத்திருக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஒரு வருஷம் கழித்து இவர்கள் எல்லாம் வெளியே வந்து விடுவார்கள். வெளியே வந்தால் இன்னும் தீவிரமாக அவர்கள் தீவிரவாதிகளாக மாறுவார்களே தவிர அவர்கள் திருந்துவதற்கான வழியே கிடையாது. ஆகவே உடனடியாக இதுவரை பிடித்து வைத்திருப்பவர்களை எந்த இடங்களில் வெடிகுண்டு வெடித்தது. அவர்கள் யார் யார் என்ற காரணத்தைக் கண்டுபிடித்து உடனடியாக charge sheet போட்டு அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமையாகும். இங்கே ஜாதி மதம் இதெல்லாம் நாம் பார்க்கவே கூடாது. இந்த நாட்டிலே நம்முடைய சகோதரர்களுக்கு எல்லாம் இன்று ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? போலீஸ் துறை இதில் கவனம் செலுத்தி தண்டனையை உரியவர்களுக்கு உருப்படியாக வாங்கிக் கொடுத்திருந்தால் இந்த அளவுக்கு நிலைமை மோசமாகப் போய் இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து.

இங்கே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இந்து, முஸ்லீம், கிருஸ்துவர்கள் என்று நாம எல்லாம் ஒற்றுமையாக வாழக்கூடியவர்கள். நான்கூடச் சென்ற வாரம் நம்முடைய காரைக்காலில் இருக்கிற சனீஸ்வரன் கோயிலுக்குச் சென்று அங்கே சனீஸ்வரனை வணங்கி அங்கிருந்து நேராக நம்முடைய நாகூர் தர்காவுக்குச் சென்று நாகூர் ஆண்டவனை வணங்கி அங்கிருந்து வேளாங்கன்னிக்குச் சென்று ஏசுநாதரை வணங்கிவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன். ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த ஜாதி, மத, இன மொழி வேறுபாடு எல்லாம் நமக்குக் கிடையாது. தீவரவாதிகளின் தலைவர், அல்-உம்மா தலைவர் பாட்ஷாவிடம் குமுதத்தில் ஒரு கேள்வி கேட்கிறார்கள். என்ன கேள்வி கேட்கிறார்கள் என்றால் "பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு துவக்கப்பட்டது உங்களுடைய அல்-உம்மா அமைப்பு. உங்கள் அமைப்பின் நோக்கம்தான் என்ன" என்று கேட்கிறார்கள். அதற்கு அவர் என்ன பதில் சொல்லுகிறார் என்றால் முக்கியமான விஷயம் "முஸ்லீம் சமுதாயத்தின் வழிபாட்டுத் தலமான பாபர் மசூதி இடிக்கப்பட்ட



பிறகு எங்கள் அமைப்பைத் துவக்கினோம். மீண்டும் அதே இடத்திலே பாபர் மசூதி கட்டும் வரை அனைத்து வழிமுறைகளிலும் தொடர்ந்து போராடுவதுதான் எங்களுடைய நோக்கம்" என்றார். இந்த நோக்கத்திற்காக எங்களையும் நீங்கள் கூப்பிட்டு இருக்கலாமே. இப்படி அநியாயமாகக் குண்டுகளை வைத்து இந்துக்கள் என்றும் பாராமல், முஸ்லீம்கள் என்றும் பாராமல், கிருஸ்துவர்கள் என்றும் பாராமல் அப்பாவி மக்களைக் கொலை செய்வதற்காக இந்த மோசமான செயலில் பாட்ஷா ஈடுபட்டதை நம்முடைய ஆண்டவன் மன்னிக்கமாட்டான் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

நம்முடைய இஸ்லாமிய மதத்தில் உள்ள குரானில் மிகத் தெளிவாக என்ன சொல்லியிருக்கிறது என்றால், எவர் போய் மக்களுக்கு அநியாயங்கள் செய்து மிதமிஞ்சி பூமியில் அட்டூழியங்கள் செய்கிறார்களோ அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கலாம் என்று குரானில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கொடுமைக்காரனுக்கு அவன் கொடுமைக்காரன் என்பதை அறிந்திருந்தும் துணை புரிந்து வலிவு ஊட்டுகிறவன் இஸ்லாமியத்தை விட்டு வெளியேற்றப்படுவான் என்று நபிகள் நாயகம் சல் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு இந்தக் கொடுமைக்காரனுக்கு எவ்வளவு கடுமையான தண்டனை கொடுக்க முடியுமோ--அவன் யாராக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும் சரி,-- அவ்வளவு கடுமையான தண்டனை அவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தீவிரவாதிகளைப் பற்றி ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுவது என்னவென்று சொன்னால் சட்டம் போடுகிறபோது மறுபடியும் அதில் ஓட்டை விழாதவண்ணம் மிகத் தெளிவான சட்டமாக நீங்கள் இயற்ற வேண்டும். இப்போதுகூட வீரப்பனை எடுத்துக் கொள்ளுங்கள். வீரப்பனைத் தேடி தினமும் ஆட்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

எதற்குப் போகிறார்கள் என்றால் சாப்பாடு கொண்டு போகிறார்கள். விவரம் தெரிந்து வரப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி அந்த வீரப்பனைத் தேடிப் போகிறவர்களைப் பிடிப்பதற்கு சட்டத்திலே இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அதுபோல இவர்களுக்கு நீங்கள் கொடுக்கிற சட்டம் ஒரு தெளிவான சட்டமாக, எந்தவிதமான ஓட்டை உடைச்சலும் இல்லாத சட்டமாக இருக்க வேண்டுமானால் அவசரப்பட்டு நீங்கள் சட்டத்தை இயற்றி விடக்கூடாது. நல்ல நிபுணர்களை வைத்து, சிறந்த சட்ட நிபுணர்களை வைத்து அந்தச் சட்டம் இந்த நாட்டில் இந்தத் தீய சக்திகளை, குறிப்பாக இந்த வன்முறையாளர்களை, தீவிரவாதிகளை அறவே ஒழிக்கின்ற வகையில், இனிமேல் இந்த நாட்டில் இந்தத் தீவிரவாதம் இல்லாமல் இருக்கின்ற வகையில் ஒரு சிறப்பான சட்டமாக இயற்ற வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்று இந்த நாட்டில், இந்தத் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு நம்முடைய போலீஸ் துறையை முழுமையாக கடந்த காலப் போலீசைப் போல ஒரு தீவிரமான போலீசாக மாற்ற வேண்டியது நம்முடைய கடமை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டில் இன்னும் 100 ஆண்டு காலத்திற்கு இந்தத் தீவிரவாதமே இல்லை என்ற ஒரு வரலாற்றைப் படைக்கின்ற வகையில் இந்த போலீஸ் துறையை முழுமையாக, புதுமையாக மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அடுத்து, National Security Commission என்ற ஒரு Commission 1980 ஆம் ஆண்டு மத்திய அரசுக்கு ஒரு Report கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு State Security Commission நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது சுப்ரீம் கோர்ட்டில் இன்று வழக்காக இருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் நம்முடைய முதலமைச்சரவர்களை என்ன கேட்டுக் கொள்கிறேன் என்று சொன்னால், "State Security Commission" என்ற ஒன்றை நீங்கள் அமைக்கலாம் என்று நல்ல வல்லுநர்கள் எல்லாம் என்னிடம் சொல்கிறார்கள். எப்படி அமைக்க வேண்டும் என்று சொன்னால்,





முதலமைச்சரவர்கள் அதற்குத் தலைவராக இருக்கவேண்டும்; எங்களைப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிலே அங்கத்தினர்களாக இருக்கவேண்டும்; நல்ல அனுபவம் மிக்க ஓய்வுபெற்ற நீதிபதி அதிலே உறுப்பினராக இருக்கவேண்டும்; அதேபோல ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரிகள் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு "State Security Committee"-யை அமைப்பீர்களேயானால் அந்தக் குழு மாதந்தோறும் கூடுமேயானால், நாட்டிலே நடக்கின்ற அக்கிரமங்களை, அநியாயங்களை, இதுபோன்ற தீவிரவாதங்களையெல்லாம் முளையிலே கிள்ளுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று எனக்குப் பல நல்ல அறிஞர்கள் எல்லாம் ஆலோசனை சொன்னார்கள். நான் அந்த ஆலோசனையை நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு வைக்கிறேன். உடனடியாக, இப்படி ஒரு "State Security Committee"-ஐ அமைத்து, இந்த நாட்டில் இனிமேலும் இந்த வன்முறைகள் நடக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில், இந்தத் தீவிரவாத அமைப்புக்களை முழுமையாகக் களைவதற்கு இந்தக் கூட்டம் பயன் உடையதாக இருக்கும் என்று கருதி, இந்த வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள விவரங்கள், இதுதான் கடைசி அறிக்கையாக அமையும் வகையில் தமிழகத்திலே இனிமேல் எந்தத் தீவிரவாதமும் இல்லை என்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டும். போலீஸ் துறையை தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், அவையிலே வைக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கை குறித்துத் தங்களுடைய சீரிய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

நான் முன்னுரையிலே சில வார்த்தைகளில் குறிப்பிட்டதைப்போல, 23-4-1998 அன்று, கோவை குண்டு வெடிப்பு சம்பந்தமாக இந்த அவையிலே வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில் 16 ஆவது பகுதியில், 3 ஆவது பாராவில், 'காவல் துறைத் தலைவர் ஒருவர்

தலைமையில் மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணைக் குழு திறம்பட புலன் விசாரணை மேற்கொண்டு, இக்குற்றவாளிகளைக் கைது செய்ததுடன், சதியை அம்பலப்படுத்தக்கூடிய மிகப் பயனுள்ள சாட்சியங்களையும் சேகரித்துள்ளது' என்று குறிப்பிட்டிருக்கின்றேன். அவை குறித்த விவரங்களை இந்த அவையின் முன்னால் வைப்பது என்னுடைய கடமை ஆகிறது.

அதற்கு முன்பு ஒரு வேண்டுகோளை நான் விடுக்க விரும்புகிறேன். இந்த அறிக்கை குறித்து உரையாற்றி இருக்கின்ற, தங்களுடைய கருத்துக்களையெல்லாம் தெளிவுபட எடுத்துக்கூறியிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கட்சிகளின் தலைவர்கள் பலர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, இது ஒரு அரசியல் கட்சிக்கு மாத்திரம் உரிய பிரச்சினை அல்ல; இது ஒரு ஆட்சி மாத்திரம் சமாளிக்கக்கூடிய, சந்திக்கக்கூடிய பிரச்சினை அல்ல. இது சட்டப் பிரச்சினை மாத்திரம் அல்ல; சமுதாயப் பிரச்சினை. சட்டக் கண்ணோட்டத்தோடு மாத்திரம் அணுகாமல், சமுதாயக் கண்ணோட்டத்தோடும் இதனை அணுக வேண்டுமென்ற மற்றக் கட்சித் தலைவர்களுடைய வேண்டுகோளோடு, என்னுடைய வேண்டுகோளையும் நான் இணைத்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-20

சிலர் இதை அரசியலாக்க விரும்பினாலும்கூட, இன்றைக்கு இங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும், அல்லது எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தாலும், என்றைக்குமே இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் பொதுவான முறையிலே அணுகித் தீர்வு காண முன்வந்திருக்கிறதே அல்லாமல், எந்தக் கட்சியினுடைய அரசாக இருந்தாலும், அந்த அரசோடு ஒத்துழைக்க முன்வந்திருக்கிறதே அல்லாமல், அதை வைத்து அந்த ஆளும் கட்சிக்கு தொல்லை கொடுக்கவேண்டுமென்று என்றைக்கும் எண்ணியதும் இல்லை; அப்படிச் செயல்பட்டதும் இல்லை.

இதே மாமன்றத்தில் 1957 ஆம் ஆண்டு நடைபெற்ற முதுகுளத்தூர் ரணகளத்தைப் பற்றி அன்றிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது, அந்தத் தீர்மானத்தை முன்வைத்து எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் எல்லாம் மிகுந்த கடுமையான



பதப்பிரயோகங்களைப் பயன்படுத்திப் பேசியபோது, காமராஜருடைய அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற, வாக்கெடுப்புக்கு விடுகின்ற அந்தக் காலகட்டத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையிலே அமர்ந்திருந்தார்கள். அவர்கள் எழுந்து, "நாம் இந்தத் தீர்மானத்தின் மூலமாக, பிரச்சினைகளை விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய தலைமையிலுள்ள அமைச்சரவை பதவி விலக வேண்டுமென்று சொல்லுகின்ற ஒரு நோக்கத்திற்கு இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது" என்று குறிப்பிட்டு, 'நாங்கள் இதிலே நடுநிலை வகிக்கிறோம்' என்பதற்கு அடையாளமாக அந்தத் தீர்மானம் நிறைவேறுகின்ற நேரத்தில் வெளிநடப்புச் செய்து காட்டினார்கள். அப்போது, அண்ணா அவர்களுடைய தலைமையிலே நானும், பேராசிரியர் அவர்களும், மொத்தம் 15 உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தோம். இதை ஏன் சொல்கிறேன் என்றால், இதுபோன்ற சம்பவங்களைப் பயன்படுத்திக் கொண்டு, எதிர்க்கட்சி, ஆளும் கட்சிக்குத் தொல்லை கொடுப்பது கூடாது; இது ஒரு பொதுப் பிரச்சினை, இதிலே எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காகத்தான். இதுபோல், பல சம்பவங்களில், இயற்கைச் சீற்றத்தால் ஒரு மாநில அரசுக்கு அல்லது நாட்டிற்கு ஒரு தொல்லை ஏற்படுகின்றபோது, எப்படி எல்லாக் கட்சிகளும் அரசியல் சார்பற்ற நிலையில் ஒன்றுகூடிப் பணியாற்ற வேண்டுமோ, அதைப் போலத்தான், இந்தச் சம்பவங்களில், அது ஜாதிச் சண்டையானாலும், மதப் போராட்டமானாலும், அதிலே ஒரு பொது நோக்கோடு எல்லாக் கட்சிகளும் தங்களுடைய தூய உள்ளத்தைத் திறந்து ஈடுபட வேண்டுமென்ற அந்த நிலையை நான் இங்கே நினைவூட்ட மீண்டும், மீண்டும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் எடுத்துக்காட்டியதைப்போல, வெள்ளை அறிக்கையிலே குறிப்பிட்ட அந்தத் தனி விசாரணைக் குழு, தன்னுடைய புலன் விசாரணையைத் தீவிரமாக நடத்தத் தொடங்கி, இந்த அறிக்கையிலே பல விஷயங்கள் குறிப்பிடப்படவில்லையே என்றெல்லாம், பல தரப்பிலேயிருந்து எடுத்துக்காட்டப்பட்ட குறைபாடுகளையெல்லாம் நீக்குகின்ற வகையிலே பல செய்திகளை நமக்கு இன்றைக்கு வழங்கியிருக்கிறது. அவை முழுமையானவை அல்ல. அந்தச் செய்திகளை நோக்கி இந்தப் புலன் விசாரணைக் குழு தீவிரமாக நடைபோடுகிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட

விரும்புகின்றேன். இந்த விசாரணைக் குழு, I.G. திரு. பரம்வீர் சிங், ஐ.பி.எஸ்., அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

கோவை குண்டுவெடிப்பு வழக்கு சம்பந்தமாக 171 எதிரிகள் அடையாளம் கண்டறியப்பட்டிருக்கிறார்கள். இதில் 9-5-1998 முடிய 113 எதிரிகளை சிறப்பு விசாரணைக் குழு போலீசார் கைது செய்திருக்கிறார்கள். இதிலே 8 எதிரிகள் இறந்து போயிருக்கிறார்கள். 15-2-1998 அன்று காலை சுமார் 4 மணியளவில் கோவை திருமால் வீதியிலே போலீசாரின் அதிரடிச் சோதனையின்போது 6 தீவிரவாதிகள் இறந்திருக்கிறார்கள். 15-2-1998 அன்று காலை சுமார் 6½ மணியளவில் கோவை ஒப்பணக்கார வீதியிலே உள்ள, மோகன் ரேடியோ என்ற பூட்டி வைக்கப்பட்ட கடையில் குழாய் வெடிகுண்டு வெடித்ததில் எதிரி முகமது ரபீர் என்பவர் பலத்த காயமடைந்து இறந்தார். 14-2-1998 அன்று போலீசார் நடவடிக்கை எடுத்தபோது, இஸ்மாயில் என்ற குற்றவாளி இறந்து போனார். 17-2-1998 அன்று கோவை அல் அமீன் காலனியில் தரையிலே மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகள் இருப்பது தெரியாமல் அங்கே விளையாடிக்கொண்டிருந்த நான்கு முஸ்லீம் சிறுவர்கள் இறந்து போனார்கள் இந்தச் சூழ்நிலை ஏற்படுவதற்கான ஆரம்பக் காரணங்களை இங்கே உரையாற்றிய அத்தனை உறுப்பினர்களும், தலைவர்களும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். எப்போது தொடங்கப்பட்டது என்பதைக் குறிப்பிடும்போது, 1983 ஆம் ஆண்டிலேயிருந்து கோவை மாநகரத்திலே இந்த மதக்கலவரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 10-6-1983-இல் கோவை தியாகி குமரன் மார்க்கெட்டில் உள்ள மதவெறிக்கு வித்திட்ட இந்து மற்றும் முஸ்லீம் அனுதாபிகளால் சிறு, சிறு சண்டைகள் பெரிதாக ஆக்கப்பட்டு மதத் தீவிரவாதம் ஊக்குவிக்கப்பட்டது. இவையெல்லாம் புலன் விசாரணையிலே வருகின்ற விவரங்கள்.

பிற்பகல் 1-25

பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் திரு. திருக்கோவிலூர் சுந்தரம் என்பவர் இஸ்லாமிய மதத்தைக் குறைகூறிப் பேசினார் என்பதற்காக, பொதுமேடையிலே, இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்த எஸ்.ஏ. பாட்சா மற்றும் அவருடைய 8 கூட்டாளிகளும் சேர்ந்து, திருக்கோவிலூர் சுந்தரத்தைப் பயங்கர ஆயுதங்களால் தாக்கினார்கள். இது சம்பந்தமாக, பி-2 ஆர்.எஸ். புரம் காவல் நிலையக் குற்ற எண் 748/83, சட்டப் பிரிவுகள் 147, 148, 341 மற்றும் 307--இந்திய



தண்டனைச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கின் முடிவில், எஸ்.ஏ. பாட்சாவிற்கு 3 வருடக் கடுங்காவல் தண்டனையும், அவரது கூட்டாளிகளுக்குத் தலா 9 மாதம் கடுங்காவல் தண்டனையும் அப்போது வழங்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு முதல் கோவை நகரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் 172 மதக்கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதன் மூலம், கடந்த 15 ஆண்டுகளாகக் கலவரம் வளர்ந்த காரணங்களால், டிசம்பர் 1997 மற்றும் 14-2-1998-ல் நடந்த கொடுமையான பழிவாங்கும் நிகழ்ச்சிகள் உருவாயின. அதைத்தான் இங்கே பேசிய நம்முடைய திரு. சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். 1983 முதல் நடந்த கொடுமையான சம்பவங்கள் சரியான முறையில் தீர்க்கப்படாத சூழ்நிலையில், 6-12-1992 அன்று பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் முஸ்லீம் தீவிரவாதம் கூடுதலாக உருவாகக் காரணமாக ஆகிவிட்டது.

எஸ்.ஏ. பாட்சா மற்றும் அவரது ஆதரவாளர்கள், மதக்கலவரங்கள் உருவாகத் தூண்டுதலாக இருந்தார்கள். கோவை நகரில் 3 கோவில்கள் இடிக்கப்பட்டன. ஒரு பொதுப் போக்குவரத்துப் பேருந்து தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இதில் 12 பேர் காயமடைந்து உள்ளார்கள். மேலும் 12 அரசுப் போக்குவரத்து வாகனங்கள் சேதமடைந்தன. போலீசார் இரு முறை கோவை, கோட்டைமேடு பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதன் விளைவாக, எஸ்.ஏ. பாட்சா தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்டு, 3 மாதத்திற்குப் பிறகு வெளியே வந்தார். தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்களை விடுவித்துவிட்டார்கள் என்றெல்லாம் இப்போது முன்னாள் முதலமைச்சரும், அவரைச் சார்ந்தவர்களும் குற்றம் சாட்டுகிறார்களே, நான் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்டு, ஜாமீனிலே வெளிவந்தவர்தான் இந்த பாட்சா என்பதை மறந்துவிடக் கூடாது.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அவர் இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின்படிக் கைது செய்யப்பட்டார், 1992 டிசம்பரில். பிப்ரவரி 1993-ல் அவர் விடுதலை செய்யப்பட்டார். இதோ என்னுடைய கையிலே இருப்பது 1993 ஆம் ஆண்டு 'மாலை முரசு' பத்திரிகை. இந்தப் பத்திரிகையில், 'சென்னை குண்டு வெடிப்பு' 13 பேர் பலி-, R.S.S. அலுவலகம் தகர்க்கப் பயன்படுத்தியது 20 கிலோ

நவீன டைம் பாம், பம்பாயில் வெடிக்கப்பட்டது போன்று சக்தி வாய்ந்த குண்டு, R.D.X. வெடிமருந்தால் தயாரித்து சூட்கேஸில் வைக்கப்பட்டிருந்தது. குண்டு வைத்தது யார்? திடுக்கிடும் தகவல்-- சென்னை R.S.S. அலுவலகத்தில் குண்டு வெடித்து 13 பேர் பலியானார்கள். இதற்கு 20 கிலோ எடையுள்ள நவீன டைம் பாம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பம்பாயில் வெடிக்கப்பட்டது போன்ற சக்தி வாய்ந்த குண்டாகும்" என்று அந்தப் பத்திரிகையிலே, இவ்வளவு பெரிய தலைப்பிலே செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்தக் குண்டு வெடிப்பு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் தேதி நடைபெறுகிறது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் அன்றைக்கு ஊரிலே இல்லை. 1 மணி 45 நிமிடத்திற்குக் குண்டு வெடித்தது. ஆனால் அம்மையார் அவர்கள் 2-45 மணிக்கு சென்னையிலிருந்து ஸ்பெஷல் விமானம் என்கிறார்கள். அல்லது ஹெலிகாப்டர் என்கிறார்கள்-- அதிலேறிப் புறப்படுகிறார். மறுநாள் காலையில்தான் திரும்பி வருகிறார். குண்டு வெடித்து, R.S.S. கட்டடமே இடிந்து நொறுங்கிய பிறகு, 13 பேர் இறந்தார்கள் என்ற செய்தி வந்த பிறகு, அவர்கள் திண்டுக்கல் செல்கிறார்கள். மறுநாள் காலையில்தான் திரும்பி வருகிறார்கள். திரும்பி வந்த பிறகு, அவரோடு அந்த இடத்தைப் பார்வையிட்ட R.S.S. மாநில அமைப்பாளர் ஷண்முகநாதன், இந்து முன்னணித் தலைவர் இராமகோபாலன், பா.ஜ.க. துணைத் தலைவர் ஜனா. கிருஷ்ணமூர்த்தி, பா.ஜ.க. பொதுச் செயலாளர் கோவிந்தாச்சாரியார், ரங்கசாமித் தேவர் ஆகியோர் சம்பவம் பற்றி விளக்கிக் கூறினார்கள். 10 மணிக்கு ஜெயலலிதா அந்த இடத்தை விட்டுக் கிளம்பினார். ஜெயலலிதா, நிருபர்களிடம், அவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு பேட்டி அளிக்கிறார். அப்பொழுது சொல்கிறார், "நான் நேற்று மதியம் 2-45 மணிக்கு, சென்னையிலிருந்து புறப்பட்டேன். அப்பொழுது எனக்கு எதுவும் தெரியாது" என்று கூறுகிறார். கிழடு தட்டிப்போன உளவுத் துறை என்று திரு. சுப்பராயன் இன்றைக்குச் சொல்கிறாரே, அப்போதைய உளவுத் துறை படுகிழமாக இருந்திருக்கிறது (சிரிப்பு) 2-45 மணிக்கு, சென்னையிலிருந்து



புறப்பட்டார். "அப்பொழுது எனக்கு எதுவும் தெரியாது. மீனம்பாக்கம் விமான நிலையம் செல்லும் வழியில் குண்டு வெடித்த செய்தி வந்தது. அது இவ்வளவு கடுமையானது என்பது பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை" என்று சொல்கிறார். 'கட்டடம் தூள்' தூளானது. 13 பேர் செத்தார்கள் என்று செய்தி. இது கடுமையானது என்று அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்கிறார். மறுபடியும் அவர் சொல்கிறார். "மாலை 6-00 மணிக்கு திண்டுக்கல் சேர்ந்தேன்" என்கிறார். 2-45 மணிக்குப் புறப்பட்டு திண்டுக்கல்லுக்கு 6-00 மணிக்குச் சென்றிருக்கிறார். விமானத்தில் பயணம் செய்து பார்த்து, இந்த நேரத்தைக் கணக்கிட வேண்டும். அல்லது ஹெலிகாப்டரில் பயணம் செய்து பார்த்து, இந்த நேரத்தைக் கணக்கிட வேண்டும். "6-00 மணிக்கு திண்டுக்கல் சேர்ந்தேன், அப்பொழுதுதான் எனக்கு விவரமே தெரிய வந்தது. உடனடியாகச் சென்னை திரும்ப விரும்பினேன். ஆனால் முடியவில்லை. காரணம், ஹெலிகாப்டரில் லைட் கிடையாது" அது உண்மை--ஹெலிகாப்டரில் மாலை 6-00 மணிக்கு மேல் பறக்க முடியாது. அது உண்மையான காரணம். எனவே, இரங்கலைத் தெரிவித்துக்கொள்றேன்" என்று சொல்கிறார். அப்பொழுது அந்த அம்மையார் சொல்கிறார், "தமிழ்நாட்டில் இதுபோன்ற குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது கிடையாது, இப்பொழுது நடந்து இருப்பது வேதனை அளிக்கிறது. இதுபற்றிய விசாரணை Crime Branch Police (CB-CID)-க்கு மாற்றப்பட்டுள்ளது" என்று சொல்கிறார். அப்பொழுது அருகில் இருந்த இராமகோபாலன் சொல்கிறார், "விரும்பினால் C.B.I. விசாரணைக்கு விடலாம்". உடனே ஜெயலலிதா சொல்கிறார், "அநாகரிகமான அரசியல் விமர்சனங்களுக்கு நான் பதில் கூற விரும்பவில்லை" என்று. இராமகோபாலனுக்கு அந்த இடத்திலேயே கிடைத்த பரிசு (சிரிப்பு). இப்பொழுது அவர்களெல்லாம் ஒன்றாக இருந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைப்பதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். "விரும்பினால் C.B.I. விசாரணைக்கு விடலாம்" என்று இராமகோபாலன் சொல்ல, ஜெயலலிதா, "அநாகரிகமான அரசியல் விமர்சனங்களுக்கு நான் பதில் கூற விரும்பவில்லை" என்று சொல்கிறார். எல்லாம் 'மாலை முரசில்' வந்திருக்கிறது. இது authenticated பத்திரிகைதான். அதிலே வந்திருக்கிறது. உடனே ஷண்முகநாதன் அவர்கள் சொல்கிறார்கள், "R.S.S. இயக்கம் கட்டுக்கோப்பான இயக்கம்; போலீஸார் மிகுந்த கெடுபிடி செய்கிறார்கள், கூட்டம் நடத்த அனுமதிப்பதில்லை, ஆனால், சிலர் minority அமைப்பு என்று கூறிக்கொண்டு அராஜகம் செய்கிறார்கள்.

அவர்களை போலீஸார் அனுமதிக்கிறார்கள். எனவே, எங்களுக்கு நீதி வழங்க வேண்டும்'' என்று சொல்கிறார். "போலீஸாரைக் குறை கூறக் கூடாது. நான்தான் தடை உத்தரவையே போடச் சொன்னேன்'' என்று ஜெயலலிதா சொல்கிறார்.

மறுநாள் மத்திய உள் துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் சென்னைக்கு வருகிறார். 'மாலை முரசிலேயே' தலைப்பு என்ன தெரியுமா? "கோட்டையில் 30 நிமிடம் சந்திப்பு-- பேட்டி. பைலட் விசாரணை ஜெயலலிதாவிடம். வெடிமருந்துக் கடத்தல்-- எச்சரித்தும் நடவடிக்கை எடுக்காதது ஏன்? C.B.I. விசாரணைக்குப் பரிசீலனை''--இது தலைப்பு. இந்தத் தலைப்பிட்டு வந்த செய்தியில் 8 ஆம் பக்கத்தில்: ஒருவேளை பேசி முடித்த பிறகு, வெளியிட்ட செய்தியில், "கடந்த மாதம் மத்திய உள் துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் சென்னை வந்தபோது, பெரும் அளவிலான R.D.X வெடிமருந்து தமிழ்நாட்டிற்கு, குறிப்பாகக் கடற்கரை வழியாகக் கடத்தி வரப்பட்டிருக்கின்றது. குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தவிர்க்க தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனார். கடந்த மார்ச் 12 ஆம் தேதிக்கு முன்னர் கடத்தப்பட்ட அந்த வெடிகுண்டுகள் தமிழகத்திற்குக் கடத்தப்பட்டது குறித்து மத்திய, மாநில அரசுகளுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதைக் கண்டுபிடிக்கப் போலீஸார் சில காலம் சோதனை செய்தார்கள். ஆனால், வெற்றி கிடைக்கவில்லை''-- இதெல்லாம் அந்தச் செய்தியையொட்டி வந்துள்ள துணைச் செய்திகளாகும்.

பிற்பகல் 1-3.5

இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், 'ஏதோ இந்த அரசுக்கு மத்திய அரசிடம் இருந்து உளவுத் துறை தகவல் அனுப்பியது; அதைக் கவனிக்கவில்லை' என்று சொல்கிறார்களே, உளவுத் துறை அப்பொழுதும், அவர்களுக்கும் செய்தி அனுப்பியிருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால், மத்திய அமைச்சரே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு சம்பவம் நடைபெற்றதையொட்டி, டெல்லியிலிருந்து அனுப்பப்பட்ட செய்திகளையெல்லாம், நாங்கள் யாரும் கவலைப்பட்டு, அக்கறையோடு கவனிக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை எங்கள் மீது சுமத்துவது



என்ன நியாயம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் குண்டு வெடிப்பிற்குப் பிறகு, 8 ஆம் தேதி குண்டு வெடிப்பு என்றால், நான் முதலிலேயே குறிப்பிட்டேன். முதுகுளத்தூர் சம்பவத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி நடந்து கொண்டது; அண்ணா அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்று. அதைப்போல, அந்த R.S.S. அலுவலக குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி நான் விடுத்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்கின்றேன். இது 8 ஆம் தேதி வெளியிடப்பட்ட அறிக்கை-- "கருத்து வேறுபாடுகள் எவ்வளவு இருந்தாலும் இதுபோன்ற வன்முறைச் சம்பவங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் கடுகளவும் ஏற்றுக்கொள்ள இயலாது. சம்பவத்தில் உண்மையான குற்றவாளிகளை உடனே கண்டுபிடிக்க வேண்டியது போலீஸ் துறையின் பொறுப்பாகும். கடந்த காலங்களில் சில குற்றங்கள் கண்டுபிடிக்க முடியாது போயுள்ளன. அவற்றில் இதுவும் ஒன்றாகிவிடக் கூடாது.''-- இப்படித்தான் நான் அறிக்கை விட்டிருக்கிறேனேயல்லாமல், "உடனடியாக ஜெயலலிதா அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்'' என்றோ, "அந்த அரசுதான் அதற்கெல்லாம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்'' என்றோ அரசியல் ரீதியான அறிக்கை எதையும் நான் அன்றைக்கு விடவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, ஆகஸ்ட் 15 ஆம் தேதி ஜெயலலிதா, கோட்டைக் கொத்தளத்திலே கொடியேற்றி வைத்துவிட்டு, உரையாற்றுகிறார். அதிலே சொல்கிறார்;-- "கடந்த 8 ஆம் தேதி R.S.S. அலுவலகத்தில் நடைபெற்றது சோகமான, துயரமான நிகழ்ச்சி. இந்தச் சூழ்நிலையில் தமிழக அரசும், காவல் துறையும் தங்கள் கடமைகளை விரைந்தும், முழுமையாகவும் மேற்கொண்டுள்ளார்கள். இதிலும் அரசியல் ஆதாயம் தேடுவதற்கென்றே, பொறுப்பற்ற சிலர் வேண்டாத பல அறிக்கைகளைக் கொடுத்து வருகிறார்கள்'' அதுமாத்திரம் "பொறுப்பற்ற சிலர்''. இதில் யாராவது அரசியல் ஆதாயம் தேடினால் அவர்கள் பொறுப்பற்றவர்கள். இவர்கள் தேடினால் ரொம்பப் பொறுப்புள்ளவர்கள். "அமைதிப் பூங்காவான தமிழகத்தில் வன்முறையைத் தூண்டிவிட்டு, வன்முறைக் கலாச்சாரத்தைத் தங்கள் சொந்த நலனுக்காக உருவாக்க ஒருசில தீய சக்திகள் முயன்று வருகிறார்கள். பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்து, அரசியல் ஆதாயம் தேடுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன். இக்குண்டு வெடிப்புச்

சம்பவத்தில், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்க ஒருபோதும் தயங்கமாட்டேன். விசாரணை துரிதமாக நடைபெற வேண்டும் என்பதற்காக, நான் எடுத்த உடனேயே இந்த வழக்கை மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்ற ஆணையிட்டேன்.-- (CB-CID)-க்கு எங்கள் கடமைகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்று யாரும் இந்த அரசுக்கும், காவல் துறைக்கும் புதிதாகப் பாடம் கற்றுத் தரவேண்டிய அவசியம் இல்லை."

இங்கே அமர்ந்திருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற தலைவர்களும், நீங்கள் எல்லாம் இங்கே பேசும்போது, நான் குறுக்கிட்டு, "நீங்கள் யாரும் எனக்கு அறிவுரை சொல்ல வேண்டாம்" என்று சொன்னதுண்டா? எதிர்க்கட்சித் தலைவர் அருமையான யோசனை ஒன்றைச் சொன்னார், State Security Committee ஒன்றைப் போடவேண்டுமென்று. அதைப் பற்றிக்கூடப் பரிசீலிக்க வேண்டுமென்றுதான், பக்கத்திலே உள்ளவர்களிடம் நான் பேசிக் கொண்டிருந்தேன். அதை விட்டுவிட்டு, "எங்கள் கடமைகளை எவ்வாறு செய்ய வேண்டுமென்று யாரும் இந்த அரசுக்கும், காவல் துறைக்கும் புதிதாகப் பாடம் கற்றுத்தர வேண்டிய அவசியம் இல்லை"--எங்கே? கோட்டையிலே சுதந்திர தின விழாவிலே கொடியேற்றும்போது. அம்மையார் மேலும் பேசுகிறார், சுதந்திர தின விழாவிலே கொடியேற்றிய போது-- "மத்திய அமைச்சர் ஒருவர் இங்கே வந்து புலனாய்வுப் பணிகளைத் துரிதமாகச் செய்யுங்கள் என்று நம் காவல் துறைக்கு அறிவுறுத்துகிறார். இது தேவையா?" அந்த அம்மையார் கேட்கிறார். "இவர் இவ்வளவு தூரம் சென்னைக்கு வந்து இதைச் சொல்லாவிட்டால், நம் காவல் துறையினர் அப்பணிகளைத் துரிதமாகச் செய்யமாட்டார்களா? மத்திய அமைச்சர் ஏன் வந்து சொல்கிறார்? செய்யமாட்டார்களா?" இதே மத்திய அமைச்சரிடம், வழக்கு விசாரணை CBI-எடுத்துக் கொள்ளலாம் என்று நாம் கூறினால், உடனே அவர், "தமிழகக் காவல் துறையினர் மிகவும் திறமை வாய்ந்தவர்கள்; அவர்களாலேயே இந்த வழக்கை நடத்த முடியும்" என்கிறார். அப்போது அவரே certificate கொடுத்திருக்கிறார், தமிழகக் காவல் துறைக்கு. அந்தக் காவல் துறை இருக்கும்போதுதான், இப்போது CIB வழக்கு விசாரணையை நடத்த வேண்டும் என்று இந்த அம்மையார் கேட்கிறார் என்பதை நினைவுபடுத்துகிறேன்.



பிற்பகல் 1-40

அதுமாத்திரமல்ல: இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் முன்கூட்டியே மத்திய அரசினுடைய உளவுத் துறையினுடைய எச்சரிக்கைகள் வந்தனவா என்று தாமரைக்கனி கேட்டார்; ஜெயலலிதாவும் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஜெயலலிதா கேட்பதை, தாமரைக்கனி இங்கே கேட்டார். அதையே திரு. கணேசனும் இங்கே கேட்டார். கேட்கக்கூடிய காலம் இது. அவர் கேட்கக்கூடிய காலம், நாம் அதைக் கேட்டுக்கொள்ளக்கூடிய காலம்.

"இப்படியெல்லாம் நடக்கும்போது, மத்திய அரசிடமிருந்து வந்ததா" என்று கேட்கிறார். ஜெயலலிதா அவர்கள் வெள்ளை அறிக்கையைப் படித்துப் பார்த்துவிட்டு, என்ன சொன்னார்கள் என்றால்--வெள்ளை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள-- "1984 ஆம் ஆண்டு தொடங்கி, நடைபெற்றதாக, கருணாநிதியால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள குண்டு வெடிப்புச் சம்பவங்கள் எல்லாம் அரசுக்குக் கிடைத்த, சரியான, பல, புலனாய்வுத் தகவல்களுக்குப் பின்னரும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் விட்டதால் நடைபெற்றவை அல்ல". நடவடிக்கை எடுத்தார்களாம். அதையெல்லாம் கேட்டு, நடவடிக்கை எடுத்தோம் என்று சொல்கிறார்கள். இவர்கள் கேட்கிறார்கள், அந்தமாதிரி ஒன்றுமே அனுப்பவேயில்லையா என்று. நம்முடைய திரு. கணேசன் அவர்களும் நம்மிடம் கேட்டார். இதோ இருப்பது, அவர்கள் அனுப்பியதுதான். From Secretary to Government, Public Department, Madras--அப்போது Madras. 14-3-1993.

Following is the wireless message received from Home, New Delhi. New Delhi Home Department-இடமிருந்து வந்திருக்கிற message-ஐ இங்கே இருக்கிற உளவுத் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறது. "In the wake of recent bomb blasts in Bombay, there may be repercussions on the communal situation in your State. Intelligence and security forces may be alerted, round the clock vigil be maintained on all important installations, buildings and places of worship. All necessary precautionary measures be taken to ensure that no untoward incident takes place and peace and communal harmony is maintained. Please take all precautionary measures to maintain law and order and public tranquility. Inform the Chief

Secretary's Control Room on significant development". இவ்வளவுக்கும் பிறகுதான்--இவையெல்லாம் வந்த பிறகுதான். R.S.S. அலுவலகக் கட்டடம் நொறுக்கப்பட்டது. அந்தக் குண்டு வெடிப்பிலே, 13 பேர்களிலே, 11 பேர்களுடைய பிணங்கள் அங்கிருந்து கண்டு எடுக்கப்பட்டன. 2 பேர் காணாமல் போனதாகச் சொல்லப்பட்டது. அந்த 13 பேர்களிலே சிலபேர் பெண்களும்கூட என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காக நான் இதை நினைவுபடுத்துகிறேன்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதை அடுத்து, தமிழ்நாட்டிலே எந்தச் சம்பவமும் நடக்கவில்லை என்று கணேசன் இங்கே குறிப்பிட்டார்கள். திருநாவுக்கரசு பேசும்போதுகூட, ஒருவேளை மறதியின் காரணமாகவோ, என்னவோ, அப்போதுகூட தமிழ்நாடு அமைதியாகத்தான் இருந்தது என்று சொன்னார். அதை இவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள், "திருநாவுக்கரசு அவர்கள் இப்படிச் சொல்லிவிட்டார்" என்று. ஆனால் பாபர் மசூதி 6-12-1992-லே இடிக்கப்பட்டதை அடுத்து, தமிழ்நாட்டில் நடந்த சம்பவங்களைச் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அயோத்தியிலே, பாபர் மசூதி இடிக்கப்பட்டதை அடுத்து, கல்வீச்சு, கறுப்புக் கொடி ஏற்றுதல், இந்து இயக்கங்களின் தலைவர்களின் உருவ பொம்மைகள் எரித்தல், கோயில்கள் மற்றும் மசூதிகள் மீது தாக்குதல், இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் சொந்தமான சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பு, இரு மதத்தினரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளுவது, மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்பு, முஸ்லீம்களின் ஊர்வலம் மற்றும் தீ வைப்பு போன்றச் சம்பவங்கள், 6-12-1992 முதல் 11-12-1992 வரையில் தமிழகத்தின் பல இடங்களில் நடைபெற்றன. அந்தக் காலகட்டத்தில் கல்வீச்சுக் காரணமாக மொத்தம் 158 வாகனங்கள், அதிலே 124 அரசுப் பேருந்துகள், 32 தனியார் பேருந்துகள், ஒரு லாரி மற்றும் ஒரு காவல் துறையின் வேன் இவையெல்லாம் மிகவும் சேதப்படுத்தப்பட்டன. இவை தவிர, 18 வாகனங்கள்; 3 அரசுப் பேருந்துகள், ஒரு தனியார் பேருந்து, 2 மொபெட்டுகள், 4 டேங்கர் ட்ரெய்லர்கள், ஒரு டெம்போ, 2 வேன்கள், 2 கார்கள், ஒரு காவல் துறை ஜீப், ஒரு டிராக்டர் ட்ரெய்லர் மற்றும் ஒரு தீயணைப்புப் படை வாகனம் இவையெல்லாம தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. மாநிலத்தில் நடைபெற்ற 33 இனக் கலவரங்களில் 14 முஸ்லீம்களும், 12 இந்துக்களும், 78 காவல் துறை அதிகாரிகளும் காயம் அடைந்தார்கள். டிசம்பர் 8 ஆம் தேதியன்று சென்னை அண்ணா சாலையிலுள்ள அண்ணா சிலை



முன்பாக தீக்குளிக்க முயன்ற 5 முஸ்லீம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கையின்கீழ் 1840 நபர்களும் குறிப்பிட்ட குற்றங்களுக்காக 2186 நபர்களும் கைது செய்யப்பட்டார்கள். வன்முறை, தீ வைப்பு ஆகிய சம்பவங்களால் மொத்தம் 51 இலட்சத்து 52 ஆயிரத்து 600 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன.

பிற்பகல் 1-15

8-12-1992 அன்று சில மாவட்டங்களில் வன்முறைகள் நடைபெற்றதன் காரணமாக காவல் துறை துப்பாக்கிச் சூடு திருநெல்வேலி மாவட்டத்தில் நான்கு முறையும், வேலூர் மாவட்டத்தில் மூன்று முறையும், கோவை நகரத்தில் இரண்டு முறையும், தஞ்சை மாவட்டத்தில் இரண்டு முறையும், குமரி மாவட்டத்தில் ஒரு முறையும் நடத்த வேண்டியதாயிற்று. துப்பாக்கிச் சூட்டில் இரண்டு நபர்கள் இறந்து போனார்கள். 21 பேர் காயம் அடைந்தார்கள். இவை தவிர, காவல் துறையினர் மூன்று சம்பவங்களில் கண்ணீர்ப் புகை மற்றும் தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று. 11-12-1992 அன்று கீழக்கரையில் உள்ள மசூதி அருகில் முஸ்லீம்களில் ஒரு பிரிவினர் பட்டாசுகள் உள்ளே வைக்கப்பட்ட பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் திரு. எல்.கே. அத்வானி அவர்களின் உருவ பொம்மையைக் கொளுத்தினார்கள். பட்டாசுகள் வெடித்து ஓசை எழுந்ததால் மசூதியிலே தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்கள், இந்துக்கள் தங்களது மசூதி முன்பாக பட்டாசு வெடித்திருப்பார்கள் என்று சந்தேகப்பட்டு இந்துக்களுக்குச் சொந்தமான கடைகள் சிலவற்றை அடித்துச் சேதப்படுத்தினார்கள். இதனால் இரண்டு மதங்களுக்கிடையே பகைமை உருவானது. காவல் துறையினர் கூட்டத்தினைச் சம்பவ இடத்தில் துரத்தியபோது காவல் துறை அலுவலர்கள் மீது அக்கூட்டம் கற்களை வீசியதால் இரண்டு காவலர்கள் காயம் அடைந்தார்கள். இச்சம்பவத்தில் இந்துக்களுக்கு சொந்தமான 20 கடைகள் சேதப்படுத்தப்பட்டன. இரண்டு ஆட்டோ ரிக்ஷாக்கள், ஒரு ஜீப் மற்றும் முஸ்லீம்களுக்குச் சொந்தமான கொட்டகை ஆகியவற்றிற்குத் தீ வைக்கப்பட்டது. இதுசம்பந்தமாக 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவை எல்லாம் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆங்காங்கு பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற கலவரங்களின் சுருக்கம்.

இதற்குப் பிறகு சென்னையிலே R.S.S. அலுவலகத்திற்கு 8-8-1993-ல் குண்டு வைத்தது தொடர்பான வழக்கில் 16-11-1993 அன்று பாட்சா கைது செய்யப்பட்டார். மூன்று மாதங்கள் கழித்து பாட்சா கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு பிறகு TADA சட்டப் பிரிவுகளிலும் சேர்க்கப்பட்டு நடைபெறத் தொடங்கியது. இந்த வழக்கிலே மத்திய புலனாய்வுத் துறை விசாரணையை மேற்கொண்டு 8-4-1994 அன்று வழக்கிலே குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது. ஒரு வருடம் கழித்து CBI அதை எடுத்துக்கொண்டு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது. இந்த வழக்கிலே 22-5-1996 அன்று பாட்சாவையும், மற்றும் 5 குற்றவாளிகளையும் TADA நீதிமன்றம் நிபந்தனையின்றி ஜாமீனில் விடுதலை செய்ய உத்திரவிட்டது. அந்த ஜாமீனில் விடுதலையானவர்கள் கோயம்புத்தூரில் இருக்கக்கூடாது என்றும், சென்னையில் இருக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு அன்றைக்குச் சொல்லப்பட்டது. ஜனவரி 1997-லே பாட்சாவிற்கும் மற்றும் 15 பேர்களுக்கும் நீதிமன்றம் ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டது. இதையடுத்து 27-1-1997-ல் பாட்சா விடுதலை செய்யப்பட்டார். நிபந்தனையோடு சென்னையிலே தங்க அன்றைக்கு அவர் அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த அல்-உம்மா இயக்க ஆவணங்கள், அந்தத் தேதியிட்ட ஆவணங்கள் சில இந்த விசாரணையின்போது கிடைத்திருக்கின்றன. அதிலே ஒரு 'பத்வா',--'பத்வா' என்றால் 'மதவாத ஆணை' என்று பொருள். இஸ்லாமியத் தற்கொலைப் படையால் வெளியிடப்பட்ட ஒரு 'பத்வா' கையால் எழுதப்பட்ட ஒரு 'பத்வா' கைப்பற்றப்பட்டது. அதில் என்ன எழுதியிருக்கிறது என்றால் "இஸ்லாமிய இளைஞர்கள் இஸ்லாத்தைக் காக்க இறப்பதற்கும் தயார். இஸ்லாத்திற்கு உழைத்த பாட்சா பாயை கைது செய்து இஸ்லாமிய மக்களைத் துன்புறுத்தும் காட்டுமிராண்டி கமிஷனர் கணேசன் குடும்பத்தை அழித்தே தீருவோம்." இங்கே குறிப்பிட்டார்களே அந்த கணேசன் என்று கருதுகின்றேன். "ஆர்.எஸ்.எஸ். வெறிநாய்கள் மூகாம்பிகை மணி, பரமசிவன், அர்ஜுன் சம்பத் மற்றும் தற்சமயம் பொதுச் செயலாளர், இந்து மக்கள் கட்சி ஆகியோரையும் தமிழகத்தைக் கெடுத்த இராமகோபாலனையும், இந்து முன்னணி மாநில அமைப்பாளர் ஸ்ரீதரனையும் 10 நாட்களில் கொல்வோம். தினமலர் கட்டடத்திற்கு வெடிகுண்டு வைத்து அழிப்போம். தீன் மதத்தைக் காப்போம். புனித ஜிகாத் தொடங்கிவிட்டது. இப்படிக்கு இஸ்லாமிய தற்கொலைப் படை" என்று ஒரு துண்டு விளம்பரம் அன்றைக்கு வெளியிடப்பட்டது.



பிற்பகல் 1-50

இதுபோன்ற சம்பவங்கள், இதுபோன்ற பிரச்சாரங்கள் இரு தரப்பிலும் போட்டி போட்டுக்கொண்டு நடைபெற்ற அந்தச் சூழ்நிலையில்தான் 29-11-1997 ஆம் தேதியன்று கோயம்புத்தூரில் உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் என்பவர் அல்-உம்மா உறுப்பினர் ஒருவரோடு இரு சக்கர வாகனத்தின்மீது சிறு வழக்கு போடப்பட்டது சம்பந்தமாக அல்-உம்மா அமைப்பாளர் முகமது அன்சாரிக்கும் மேற்படி உதவி ஆய்வாளருக்குமிடையே நடந்த வாக்குவாதத்திற்குப் பிறகு அன்று இரவே உக்கடம் பகுதியிலே பணியில் இருந்த போக்குவரத்துக் காவலர் செல்வராஜ் என்பவர் கொலைக்கு ஆளானார். இது 29-11-1997 அன்று நடைபெற்ற சம்பவம். இதைத் தொடர்ந்து 30-11-1997 மற்றும் 1-12-1997-ல் நடந்த வன்முறைச் சம்பவங்களிலும், போலீஸ் துப்பாக்கிச் சூட்டிலும் இறந்த முஸ்லீம்கள் 18 பேர். இந்தக் கொடுமையான கொலைகளுக்கும், முஸ்லீம்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் விளைவித்தமைக்கும் அல்-உம்மாவைச் சேர்ந்த தீவிரவாதிகளால் மேற்படி குண்டு வெடிப்பு நிகழ்வு நடந்தேறியிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது. இது புலன் விசாரணையில் வருகின்ற விவரங்கள். இவற்றுக்கெல்லாம் பழி வாங்க வேண்டும் என்பதற்காகத்தான்--18 முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள்-- ஒரு செல்வராஜ் கொல்லப்பட்டதையொட்டி 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள். முஸ்லீம்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது. எனவே, அல்-உம்மாவைச் சேர்ந்த தீவிரவாதிகள் மேற்படி குண்டு வெடிப்பு நிகழ்வை நடத்தத் திட்டம் தீட்டினார்கள் என்பது தெளிவாகிறது.

30-11-1997, 1-12-1997-ல் நடந்த கொடுஞ் செயல்கள் யாவும் R.S.S., பா.ஜ.க., இந்து முன்னணி ஆகியார்களோடு போலீசும் சேர்ந்துகொண்டு முஸ்லீம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடூரச் செயல்கள் என்று அல்-உம்மா மற்றும் தீவிர இயக்கங்கள் காரணம் கூறுகின்றன. அந்தக் கொடுஞ்செயல்கள்தான் இவற்றுக்கெல்லாம் காரணம் என்று இந்த இயக்கங்கள் இன்றைக்குத் தெளிவாக, தாங்கள் அப்படித்தான் கருதுகிறோம் என்று காரணம் கூறுகிறார்கள்.

டிசம்பர் 3 ஆம் தேதி நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இறந்த முஸ்லீம்களுடைய உடல்களை நிர்வாணமாகவும், காயம்பட்ட அந்தரங்க உறுப்புகளைக் கோரமாகப் படம் எடுத்தும், வீடியோ எடுத்தும், அவ்வாறு எடுக்கப்பட்ட கோரக் காட்சிகளை முஸ்லீம்

இனத்தவரிடைய காண்பித்து அவர்களுடைய ஆத்திரத்தைத் தூண்டிவிட்டு, அவர்களுடைய ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்று பழிக்குப்பழி வாங்க அல்-உம்மா தீவிரவாத அமைப்பினர் திட்டம் தீட்டினார்கள் என்பது மற்றொரு உண்மையாகும்.

மேலும், இந்தப் புலன் விசாரணைத் தகவலில், தீவிரப் பழி வாங்கு நடவடிக்கைக்கான கூட்டுச் சதியின் தோற்றம் 1997, டிசம்பர் 1, 2, 3, தேதிகளில் ஆரம்பமாகியிருக்கிறது. இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு இந்தக் கூட்டுச் சதியின் தோற்றம் ஆரம்பமாகியிருக்கிறது. அதற்குப் பிறகு 1997, டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் எஸ்.ஏ. பாட்சா, முகமது அன்சாரி, அல்-உம்மாவின் பொதுச் செயலாளர், அப்துல் உசைன், சித்திக் அலி, எஸ்.ஏ. பாட்சாவின் மகன், நவாப்கான், எஸ்.ஏ. பாட்சாவின் இளைய சகோதரன், அப்துல் நசீர் மதானி மற்றும் சிலர் கோவையில், தனியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ சேர்ந்து ஒரு பெரிய பழிவாங்கும் நடவடிக்கையை உருவாக்கினார்கள். எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற செயல் திட்டமும், கர்நாடகா மற்றும் கேரளாவிலிருந்து வெடிமருந்துகள் மற்றும் வெடிபொருட்கள் சேகரித்தலும் தொடங்கப்பட்டன. இவை எல்லாம் டிசம்பருக்குப் பிறகுதான். தேர்ந்த வெடி சாதனங்களை உருவாக்க முடிவெடுக்கப்பட்டன. பொறுப்புகள் பலருக்கு வழங்கப்பட்டு அவை பலமுறைகளில் மேற்பார்வையிடப்பட்டன. 1997 டிசம்பர் மாத முதல் வாரத்தில் அன்சாரி கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்த தேசிய ஜனநாயகப் படையினர் எம்.பி. முகமது அஸ்ரப் என்பவரைச் சந்தித்தார். அன்சாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க அஸ்ரப் 10 நாட்டு கைத்துப்பாக்கிகளைத் தருவதற்கு சம்மதித்தார். எஸ்.ஏ. பாட்சா மற்றும் முகமது அன்சாரி சொன்னபடி சத்தியமங்கலத்தைச் சேர்ந்த முகமது அலிகான் என்கின்ற குட்டி 625 கிலோ எடையுள்ள ஜெலட்டின் குச்சிகள், 1500 மின்சார டெட்டனேட்டர்கள், 1500 சாதாரண டெட்டனேட்டர்கள் மற்றும் 80 மீட்டர் ஃபியூஸ் வயர்களைக் கர்நாடகாவிலுள்ள சாம்ராஜ் நகரைச் சேர்ந்த சம்ஜித் முகமது என்பவரிடமிருந்து வாங்கினார். இப்போது அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவற்றை அவர் முகம்மது தஸ்தகீர்--அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்--மேனேஜர், இந்திய வெடிபொருள் கழகம், மைசூர் என்பவரிடமிருந்து வாங்கியுள்ளார். திட்டமிட்டபடி பழி வாங்கும் நடவடிக்கைகளை ரம்சான் பண்டிகைக்கு ஒரு வாரம் கழித்து நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த முடிவுக்கு



மாறாக, நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவிருப்பதைக் கருத்தில் கொண்டு மேற்படித் திட்டம் தள்ளிப் போடப்பட்டது.

பிற்பகல் 1-55

இதற்கிடையில் 7-2-1998 அன்று திரு. அத்வானி அவர்கள் 14 ஆம் தேதி தேர்தல் கூட்டத்திலே கலந்துகொள்ள கோயம்புத்தூர் வருவதாகச் செய்திகள் வெளிவந்தன. ஏற்கெனவே திட்டமிட்டப்படி பழிவாங்கும் நடவடிக்கைகளை 22-2-1998-ல் கோயம்புத்தூரிலும் மற்றும் மாநிலத்தில் பல பகுதிகளிலும் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் 14 ஆம் தேதி எல்.கே. அத்வானி அவர்கள் கோயம்புத்தூர் வருவது தெரிந்ததும் அன்சாரி தன் பழி வாங்கும் திட்டத்தை அதே தேதியிலே நடத்த முடிவு செய்தார். அன்றைய தினத்திலே R.S.S. மற்றும் பாஜ.க. கட்சித் தொண்டர்கள் அதிக அளவில் கூட்டம் நடைபெறும் இடத்திலும் மற்ற இடங்களிலும் இருக்கக்கூடும் என்பதால் மேற்படி சதித் திட்டம் திட்டமிட்டபடி தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தினால் அதிக அளவில் மேற்படி தொண்டர்கள் காயமுறுவார்கள் என அன்சாரி கருதினார். தற்கொலை வெடிகுண்டுப் படை மூலமாக எல்.கே. அத்வானியைக் குறி வைக்கவும் அன்சாரி திட்டமிட்டார். அன்சாரியின் திட்டத்திற்கு பாட்சா சம்மதித்து சித்திக் அலி மூலமாக அன்சாரிக்குக் குண்டு வெடிப்புக்கான இடங்களைக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தார். இது தொடர்பாக 10-2-1998-ல் மெக்கான் தர்காவில் நடைபெற்ற கூட்டத்தில் அன்சாரி, ஒசீர், ரகுமான், சித்திக் அலி, அஸ்லாம், சலாம் மற்றும் ஊமை பாபு ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில் சித்திக் அலி, பாட்சா திட்டமிட்டுத் தயாரித்த தொடர் குண்டு வெடிப்புக்கான இடங்களின் பட்டியலைக் கொடுத்தார்.

1888/93 வழக்கில் சம்பந்தப்பட்ட பாட்சாவின் டைரி ஒன்று கைப்பற்றப்பட்டது. அந்த டைரியில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால், எல்.கே. அத்வானி மற்றும் அசோக் சிங்கால் ஆகியோர்களை போலீசார் பாபர் மசூதி இடிப்பு வழக்கில் ராஜ மரியாதையுடன் நடத்தியதாகவும் முஸ்லீம் இனத்தவரை அவ்வாறு சரியான முறையில் நடத்தவில்லை என்றும் அந்த டைரியிலே குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் விசாரணையில் அல்-உம்மா அமைப்பைச் சேர்ந்த தலைவர்களிடமும் மற்ற உறுப்பினர்களிடமும் கடந்த 15

ஆண்டுகளாக நடைபெற்ற பல சம்பவங்களில் முஸ்லீம் இனத்தவரைக் காவல் துறையினர் சரியான மரியாதையுடன் நடத்தவில்லை என்ற உணர்வு ஊடுருவி இருந்தது. அந்த டைரியிலே இந்தச் செய்திகள் எல்லாம், இவை எல்லாம், இந்தச் சாயல்கள் எல்லாம் இருந்தன. எனவே, மேற்கண்ட சம்பவங்களைக் கருத்திலே கொண்டு 1997 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லீம்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தும் பாட்சாவின் தலைமையிலே இயங்கி வரும் அல்-உம்மா இயக்கத்தால் மேற்படி சம்பவதிற்குப் பழிவாங்கும் எண்ணத்தோடு தேர்தல் பிரச்சாரத்தின்போது அத்வானியைக் குறி பார்த்தும் மற்றும் கோயம்புத்தூரில் அதிக அளவில் உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டது என்பதெல்லாம் விசாரணையிலே, இதுவரையில் நடைபெற்றுள்ள விசாரணையில் இவை எல்லாம் தெரிய வந்துள்ளன.

14-2-1998 அன்று இடுப்பிலே வெடிகுண்டைக் கட்டிக்கொண்டு கோவை ஆர்.எஸ். புரத்திலே நடந்த பொதுக்கூட்டத்திலே கலவரம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட மூன்று இளம் முஸ்லீம்களின் அடையாளம் புலன் விசாரணையிலே தெரிய வந்துள்ளது. அந்த மூன்று முஸ்லீம் இளைஞர்களும் இஸ்லாத்திற்காக உயிர்த் தியாகத்தையும் செய்யும் அளவிற்கு மூளைச் சலவை செய்யப்பட்டு சென்னையிலிருந்து எஸ்.ஏ. பாட்சாவால் கோவைக்கு 10-2-1998 அன்று அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். இதுவரையில் விசாரிக்கப்பட்ட அந்தக் குற்றவாளிகளின் வாக்குமூலங்களிலிருந்து 14-2-1998 அன்று திரு. அத்வானியைக் கொலை செய்வதற்கான முயற்சி, காவல் துறையினரால் பொதுக் கூட்ட மேடைக்கு அருகே எடுக்கப்பட்ட கடுமையான சோதனை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால் கைவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது. போலீசார் அந்த மேடையைச் சுற்றியும் அந்தக் கூட்டத்தைச் சுற்றியும் அளித்த பெரும் பலத்த பாதுகாப்பின் காரணமாக ஒரு பிரதமருக்கு அளிக்கப்பட்டது போன்ற பாதுகாப்புத் தரப்பட்டதன் காரணமாக இந்தக் குண்டுகளைக் கட்டிக்கொண்டு வந்தவர்கள் யாரும் உள்ளே நெருங்க முடியவில்லை என்றும் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. இதுவரையில் நடந்து முடிந்த புலன் விசாரணையில் உடனடியாக வெடிக்கக்கூடிய குண்டுகள் மற்றும் கையெறி குண்டுகளோடு அனுப்பப்பட்ட அந்த 7 நபர்களும் காவல் துறையினரால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வளையங்களை ஊடுருவி



பொதுக் கூட்ட மேடைக்கு அருகே செல்வதற்கான சாட்சியக்கூறு எதுவும் அகப்படவில்லை. பொதுக் கூட்ட மேடை அருகிலே இந்த 7 பேர் கொண்டு வந்த உடனடியாக வெடிக்கும் வெடிகுண்டோ அல்லது கையெறி குண்டோ வெடித்ததற்கான சாட்சியக்கூறுகளும் இல்லை. பொதுக் கூட்ட மேடைக்கு அருகிலோ அல்லது அந்தப் பொதுக் கூட்டம் நடக்கவிருந்த இடத்தைச் சுற்றி எழுப்பப்பட்ட காவல் துறை பாதுகாப்பு வளையத்தின் அருகிலோ வெடிகுண்டுகள் வெடித்ததற்கான சாட்சியக்கூறுகளும் இல்லை. அஃதன்னியில், மேடைக்கு வெளியேகூட, போலீசின் பலத்த பாதுகாப்பு, கண்காணிப்பினால், இவை எல்லாம் தடுக்கப்பட்டு விட்டன. அதனால் எந்தவிதமான மனித வெடிகுண்டும் கூட்டங்களுக்கு வெளியிலேகூட வெடிக்கவில்லை. இவ்வளவு விவரங்களும் நான் இங்கே வைத்த வெள்ளை அறிக்கைக்குப் பிறகு, அப்போதே நான் குறிப்பிட்டதற்கு ஏற்ப, புலன் விசாரணையில் இதுவரையிலே கிடைத்துள்ள தகவல்கள். எனவே, இந்த அரசு, எதையும் மறைக்க விரும்பவில்லை.

பிற்பகல் 2-00

போலீசார்மீது குற்றங்கள் சாட்டப்பட்டன. கடுமையான வார்த்தைகள் எல்லாம் இங்கே பயன்படுத்தப்பட்டன. இவை எல்லாம் போலீசாரேகூட, தங்களைத் திருத்திக் கொள்வதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல், கோபப்படுவதற்காக இவை பயன்படுத்தப்பட்டதாக யாரும் கருதக்கூடாது. ஏனென்றால், பறிக்கப்பட்ட உயிர்கள் சாதாரணமானவை அல்ல. யாரோ இரண்டு எதிரிகள் ஒருவருக்கொருவர் கத்தியால் குத்திக்கொண்டு செத்த கதை அல்ல இது. வீரப் போராட்டமல்ல. யாருக்கோ வந்த எரிச்சலின் காரணமாக, யாருக்கோ ஏற்பட்ட வெறியின் காரணமாக, அதிலும், ஏற்படக்கூடாத மத வெறியின் காரணமாக, மத நல்லிணக்கத்திற்கு விரோதமாக, மனித நேயத்திற்கு விரோதமாக நடைபெற்றிருக்கிற ஒரு காரியத்தில் அப்பாவிப் பொதுமக்கள், இந்தச் சர்ச்சையைப் பற்றியே தெரிந்துகொள்ளாத பொதுமக்கள், இதைப்பற்றியே கவலைப்படாத, நாட்டு நடப்பைப் பற்றியே கவலைப்படாத பொதுமக்கள், அவர்கள் எல்லாம் செத்து ஒழிவது என்றால், அதை அந்த அளவுக்கு விட்டுவிட்ட அல்லது அலட்சியப்படுத்திவிட்ட யாராக இருந்தாலும், அவர்கள் மற்றவர்களால் கோபத்திற்கு ஆளாகித்தான் தீருவார்கள் என்பதிலே

எந்தவிதமான இரு வேறு கருத்துக்கும் இடமில்லை. எனவே, இங்கே பேசப்பட்ட அந்த வார்த்தைகள் கடுமையாக இருந்தாலும்கூட, அவற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், ஒன்றை மறந்துவிடக்கூடாது. அந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழ்நாடு முழுவதும் பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 13 ஆம் தேதி வரையில், எங்களுக்கு வந்த தகவல்களை, சென்னையிலே உள்ள தமிழக போலீஸ் உளவுத் துறையின் மூலமாகக் கிடைத்த தகவலானாலும் சரி அல்லது மத்திய போலீசினுடைய உளவுத் துறையின் தகவலானாலும் சரி, அத்தனையையும் உடனுக்குடன் அனுப்பி வைக்கிறோம்.

அதுமாத்திரமல்ல. நானே தொலைபேசியிலே அடிக்கடி தொடர்பு கொண்டு, பாதுகாப்புகள் எப்படி இருக்கின்றன என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் அன்றைக்குச் சொன்னதைப் போல, வேடிக்கையாகக் கேட்கவில்லை. ஒரு முதலமைச்சரே அந்த இடத்திற்குச் சென்று குண்டு இருக்கிறதா என்று பார்க்க முடியுமா என்பதை நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும். அதற்கான எல்லாக் கடமைகளையும் செய்திருக்கிறோம். பெரிய அதிகாரிகள், இங்கே இருக்கிற தலைமைச் செயலாளர், மற்ற செயலாளர்கள், உள்துறைச் செயலாளர் இவர்கள் அத்தனை பேர்களும் அடிக்கடி கூட்டங்களை நடத்தி, அங்கே என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். இதற்கிடையிலேகூட, ஒரு அதிகாரி தவறு செய்து விட்டார். இங்கே ரொம்பவும் கோபமாகப் பேசினார். அந்த அதிகாரி மீது என்ன நடவடிக்கை என்று திரு. கணேசன் கேட்டார். அந்த அதிகாரி மீது நடவடிக்கை உண்டு என்று சொன்னதும், அவருடைய தலைவர் என்ன சொன்னார்? ஒரு ஜாதியைக் குறிப்பிட்டு, அந்த ஜாதியைச் சேர்ந்த அதிகாரி என்ற காரணத்தால் நடவடிக்கையா என்று அவருடைய தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் ஓர் அறிக்கையின் மூலமாகக் கேட்டார். இதிலே ஜாதி ஒன்றும் கிடையாது, சதியைத் தடுக்கவில்லை, நாம் அரசின் சார்பாக விடுத்த தாக்கீதுகளையும் ஒழுங்காக நிறைவேற்றவில்லை, அதற்கான காரணங்களை விளக்குங்கள் என்று கேட்டால், விளக்கப்பட்ட காரணங்கள் ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே, அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத்தக்க அளவுக்கு Charge Sheet அவர் மீது இப்போது போடப்பட்டு, விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கேகூட, அங்கே ஜாதி இடையிலே வந்து நுழைந்து, அந்த



ஜாதியைக் கேவலப்படுத்துவதா; அந்த ஜாதியைச் சேர்ந்தவரைத் தண்டிப்பதா என்றெல்லாம்கூடக் கேட்டார்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அந்த வகையிலேதான் கோவை அதிகாரியிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் CBI விசாரணை வைக்கவில்லை, வைக்கவில்லை என்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உறுப்பினர் திரு. கணேசன் அவர்களுடைய தலைவர்கள் எல்லாம் 5, 6 குற்றச்சாட்டுகளை, தொடர்ந்து இந்த அரசின் மீது சுமத்தி வருகிறார்கள். யார், இந்த TADA சட்டப்படி கைதானவர்களை எல்லாம் விடுதலை செய்தது? 16 கேள்விகளைக் கூட அவர்கள் கேட்டிருந்தார்கள். அதிலே ஒரு கேள்வி, ஏன் விடுதலை செய்தீர்கள் என்ற கேள்வி.

என் கையிலே இருப்பது டாக்டர் இராமதாஸ் எனக்கு எழுதிய கடிதம். இந்தக் கடிதம் 1997 ஆம் ஆண்டு எனக்கு எழுதப்பட்டது.

"அன்பனரென்பீர்,

வணக்கம், சமுதாயத்தில் கடையரிலும் கடையராக உள்ள தலித் மக்களுள் சமீபத்தில் நடத்திய போராட்டங்களுக்காகக் கைதானவர்கள் எல்லாம் நாளைய ஆகஸ்ட் 15, உங்கள் பொது மன்னிப்பு அறிவிப்போடு விடுதலையாக இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அதே வேளையில், TADA போன்ற ஆட்கொல்லிச் சட்டங்கள் காலாவதியான பின்னரும், தமிழ்நாட்டில் TADA சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்றுவரை எந்த விசாரணையுமின்றி பிணையில்கூட, --பிணை என்றால் ஜாமீன்-- ஜாமீனில் கூட வெளிவர முடியாதபடி, 6, 7 ஆண்டுகளாகச் சிறையிலே கட்டுண்டு கிடப்பதை நினைவூட்ட விரும்புகிறேன். நாளை தாங்கள் வழங்க இருக்கும் பொது மன்னிப்பு, TADA சிறைவாசிகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் அடிப்படையில் அவர்கள் மீது விசாரணை வழக்குத் தொடரலாம். கருணையோடு பரிசீலிக்கவும்.

அன்புடன்
இராமதாஸ்."

என்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் இராமதாஸ் அவர்கள் எனக்கு எழுதிய கடிதம். இதை எல்லாம் நான் நிறைவேற்ற வேண்டாமா? நிறைவேற்றினால், ஏன் விடுவித்தாய் என்று கேட்பதா? அன்று கடிதம்; இன்று கண்டனமா?

*பிற்பகல் 2-05*

C.B.I. விசாரணை பற்றிக் கூட-- நாங்கள் அதை எதிர்த்தவர்கள் அல்ல. *6-3-1998* அன்று செய்தியாளர்கள் என்னைத் தலைமைச் செயலகத்திலே சந்தித்து C.B.I. விசாரணை பற்றிக் கேட்டார்கள். நான் சொன்ன பதிலில், C.B.I. விசாரணையை நான் என்றைக்கும் மறுப்பவன் அல்ல. இன்னும் சொல்லப்போனால், ஜெயலலிதா ஆட்சியிலே ஒரு வழக்கில் சுப்பிரமணியசாமி கோரிய C.B.I. விசாரணையை, ஜெயலலிதா ஆட்சியிலே மறுத்து இருந்தபோதிலும், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நீதிமன்றத்திலேயே அந்த மறுப்பைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, C.B.I. விசாரணைக்கு அரசின் சார்பில் நீதிமன்றத்திலே ஒப்புதல் அளித்து இருக்கின்றோம். வாசாத்தியில் நடைபெற்ற பயங்கர வன்முறையைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி C.B.I. விசாரணை கேட்டபோது, ஜெயலலிதா ஆட்சியிலே மறுக்கப்பட்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மறைந்த நல்லசிவன் அவர்கள் உச்சநீதிமன்றம்வரை சென்று C.B.I. விசாரணைக்கு அனுமதி பெற்றார் என்பதை யாரும் மறந்துவிடவில்லை. சில வழக்குகளில் C.B.I. விசாரணைக்கு நீதிமன்றம் அனுமதித்தபோது, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்துக்குச் செல்வேன் என்று ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது கருத்து வெளியிட்டு இருக்கிறார் என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது.

இப்போது இந்த ஆட்சியிலே மதுரை லீலாவதி கொலை வழக்கில் தமிழக போலீசார் பாரபட்சமின்றி விசாரணை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் யாரும் இந்த 10 மாத காலத்தில் ஜாமீனிலே கூட வெளியே வரமுடியவில்லை. அவர்கள் தி.மு.க.காரர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு இருந்தாலும், யாரும் ஜாமீனில் வெளிவரவில்லை. இந்தக் கொலை வழக்கிலும் C.B.I. விசாரணை வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியது. அதை ஏற்றுக்கொண்டு நாங்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினோம்.



அதைப்போலவே, மேலவளவு சம்பவத்திற்கும் தேவர் பேரவையினர் C.B.I. விசாரணை வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. ஆனால், இந்த இரண்டு பரிந்துரைகளையும் மத்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. C.B.I.-க்கு பணி நிரம்ப இருக்கிறது, எனவே, இயலாது என்று பதில் அளித்துவிட்டார்கள். இதிலிருந்து C.B.I. விசாரணைக்கு தி.மு.க. அரசு என்றைக்கும் தடையாக இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இப்போதுகூட C.B.I. விசாரணை கோரி ஜெயலலிதா நீதிமன்றம் சென்று இருக்கின்றார். நான் அதைப்பற்றிக்கூடச் சொன்னேன். திருச்சி, ஈரோடு மற்றும் திருச்சூர் ஆகிய நகரங்களில் புகைவண்டி நிலையங்களில் *6-12-1997* அன்று நிகழ்ந்த குண்டுவெடிப்பு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து திருச்சியிலும் ஈரோட்டிலும் நடைபெற்ற சம்பவம் குறித்து விசாரணையை C.B.I. மேற்கொள்ளலாம் என்று *7-12-1997* அன்று மத்திய இரயில்வே அமைச்சருக்கும், பிரதமருக்கும் நேர்முகக் கடிதங்கள் மூலம் எழுதி இருந்தேன். அந்தக் கடிதத்தில், "There are reasons to believe that the serial blasts are the handy-work of certain Islamic fundamentalist forces. The possibility of the hands of certain foreign forces enemical to our national interest in these incidents cannot also be ruled out. It will be in our national interest if the Ministry of Railway can immediately order a CBI probe into these incidents so that the culprits can be brought to book at the earliest" என்று குறிப்பிட்டு இருந்தேன். இது தொடர்பாக மத்திய அரசு C.B.I.-யின் கருத்தைக் கோரியபோது, C.B.I. உள் துறைக்குத் தனது கருத்தைத் தெரிவித்து, உள் துறையின் சார்பில் *27-2-1998*-ல் உள் துறை இயக்குநர் தமிழக அரசின் உள் துறைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில், "Please refer to the letter dated 7-12-1997 from the Chief Minister of Tamil Nadu requesting for CBI enquiry in the cases of 3 powerful bomb blasts. The matter was taken up by the CBI who have now informed that the cases pertaining to Tamil Nadu State are being directly supervised by the IGP (Crime) CID and in Kerala the case is under the supervision of the DIG (Crime Branch), Kerala and in this situation the CBI feel that the local Police can handle these cases effectively and these cases do not merit investigations by the CBI".

பிற்பகல் 2-10

உள்ளூர் காவல் துறையினரே ஒழுங்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். C.B.I.க்கு வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். நாங்கள் C.B.I. விசாரணை வேண்டாம் என்று என்றைக்கும் சொன்னது கிடையாது. இப்போது இதுவரைக்கும் படித்துக் காட்டினேனே, எது மறைக்கப்பட்டிருக்கின்றது? நம்முடைய உள்ளூர் காவல் துறை, தமிழகத்திலே உள்ள போலீஸ், ஐ.ஜி. தலைமையிலே இந்தச் சிறப்புப் பிரிவு எந்த அளவுக்குச் செயல்பட்டு நாம் அன்றைக்கு ஹேஷ்யங்களாகச் சொன்னவை எல்லாம் கூட அவை ஹேஷ்யங்கள் அல்ல, உண்மைகள்தான் என்பதற்கு இந்தப் புலன் விசாரணையிலே இவ்வளவு செய்திகள் கிடைத்திருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டிருக்க முடியும். இன்னும் பல செய்திகள் கிடைக்கக்கூடும். அவர்களை எல்லாம் உடனடியாக தண்டித்துவிட வேண்டாமா என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. ஏனென்றால், எந்த ஒரு குற்றத்திலும், அதற்கு என்று எவ்வளவோ சட்டங்கள் இருக்கின்றன. நாம்தான் பார்க்கிறோமே, நாம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆயிற்று. என்ன சொன்னார்கள் மக்கள் நமக்கு? போனவுடனே குற்றம் புரிந்த எல்லோரையும் பிடித்து உள்ளே போடுங்கள் என்றுதானே நம்மை இங்கே அனுப்பினார்கள்? முடிந்ததா? காரணம் என்ன? சட்டம். சட்டத்தின் சந்து பொந்துகளில் யார் வேண்டுமானாலும் அங்கே இங்கே ஓடி விளையாடலாம். கடைசியில் விளையாடுகிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அதுவரையிலும் விளையாட முடியும். சட்டத்தின் சந்து பொந்துகள் அப்படி இருக்கின்றன. எனவேதான் உடனடியாக தண்டிக்க முடியாது.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டார். தெரியாதா யார் கொன்றார்கள் என்று? மறுநாளே தீர்ப்பு அளிக்க முடிந்ததா? 7 வருஷம் ஆனது தீர்ப்பு அளிக்க. இப்போதும் அப்பீல் நடந்துகொண்டிருக்கிறது. அதேமாதிரி இந்திராகாந்தி கொலை நடந்து எத்தனை வருஷம் ஆனது? கொலை செய்தது யார் என்று நேரடியாகப் பார்த்தும் கூட, எத்தனை வருஷம் ஆனது? எனவே சட்டப்படி சில காரியங்கள் நடைபெறுகிறபோது உடனடியாக யாரையும் உள்ளே, சிறையிலே போட்டுவிட முடியாது.



அதற்காகத்தான் National Security Act-ஐப் பயன்படுத்துகின்றோம். இப்போது கைது செய்யப்பட்டிருக்கின்ற இந்தத் தீவிரவாதிகள் பலபேர் மீது National Security Act பயன்படுத்தப்பட்டு அவர்கள் சிறையிலே வைக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களை மறுபடியும் ஒரு வருடத்திற்குப் பிறகு விடக் கூடாது என்பதற்காகத்தான் புதிய சட்டத்தைத் தயாரித்துக்கொண்டு இருக்கின்றோம். சட்டம் அநேகமாகத் தயாராகிவிட்டது. விரைவில் இந்த அவையினுடைய பார்வைக்கு வர இருக்கின்றது. அவையிலே உள்ளவர்கள் நீங்கள் எல்லாம் தருகின்ற திருத்தங்களை எண்ணிப் பார்த்து, யோசித்து, அந்தத் திருத்தகங்ளோடு தேவைப்பட்டால் அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு சட்டம் வர இருக்கின்றது. அந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்து விசாரணை நடத்துவதற்காக, இதற்கானத் தனி நீதிமன்றம் அமைக்க, அதைப் பற்றியும் டி.ஜி.பி.யிடமிருந்து கருத்துரு அரசுக்கு வந்துவிட்டது. அந்தக் கருத்துருவும் இப்போது உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அவர்களுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது. அது வந்து சேர்ந்தவுடன் நிச்சயமாக இந்த விசாரணைகள் எல்லாம் நடைபெற்று தீவிரவாதிகள் யாராக இருந்தாலும் இந்தப் புலன் விசாரணையிலே கிடைக்கின்ற தகவல்களை வைத்து, இந்த வழக்கில் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கே, இந்து என்றோ முஸ்லீம் என்றோ சொல்லக்கூடாது, அந்த இயக்கத்தின் பெயரை சொல்லவேண்டுமென்று சொன்னார்கள். அப்படி ஏதாவது தவறு நடைபெற்றிருந்தால் இந்த அறிக்கையில் நான் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். அல்-உம்மா என்றோ, ஜிகாத் என்றோ அவர்களைக் குறிப்பிட்டால் போதுமானது. அதைப்போல அவர்கள் மதத்தின் பெயரால் இந்து முன்னணி என்றும், இந்து மக்கள் கட்சி என்றும் பெயர் வைத்திருக்கின்றார்கள். அதைக் குறிப்பிடுகின்றபோது அப்படித்தான் குறிப்பிட்டாக வேண்டும். அந்தக் கட்சிகளை அந்த இயக்கங்களை அப்படித்தான் குறிப்பிட்டாக வேண்டும்.

இந்த விளக்கங்களை எல்லாம் நான் அளித்த பிறகும் யாருக்கும் இந்த அரசு தூய்மையாக எடுக்கின்ற நடவடிக்கைகள் மீது கிஞ்சிற்றும் ஐயப்பாடு இராது என்றே நான் கருதுகின்றேன். அந்த வகையிலே இங்கே வைக்கப்பட்ட இந்த வெள்ளை அறிக்கையினை இந்த அவை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகின்றேன். அந்த நம்பிக்கையோடு இந்த உரையை உங்கள் முன்னால் நான்

நிகழ்த்தியிருக்கின்றேன். மத நல்லிணக்கத்திற்கு, மதவாதங்களை ஒழித்துக் கட்டுவதற்கு, மதவெறியை வீழ்த்துவதற்கு, அனைவரும் சேர்ந்து பாடுபட இந்த அவையிலே மீண்டும் ஒருமுறை உறுதி எடுத்துக்கொள்ள இந்த விவாதம் பயன்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றப் பேரவையின் சார்பாக 'உணர்வு' என்ற பத்திரிகை நடத்தப்பட்டு வருவதை அரசு அறியுமா? அந்தப் பத்திரிகையின் மூலமாக மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இதுவரை 80 இலட்சம் ரூபாய், பாதிக்கப்பட்டவர்களுக்கு என்று வசூலிக்கப்பட்டிருப்பதையும் அரசு அறியுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தந்திருக்கின்ற தகவல் அடிப்படையில் அதுவும் விசாரிக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பு ஜெய்னுலாபுதீன் தலைமையில் இயங்குகிறது. அந்த அமைப்புதான் இதுபோன்ற குண்டு வெடிப்பு, மற்ற மற்ற சம்பவங்களுக்குக் காரணம் என்று சொல்கின்றார்கள். அதை ஏன் தடை செய்யவில்லை? CBI விசாரணைக்கு மீண்டும் மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்திக் கோரிக்கை விடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டு வெடிப்பு போன்ற தீவிரமான காரியங்களால் சட்டம்-ஒழுங்கு அமைதியைக் குலைப்பதற்கு யார் முன்வந்தாலும், அவர்கள் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அல்லது இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டம்-ஒழுங்கு அமைதியைக் கெடுப்பதற்காகத் திட்டமிட்டு யார் அந்தக் காரியத்தைச் செய்தாலும் அவர்கள் மீது அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அது சில அரசியல் கட்சிகளாகக்கூட இருக்கலாம். திரு. கே. சுப்பராயன் அவர்கள் சொன்னதைப்போல சில அரசியல் கட்சிகள்கூட அந்தக் காரியத்திலே



ஈடுபடுவதாக எனக்கு நன்றாகத் தெரியும் (மேசையைத் தட்டும் ஒலி). அவர்களும் தப்பமாட்டார்கள் என்பதை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

## 4. அறிவிப்பு

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் 15-5-1998 அன்று எடுத்துக் கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 6-5-1998 அன்று பேரவையில் குறிப்பிட்டதற்கு ஏற்ப ஒத்தி வைக்கப்பட்ட கோரிக்கை எண் 32-வீட்டு வசதி, கோரிக்கை எண் 33-நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் 15-5-1998 அன்று மீன் வளத் துறை மானியக் கோரிக்கையோடு விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-16 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

-ஏதுமில்லை-

**இணைப்பு**

*(256 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

# கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு சம்பந்தமாக அரசின் வெள்ளை அறிக்கை

14-2-1998 அன்று கோயம்புத்தூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பிற்கான அடிப்படை காரணங்கள், அரசு எடுத்த நடவடிக்கைகள் ஆகியவைபற்றி விளக்க இந்த வெள்ளை அறிக்கை அவைமுன் வைக்கப்படுகிறது.

**தமிழகத்தில் பிற குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகள்:**

2. 1984-லிலிருந்தே நெஞ்சை உலுக்கும் பல குண்டு வெடிப்புகள் தமிழகத்தில் நிகழ்ந்து வந்திருக்கின்றன. அவற்றில் முக்கியமான சில சம்பவங்கள் வருமாறு:

2.1. 2-8-1984 அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஏற்பட்ட பெரும் குண்டு வெடிப்பில் 25 வெளிநாட்டவர் உட்பட 30 பேர் உயிரிழந்தனர். 37 பேர் காயமுற்றனர். தமிழீழப் போராளிக் குழுவினர்தான் இந்தக் குண்டுவெடிப்பிற்குக் காரணம் என புலன் விசாரணையில் தெரிய வந்தது. இந்த வழக்கில் சரவணபவன் மற்றும் நான்கு நபர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. முக்கிய குற்றவாளியான தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் என்பவர் ஜாமீனில் விடுதலை ஆகி தலைமறைவாகச் சென்றவர் 6-2-98 அன்று மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர்மீது உள்ள வழக்கில் நீதிமன்ற விசாரணை நடைபெறவுள்ளது.

2.2. 15-3-1987 அன்று அரியலூருக்கு அருகில் மருதையாறு பாலத்தில் தமிழ்நாடு விடுதலைப் படையினர் குண்டு வைத்ததில், மலைக்கோட்டை விரைவு ரயில் கவிழ்ந்து 26 பேர் மரணம் அடைந்தனர். 140 பேருக்குமேல் காயமடைந்தனர். மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு மேல்முறையீடு நிலுவையில் உள்ளது.

2.3. 21-5-1991 அன்று திருப்பெரும்புதூரில் நிகழ்ந்த கொடூர குண்டு வெடிப்பில் முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மற்றும் 9 காவலர்கள் உட்பட 18 பேர் மரணமடைந்தனர். விடுதலைப் புலிகள் மற்றும் அவர்கள் ஆதரவாளர்களான 26 பேருக்கு நீதிமன்றம் 28-1-1998 அன்று மரணதண்டனை வழங்கியுள்ளது. மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

2.4. 20-4-1992 அன்று தேனி மாவட்டம் சுருளிப்பட்டியில் தமிழக மக்கள் விடுதலைப் படையினரால் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஒருவர் மரணமுற்றார். குற்றவாளி ராஜாராம் தலைமறைவாக உள்ளதால் வழக்கு விசாரணையில் உள்ளது.

2.5. 8-8-1993 அன்று சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வைத்ததில் 11 பேர் மரணம் அடைந்தனர். சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று, முஸ்லீம் தீவிரவாதிகள் எஸ்.ஏ. பாஷா, இமாம் அலி, ஹைதர் அலி ஆகியோர் உட்பட 18 பேர் மீது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

2.6. 18-11-1993 அன்று தமிழ்நாடு விடுதலைப் படையினர் கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தை குண்டுவீசி தாக்கியதில் ஒரு காவலர் மரணமடைந்தார். 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

2.7. 25-5-1994 அன்று தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப்பேட்டை என்ற இடத்தில் சோதனைச் சாவடியில் ஒரு காரை நிறுத்தி காவல் துறையினர் சோதனை செய்தபோது விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த சக்தி என்பவர் எறிந்த குண்டு வெடித்ததில் ஒருவர் மரணமடைந்தார். 7 பேர் காயமடைந்தனர். 18 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

2.8. 14-4-1995 அன்று சென்னை இந்து முன்னணி அலுவலகத்தில் முஸ்லீம் தீவிரவாதிகள் குண்டு வைத்ததில் இருவர் இறந்தனர். குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

2.9. 3-7-1995 அன்று நாகை இந்து முன்னணி இயக்கத்தைச் சேர்ந்த தங்க முத்துகிருஷ்ணன் என்பவருக்கு அனுப்பப்பட்ட





தபால் வெடிகுண்டு வெடித்ததில் தங்க முத்துகிருஷ்ணனின் மனைவி மரணம் அடைந்தார். ராஜா உசேன், ரிஃபாயீ, குத்புதின், ஹாரூன் இஸ்மாயில் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். 1 பேர் தலைமறைவாக உள்ளனர். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

2.10. இந்தச் சம்பவங்களைப் பற்றி ஆராய்ந்து அறிய மாநிலங்கள் அவை எதிர்க் கட்சித் தலைவர், திரு. சிக்கந்தர் பக்த் அவர்கள் தலைமையில் திரு. ஜெ.பி. மாத்தூர் (மாநிலங்களவை உறுப்பினர்), திருமதி சுஷ்மா சுவராஜ் (மாநிலங்களவை உறுப்பினர்), திரு. தனஞ்செய் குமார் (நாடாளுமன்ற உறுப்பினர்), திரு. ஓ. ராஜகோபால் (மாநிலங்களவை உறுப்பினர்) ஆகிய நாடாமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. வாஜ்பாய் அவர்கள் அனுப்பிவைத்தார். இந்தக் குழு 29, 30-7-1995 ஆகிய நாட்களில் சென்னையில் ஆய்வு நடத்தி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

**மதத் தீவிரவாத வளர்ச்சி**

3. மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக தமிழகம் விளங்கி வந்தது. இதற்குக் களங்கம் விளைவிக்கும் நிகழ்ச்சிகள் 15 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்தன என்று சொல்லலாம். மற்ற மதத்தினரைப் பற்றி மனம் புண்படும் விதத்தில் சிலர் பேசி வந்தது, காழ்ப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டது. ஒரு மதத்தின் ஊர்வலங்கள் மற்றுமொரு மதத்தின் வழிபாட்டுத் தலங்கள் வழியாகச் செல்லும்போது பிரச்சினைகள் ஏற்பட்டன. அரசு பல சமயங்களில் தலையிட்டு அசம்பாவிதங்களைத் தவிர்த்திருக்கிறது. 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் தேதி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி தமிழக முஸ்லீம்களிடையே பெருத்த கொந்தளிப்பை ஏற்படுத்தி, மதத் தீவிரவாதம் தமிழகத்தில் பரவிடக் காரணமாக அமைந்தது. 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பு தனி நபர்கள்மீது குறிவைத்து வன்முறை நடத்தப்பட்டு வந்தது. பாபர் மசூதி இடிக்கப்பட்டபின் சில முஸ்லீம தீவிரவாத வன்முறையாளர்கள் குண்டுவெடிப்புகளில் ஈடுபடலாயினர். சென்னையில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வெடிப்பு, இந்து முன்னணி அலுவலகத்தில் குண்டு வெடிப்பு ஆகியவை நிகழ்ந்தன.

[1998 மே 11

## கோயம்புத்தூர் குண்டுவெடிப்பின் பின்னணி

4. 1993-ல் ஆரம்பித்த குண்டுவெடிப்புகளின் தொடர்ச்சியாக கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு என்ற நிலை இருந்தாலும், கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிற்கு முன்பு நிகழ்ந்த சமீபகால நிகழ்வுகளைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். 28-1-1997 அன்று பொள்ளாச்சியில் அகில இந்திய ஜிஹாத் கமிட்டியின் தலைவர் பழனிபாபா ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையையொட்டி கோயம்புத்தூரில் சில வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அதில் 4 முஸ்லீம்களும், 2 இந்துக்களும் உயிரிழந்தனர். இந்த வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து 1997 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்பட்ட வன்முறையில் 5 இந்துககள் கொல்லப்பட்டனர். இந்த இரு நிகழ்வுகளிலும் காவல்துறையினர் உடன் நடவடிக்கை எடுத்து, 43 முஸ்லீம்களையும், 27 இந்துக்களையும் கைது செய்தனர். இருப்பினும், ஏற்கெனவே கூறியதுபோல், மத நல்லிணக்கம் பாதிக்கப்பட்டிருந்த இந்தச் சூழ்நிலையில், 29-11-1997 அன்று கோயம்புத்தூரில் அலுவலில் இருந்த செல்வராஜ் என்னும் காவலர், அல்-உம்மா தீவிரவாத முஸ்லீம்களால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இதையடுத்து, கோயம்புத்தூரில் மதத் தீவிரவாதிகள் நடத்திய வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லீம்களும் 4 இந்துக்களும் உயிரிழந்தனர். சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்ற உடனடியாக ராணுவம் வரவழைக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள் கோயம்புத்தூரில் வன்முறை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. 3-12-1997 அன்று, உடுமலைப்பேட்டையில் குண்டு வெடித்ததில் 3 பேர் மரணமடைந்தனர். அப்துல் கையூம், அப்துல் கரீம், பழனி பாபு, சுல்தான் நஸீர் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டு, வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. 6-12-1997 அன்று, திருச்சியில் பாண்டியன் விரைவு ரயிலிலும், ஈரோடு அருகில் சேரன் விரைவு ரயிலிலும், இஸ்லாமிய பாதுகாப்புப் படையினரால் வைக்கப்பட்ட குண்டுகள் வெடித்ததில் 6 பேர் மரணமடைந்தனர். அப்துல் ரஹீம், அலி அப்துல்லா ஆகிய இருவரும் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. 14-2-1998 அன்று கோயம்புத்தூரில் வெடிகுண்டுகள் வெடித்ததில் 49 பேரும், குண்டுகள் தயாரித்தவர்கள் 6 பேரும் விபத்துக்களில் 4 பேரும், மொத்தம் 59 பேர் (46 இந்துக்கள், 13 முஸ்லீம்கள்) மரணமடைந்தனர். இந்த வழக்கு தொடர்பாக, 20-4-1998 வரை



1998 மே 11]

158 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நவம்பர் 1997-ல் கோவையில் காவலர் செல்வராஜ் கொலை செய்யப்பட்டு அதன் தொடர்பாக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்ட துயரச் சம்பவத்திற்கு பழிவாங்கும் படலமாகவே இந்த விரும்பத் தகாத குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்பது புலன் விசாரணையில் தெரிய வருகிறது.

## கோயம்புத்தூர் குண்டு வெடிப்புகள் குறித்து முன்னெச்சரிக்கை செய்திகள்

5. முஸ்லீம்கள் அடைந்த பாதிப்பிற்கு பழிவாங்க கோயம்புத்தூரின் புறநகர் பகுதிகளில் எதிர்த் தாக்குதல் மேற்கொள்ள அல்-உம்மா இயக்கத்தினருக்கு அதன் தலைவர் உத்தரவிட்டிருப்பதாகவும், காவல் நிலையங்களும், காவல்துறை ஆணையர் அலுவலகமும், எரி வாயு லாரிகளும் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்றும் மத்திய அரசு அமைப்பு ஒன்றிடமிருந்து 21-12-1997 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. உடனடியாக கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளரும், கோயம்புத்தூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரும் மாநில நுண்ணறிவுப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டனர். கோயம்புத்தூர் காவல்துறை ஆணையாளரும் 25-12-1997 அன்று தன் அலுவலர்களைக் கூட்டி, அவர்களை எச்சரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். எட்டு சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டன. காவல் நிலையங்களுக்கும் காவல் துறை ஆணையாளர் அலுவலகத்திற்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் தகவலின் அடிப்படையில் 24-12-1997 அன்று காவல் துறைத் தலைமை இயக்குநர், கூடுதல் இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு), கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு), உள்துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர் ஆகியோருடன் தலைமைச் செயலாளர் நடத்திய கூட்டத்தில் விவாதித்து முஸ்லீம் அடிப்படைவாத இயக்கத் தலைவர்களைத் தீவிரமாகக் கண்காணிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும், தீவிரத் திட்டம் (Contingency Plan) ஒன்றும் தயாரிக்க முடிவு எடுக்கப்பட்டது. தீவிரக் கண்காணிப்பின் விளைவாக, திருச்சி ரயில் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட அப்துல் ரகீம் என்பவர் 10-1-1998 அன்று கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

6. மீண்டும் 2-1-1998 அன்று, இந்து இயக்கங்களின் தலைவர்களையும் காவல் துறை அலுவலர்களையும் தாக்க அல்-உம்மா பிரிவினர் திட்டம் போட்டிருப்பதாகவும், கோட்டைமேடு பகுதியில் தகராறு ஏற்படுத்தி போலீஸ் வந்தவுடன் அவர்களைத் தாக்குவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் மத்திய அரசு அமைப்பு ஒன்றிடமிருந்து தகவல் வந்தது. இந்தத் தகவலும் உடனடியாக கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இந்து இயக்கத்தினர் சிலருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. காவல் துறை அலுவலர்களும் எச்சரிக்கப்பட்டனர்.

7. மத்திய அரசுத் துறையிடமிருந்து 19-1-1998-ல் வரப்பெற்ற மற்றொரு அறிக்கையில் அல்-உம்மா இயக்கத்தினர் சிலர் கோயம்புத்தூரில் பயன்படுத்துவதற்கு வெடிமருந்துகள் வாங்க ஏர்வாடி காசிம் என்பவரைக் கேட்டுள்ளதாகவும், ரம்ஜானுக்கு ஒரு வாரத்திற்குப் பின் வன்முறை நடத்த திட்டம் தீட்டியிருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கைது செய்யப்பட்டுள்ள ரகீ.. விடுதலை செய்யப்படாவிட்டால் வன்முறையில் ஈடுபட ஜிகாத் கமிட்டி முடிவு செய்திருப்பதாகவும், கூறப்பட்டுள்ளது. இந்தகவலும் உடனுக்குடன் அனைத்துக் காவல் துறை ஆணையாளர்களுக்கும் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. ஏர்வாடி காசிமைப் பிடிப்பதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

8. 23-1-1998 அன்று மத்திய உள்துறை அலுவலகத்திலிருந்து வந்த செய்தியில் இஸ்லாமிய பாதுகாப்புப் படை என்ற பெயரில் அல்-உம்மா இயக்கத்தினர் கோயம்புத்தூர் நகரில் குண்டு வெடிக்க திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில், கோவை நகர காவல் துறை ஆணையாளரும், கோவை மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரும் உடனடியாக எச்சரிக்கப்பட்டனர்.

9. இதுபோன்ற செய்திகள் குறித்து காவல் துறை தலைமை இயக்குநரும், கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு)-ம் கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டும் எச்சரித்துள்ளனர்.

10. மாநில நுண்ணறிவுப் பிரிவு, தன் அலுவலர்கள் மூலம் தகவல் சேகரித்து 3-12-1997 முதல் 10-2-1998 வரை 12 எச்சரிக்கைச்



செய்திகளை கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளருக்கு அனுப்பியுள்ளது. 3-12-1997 அன்று முஸ்லீம் தீவிரவாதிகள் காவல் துறை குடியிருப்புகளைத் தாக்கத் திட்டமிட்டிருப்பதாக செய்தி அனுப்பப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து காவல்துறை அலுவலர்களும், அவர்களின் குடியிருப்புகளும், வாகனங்களும் இந்தியன் ஆயில் மற்றும் பாரத் பெட்ரோலிய நிறுவனங்களும் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடும் என்றும், குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்றும் எச்சரிக்கை செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் என்று குறிப்பிட்டு இரண்டு செய்திகளும் அனுப்பப்பட்டுள்ளன. இறுதியாக, 10-2-1998 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்தியில் அல்-உம்மா இயக்கத்தினர் திருமால் வீதியில் ஒரு குறிப்பிட்ட கட்டடத்திற்கு வந்து போவதாகவும், பிப்ரவரி 14 அல்லது 20 அன்று குண்டுகள் வெடிக்கத் திட்டம் தீட்டியிருப்பதாகவும் கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளருக்கு வான்தந்தி மூலம் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் தகவல் அவருக்கு கோயம்புத்தூரில் உள்ள மாநில நுண்ணறிவுப் பிரிவு அதிகாரியால் நேரடியாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு), கோவை நகர காவல் துறை ஆணையாளருக்கு 12 ஆம் தேதி ஒரு நேர்முகக் கடிதமும் அனுப்பியுள்ளார். கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளர், செய்தியில் குறிப்பிட்ட இடங்களைத் தேடிப் பார்த்ததாகவும், குண்டுகள் ஏதும் இல்லை எனவும் காவல் துறை இயக்குனருக்கு பின்னர் அனுப்பிய பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

11. அரசு பல எச்சரிக்கைகள் செய்தும், குண்டு வெடிப்புகளைத் தடுக்காமல் போனதற்கு கோயம்புத்தூர் காவல் துறை ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது பெரும் தண்டனைக்குரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

12. வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படக்கூடும் என்ற தகவலின் அடிப்படையில், 1-2-1998 அன்று காவல் துறை இயக்குநர் அனைத்து காவல் துறை ஆணையாளர்களுக்கும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும் அனுப்பிய செய்தியில் 1-2-1998 நள்ளிரவு முதல் 4-2-1998 வரை மாநிலம் முழுவதும் வெடிபொருட்கள் தீவிர

தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மீண்டும் 9-2-1998 அன்று அனுப்பப்பட்ட செய்தியில் 9-2-1998 நள்ளிரவு முதல் 11-2-1998 நள்ளிரவு வரை தணிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெடிமருந்துக் கடைகளைத் தணிக்கை செய்வதுடன், கள்ளத்தனமாக வெடிமருந்துகளை வைத்திருப்பவர்களைக் கண்டுபிடிக்கும்படியும், குறிப்பாக வாகனத் தணிக்கைகள் மேற்கொள்ளும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

13. மீண்டும் 10-2-1998 அன்று அனுப்பப்பட்ட வான்செய்தியில் வெடிபொருள் சோதனை, இரவு பகல் வாகனத் தணிக்கை, லாட்ஜ் தணிக்கை ஆகியவற்றைச் செய்யும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குண்டுகள் தயாரித்து, குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர், நாகர்கோவில், திருச்சி, உதகமண்டலம் தொகுதிகளில் பீதியை ஏற்படுத்த முயற்சிகள் இருக்கக்கூடும் என்றும் இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14. இந்த எச்சரிக்கைகளின் அடிப்படையில் 13-2-1998 வரை மாநிலம் முழுவதும் 49 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 81 பேர் கைது செய்யப்பட்டு, சுமார் 2000 நாட்டு வெடிகுண்டுகள், 586 ஜெலட்டின் குச்சிகள், 1595 டெட்டனேட்டர்கள், உரிமம் இல்லாத 8 துப்பாக்கிகள் 2 ரிவால்வர்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. ஆனால், கோயம்புத்தூர் மாநகரத்தில் எவ்வித பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

15. 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த கலவரங்களுக்குப் பின், கோயம்புத்தூர் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு முன் வரை கோயம்புத்தூர் நகரில் 23 பேரும் (14 இந்து, 9 முஸ்லீம்), கோயம்புத்தூர் மாவட்டத்தில் 5 பேரும் (3 இந்து 2 முஸ்லீம்) தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். மொத்தம் 259 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

**கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிற்குப் பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.**

16. கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிற்குப் பின்னர் அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:--



**16.1.** குண்டு வெடிப்பு நடைபெற்ற சில மணி நேரங்களிலேயே ராணுவமும், சி.ஆர்.பி.எப்-ம் வரவழைக்கப்பட்டு கோயம்புத்தூரில் வன்முறை ஒடுக்கப்பட்டது. திருமால் வீதியில் ஒரு கட்டடத்தில் தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 14-2-1998 அன்று இரவே அக்கட்டடத்தைப் போலீசார் சுற்றி வளைத்தனர். தீவிரவாதிகள் வைத்திருந்த குண்டு வெடித்ததில் தீவிரவாதிகளில் ஆறு பேர் இறந்தனர். எஞ்சியிருந்த எட்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

**16.2.** கோயம்புத்தூர் குண்டு வெடிப்புகள் நடைபெற்ற இரண்டு மணி நேரத்திற்குள் அல்-உம்மா இயக்கமும், அகில இந்திய ஜிஹாத் கமிட்டி இயக்கமும் மாநில அரசால் தடை செய்யப்பட்டன. அல்-உம்மா இயக்கத் தலைவர், எஸ்.ஏ. பாஷா மற்றும் அவருடன் இருந்த 12 பேர் உடன் கைது செய்யப்பட்டனர். பின்னர், அவற்றின் அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. அவற்றின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. அல்-உம்மா இயக்கத்தைச் சேர்ந்த 53 நபர்களும் அகில இந்திய ஜிகாத் கமிட்டியைச் சேர்ந்த 66 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**16.3.** காவல் துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணைக் குழு திறம்பட புலன் விசாரணை மேற்கொண்டு இக்குற்றவாளிகளைக் கைது செய்ததுடன், சதியை அம்பலப்படுத்தக் கூடிய மிகப் பயனுள்ள சாட்சியங்களையும் சேகரித்துள்ளது.

**16.4.** புலன் விசாரணையில், 20-4-1998 வரை 158 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 8 பேர் மரணம் அடைந்துள்ளனர். வெடிபொருட்கள் கர்நாடக மாநிலத்தில் இருந்து வாங்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு அம்மாநிலத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**16.5.** இதற்கிடையில், இஸ்லாமிய பாதுகாப்புப் படை என்ற இயக்கத்தைச் சேர்ந்த அலி அப்துல்லா என்பவர் திருவாரூர் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு அவர் 6-12-1997 அன்று நடந்த ரெயில் குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**16.6.** கோயம்புத்தூர் நகரிலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தீவிரவாதிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளும் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

**16.7.** சென்னை நகரில் மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, வெடிகுண்டுகளும், வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டதுடன், பல தீவிரவாதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். 1042 எலக்ட்ரிக் டெட்டனேட்டர்கள் 1022 சாதாரண டெட்டனேட்டர்கள், 5 நாட்டு வெடிகுண்டுகள், 37 பெட்ரோல் குண்டுகள், 187 ஜெலட்டின் குச்சிகள், குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு (time bomb) ஒன்று, 2 டின் குண்டுகள், 12 பெட்டி குண்டுகள், உரிமம் இல்லாத 3 ரிவால்வர்கள், 3 பைப் வெடிகுண்டுகள் முதலியவை கைப்பற்றப்பட்டன.

**16.8.** பிப்ரவரி 14-க்குப் பிறகு இதுவரை 35 பேர் (முஸ்லீம்கள்) தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

**16.9.** தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் காவல் துறை இயக்குநர்கள் (D.G.P), பாண்டிச்சேரி காவல் துறைத் தலைவர் (I.G.) ஆகியோரது கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு, தீவிரவாதிகளைக் கண்காணித்து அவர்கள்மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**16.10.** இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பிற்குப் பின்பு மாநிலத்தில் வேறு எந்தப் பகுதியிலும் பின் விளைவுகள் இல்லாமல் தடுக்கப்பட்டது. மத்தியில் புதிய அரசு பதவி ஏற்கும் நாளான 19-3-1998 அன்று மாநிலத்தில் குண்டு வெடிப்புகள் நிகழக் கூடும் என்ற தகவலின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் காவல் துறையினர் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டதின் விளைவாக எந்தவித அசம்பாவிதமும் நிகழாமல் தடுக்கப்பட்டது. தற்போது, தமிழகம் எங்கும் பூரண அமைதி நிலவுகிறது.

**16.11.** குஜராத் மாநிலத்தின் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற நீதிபதி திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் தலைமையில் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு



கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததற்கான சூழ்நிலைகள் குறித்தும், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்ட ஈடு குறித்தும், இதுபோன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராய்ந்து அறிக்கை தரும். இடைக்கால நிவாரணம் வழங்க ஆறரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**16.12.** புலன் விசாரணையின் அடிப்படையில் குண்டு வெடிப்புகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயர்நீதிமன்ற அனுமதியுடன் தனிக் கோர்ட் ஒன்று நிறுவி வழக்கு விசாரணையை விரைவுபடுத்தவும் அரசு முடிவு எடுத்துள்ளது.

**ஐ.எஸ்.ஐ. நடவடிக்கைகள்**

17. தமிழகத்தில் ஐ.எஸ்.ஐ. உளவாளிகள் நடமாடுவது பற்றியோ கோயம்புத்தூர் குண்டுவெடிப்புகளில் அவர்களுடைய ஈடுபாடு பற்றியோ மத்திய உள்துறையிலிருந்தோ அல்லது மத்திய புலனாய்வுத் துறையிலிருந்தோ தகவல் ஏதும் இல்லை. பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. இந்தியாவில் வன்முறைச் சம்பவங்களை நிகழ்த்தி குழப்பத்தை விளைவிக்கும் என்பது பற்றி பொதுப்படையான செய்திகள் அவ்வப்போது மத்திய உள் துறையிலிருந்து வந்துள்ளன. பொதுவாக இவ்வியக்கம், காஷ்மீர் தீவிரவாதிகள் மற்றும் சீக்கிய தீவிரவாதிகள் துணையுடன் இந்தியாவில் பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடக்கூடும் என்று தகவல் உள்ளது.

**திரு. அத்வானி உயிருக்குப் பாதுகாப்பு**

18. கோவையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த நாளன்று பி.ஜே.பி. பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக திரு. எல்.கே. அத்வானி அவர்கள் கோவை வந்திருந்தார். அவருக்கு தக்க பாதுகாப்பு அளிப்பதில் அரசு மிகவும் கவனமாக இருந்தது. இந்தியப் பிரதமருக்கு இணையான பாதுப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. குண்டு வெடிப்பில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர்களை நேரில் பார்க்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டபோது அவருக்கு தக்க பாதுகாப்புகள் அனைத்தையும் அரசு செய்தது. அதேநாள் இரவு, திருச்சியில் திரு. அத்வானி அவர்கள் கலந்து கொண்ட பொதுக் கூட்டத்திற்கும் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

[1998 மே 11

### மத்திய அரசின் ஒத்துழைப்பு

19. கோவை குண்டு வெடிப்பு சம்பந்தப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றியும் பின்னர் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியும் தமிழக அரசு மத்திய அரசிற்கு அனைத்துத் தகவல்களையும் அனுப்பியுள்ளது. தீவிரவாதத்தை ஒடுக்குவதில் தமிழக அரசு தீவிரமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அதற்கு மத்திய அரசிடமிருந்து பின்வரும் உதவிகளை தமிழக அரசு கோரியுள்ளது:

(அ) கோயம்புத்தூரில் மத்திய அரசின் அதிரடிப்படையினுடைய பட்டாலியன் ஒன்றை நிரந்தரமாக நிறுவ வேண்டும்.

(ஆ) மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து செலவுகளைப் பகிர்ந்துகொண்டு இரண்டு இந்திய ரிசர்வ் பட்டாலியன்களைத் தமிழகத்தில் நிறுவ வேண்டும்.

(இ) அல்-உம்மா மற்றும் ஜிஹாத் கமிட்டி ஆகிய இயக்கங்கள், பிற மாநிலங்களில் இருந்தும் செயல்படுவதால் அகில இந்திய அளவில் அவற்றைத் தடை செய்ய வேண்டும். இதற்கான கோரிக்கை 18-3-1998-ல் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஈ) காவல் துறையை நவீனப்படுத்த மத்திய அரசு ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்க வேண்டும்.

(உ) வெடிபொருள் கட்டுப்பாட்டுச் சட்டம் மத்திய அரசுடைய சட்டமாகையால் வெடிபொருளை வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றிற்குக் கடுமையான வழிமுறைகளை மத்திய அரசு விதிக்க வேண்டும். இதற்கான கடிதத்தை 21-3-1998 அன்று மாநில அரசு மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது.

20. மைய அரசின் உள் துறைச் சிறப்புச் செயலாளர், திரு. அசோக்குமார் தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு சென்னைக்கு 16-4-1998 அன்று அனுப்பி வைத்தது. மதத் தீவிரவாதத்திற்கு எதிராக அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி இந்தக் குழுவிற்கு அலுவலர்களால் விளக்கிக் கூறப்பட்டது. மத்திய அரசு குழுவும், 



1998 மே 11]

தமிழக அரசு மற்றும் தமிழகக் காவல்துறை எடுத்துள்ள நடவடிக்கைகளில் முழு திருப்தி தெரிவித்தது. இந்தச் சமயத்தில் மத்திய அரசிடம் தமிழக அரசு கோரிய கோரிக்கைகள் பற்றி மறுபடியும் வலியுறுத்தப்பட்டது. தீவிரவாதத்தை முறியடிப்பதற்கு தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பைத் தரவேண்டுமென தமிழக அரசு கோருகிறது.

### மத நல்லிணக்கம்

21. தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து தமிழக அரசு தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதிக்கவில்லை என்பது தெளிவாகும். வன்முறைகள் நிகழ்ந்தபோதெல்லாம் பாரபட்சமின்றி தீவிரவாதிகள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகள் பலர் கோவை குண்டுவெடிப்பிற்கு முன்பாகவே, தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பிறகு, உடனடியாக தீவிரவாத இயக்கங்கள் இரண்டை தமிழக அரசு தடை செய்தது. இந்த இயக்கங்கள் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. சில அவர்களுடைய அலுவலகங்களும் மூடப்பட்டு, வைக்கப்பட்டுள்ளன. தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும். தீவிரவாதிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த ஒரு தனிச் சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. தீவிரவாதத்தை ஒழிக்க இது உதவுமென அரசு கருதுகிறது.

22. தீவிரவாதிகள் அனைத்து மதங்களிலும் இருக்கும் மிகக் குறைந்த பிரிவினரேயாகும். மதத் தலைவர்கள் அனைவரும் மதத் தீவிரவாதிகளை ஒதுக்கி வைக்க வேண்டும். அவ்வாறு ஒதுக்கி வைத்து மதத்தலைவர்கள் சிலரும் அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்கள். மதத் தீவிரவாதிகளுடைய செயல்களுக்கு எந்தவிதமான ஆதரவையும் அளிக்காது, அவர்களைக் கண்டித்து, தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு அரசிற்கு எல்லா உதவிகளையும் அளிக்க முன் வர வேண்டும். மத வேற்றுமையைத் தூண்டிவிடும் பேச்சுக்களைக் குறைத்து, எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் பிற மதத்தினரையும் மதிக்கக் கற்றுக் கொண்டு, மத நல்லிணக்கத்தை உறுதி செய்ய மதத் தலைவர்கள் மேலும் உதவிட வேண்டுமென்று அரசின் சட்டம்-ஒழுங்கு அரசு இத்தருணத்தில் கோருகிறது.

[1998 மே 11

இயந்திரத்தை மட்டும் வைத்துக்கொண்டு மதத் தீவிரவாதத்தை முழுமையாக ஒழிக்க இயலாது. மக்களுடைய மனதில் இருக்கின்ற மத வேறுபாட்டை நீக்கவேண்டும். அதற்குச் சமுதாயத் தலைவர்களும், மதத் தலைவர்களும் துணை நிற்கவேண்டுமென்று அரசு வேண்டுவதுடன் அதற்கான முழு முயற்சிகளையும் அரசு எடுத்திடும் என்று உறுதி அளிக்கிறது.

23. கோயம்புத்தூர் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக இதுவரை 6-1/2 கோடி ரூபாய் நிதி உதவியை அரசு அறிவித்துள்ளது. வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை எதுவாயினும் ஏற்பட்டுள்ள இழப்புக்கு அது ஈடாகாது என்பதை இந்த அரசு உணர்கிறது. இழப்புக்கு ஆளான குடும்பத்தினருக்கு கண்ணீருடன் கலந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, தமிழகம் அமைதி பூமியாக விளங்கிட அனைத்துத் தரப்பு மக்களின் ஒத்துழைப்பையும் வழங்குமாறு மீண்டும் ஒரு முறை வேண்டிக் கேட்டுக்கொண்டு இந்த வெள்ளை அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

D
V211, 31 '1/98
N98 51.2

219096

| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.